# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன மானுட வாழ்வில் இலை.

மாலை-I கார்த்திகை—1924 காசு-8

OFFICE OF THE REGISTRAR 2 DEC 1924 MADRAS S.

## இந்தியர் வெளிநாடேறுதல்

பத்திராதிபர்



ண்டை நாளிலே, திரைகடல் கடந்தும், இருநிலம் நடந்தும், நெடுந்தொலை சென்று, நம்முன்னோர்கள், பலப்பல நாடுகளிலும் தீவுகளிலும் குடியேறி வாழ்ந்து வந்தனர். இன்றுமே ஆங்காங்கு சிதைவுண்டு காணும் கோயில் தூபங்களும், வழங்கும் சொற்கள் பெயர்கள் நூல்கள் கதைகளும், பழக்க வழக்கங்களும், நமது பழைய நூல்களுமே, இதை நன்கு துலக்கா நிற்கும். மேல் நாடுகளிலும் நம் நாட்டிலும் பழைய விஷயங்களை ஆராய்ந்துவரும் அறிவாளர் பலர், இந்தியரின் பண்டைச் சீரையும் சிறப்பையும்பற்றிப் புதிதுபுதிதாகக் கண்டுபிடித்துக்கூறும் கூற்றுக்கள் இன்னும் முடிவு பெறாது, வளர்பிறைபோல நாளுக்கு நாள் வளர்ந்தேறி வருகின்றன. கிரிஸ்து பிறக்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கிரேக்கரோடும் ரோமரோடும் நம்முன்னோர் வியாபாரம் செய்துவந்ததும்; ஜாவா சுமாத்ரா முதலிய தீவுகளில் சென்று குடியேறி, கி. பி. 15வது நூற்றாண்டு வரை அவற்றில் சிலவற்றை இந்தியர் ஆண்டுவந்ததும், பலர் அறிந்த சரித்திர சம்பவங்கள். இவையன்றி, இக்காலத்து ஆராய்ச்சிக்காரர் சிலர், ஆதி இந்தியர் அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோ முதலிய தேசங்களுக்குச்

சென்றிருந்தன ரென்றும்; பூர்விக ஜெர்மனியை வியாபித்து விளங்கின ரென்றும்; அஸிரியா துருக்கிஸ்தானம் முதலிய பிரதேசங்களில் பிராபல்யம் பெற்றிலங்கின ரென்றும்; ஆதி யூதர்களில் ஒரு வகுப்பினர் இந்தியப் பிராமணரே என்றும்; ஏசு கிறிஸ்து பேசினது தமிழே, அவர் தமிழரே என்றுங்கூடக் கூறுகின்றனர். இதனால், ஏறத்தாழ இரண்டாயிரம் வருஷங்களாக, இந்தியர், தம் நாடு விட்டுப் பிறநாடுகள் சென்று, பலதுறைகளில் சீரும் சிறப்பும் வாய்ந்து விளங்கினர் என்பது தெளிவாகும்.

இவ்வண்ணம் இந்தியர் வெளியேறியதன் இலக்ஷியங்களை ஆராயுங்கால், அவை முக்கியமாய் மூன்றென்பது தெரியவரும்: ஒன்று, ஹிந்து புத்த ஜைன மதங்களைப் பிரசாரம் செய்து, ஆரிய நாகரிகத்தைப் பரப்புதல்; இரண்டு, வியாபாரம்; மூன்று, ஜாவாவிற்போல, ஆதிக்கம் பெற்று அரசுபுரிதல். கிழக்கே சீனமுதல் மேற்கே மெக்ஸிகோ வரை, வடக்கே உத்தர துருவமுதல் தெற்கேயுள்ள சாவகம் பரணி சாளவ சுமித்ர தீவங்கள் வரை, இம்மூன்று குறிக்கோள்களுடன் இந்தியர் சஞ்சரித்ததுண்டு. ஆயின், இவ்வியாபகம் நிகழ்ந்த ஈராயிரத்துக்குக் குறையாத ஆண்டுகளிலே, என்றேனும், எங்கேனும், வயிற்றுப்பிழைப்புக் கின்றிக் கேவலம் கூழுக்காகக் கூலி வேலைசெய்யச் சென்று, அடிமைகளைப்போல, நம் முன்னோர்கள் தன்மானம் கெட்டுப் பாடுபட்டதாகத் தெரிந்திலது. இந்தப்பேரும் பெருமையும், இந்நாளாகும் நம் நாளுக்கே சிறப்பாக விளங்குவன. இது நிற்க:

பசித்தவன் பழங்கணக்குப் பார்க்கும் கதையாக, பண்டைச் சீரைப்பற்றி இன்று பேசுவதில் பயனில்லை. அன்றியும், பிறநாட்டுக்குடியேற்றமும் வியாபகமும் எக்காரணத்தினால் முதலில் முறிபட்ட போதினும், முற்காலத்து நம்மவரில் சிலரையும் தற்காலத்துப் பிறநாட்டார் பலரையும் போல, அந்நியநாடுகளை அடக்கியாள வேண்டுமென்ற ஆசை, இந்நாளில் வாழும் இந்தியராகிய நமக்குச் சிறிதுமே இல்லை. நமக்குச் சொந்தமான, நமது தாய் நாடான இந்தியாவில்தானே பிறர் ஆக்கினைக்குட்பட்டு, [illegible]செய்யும் சேவகராகி நாம் பிழைக்கின்றோமே [illegible] மனவேக்கத்தாலும்; 'திராக்ஷை புளிக்கும்' என்னும் [illegible]யாலாகாத பலவீனத்தாலும் மட்



டும், இந்தத் திருப்தி நமக்குண்டானதன்று. 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்னும் மனவிசாலப் பெருநோக்கத்தாலும்; மனத்திலே நிறைவும் அமைதியும் நிலைத்த சுகமும், கேவலம் செல்வம் செல்வாக்கு அதிகாரம் இவற்றினால் மட்டும் விளைவனவல்ல என்னும் தெள்ளறிவினாலும்கூட, ஏற்பட்ட அடக்கமே அது. ஈகையே அறம், ஈகையே புகழ், ஈகை இயையா விடத்துச் சாதலே இனிது எனக் கொண்டொழுகிய நம்முன்னோர், திரைகடலோடித் திரவியம் தேடியது, இல்லாதவர்க்கு ஈத்துவக்கும் இன்பத்தை அநுபவித்தற் பொருட்டேயன்றி, சகடக்கால் போலவரும் செல்வத்தையேனும், அதிகார இறுமாப்பையேனும், ஒரு பொருளாக மதித்தல்ல. பலவளம் பொங்கிப் பணம் ததும்பி வழிந்து, இந்தியாவைப் 'பொன் காய்க்குமரம்' என்று பிறர் கொண்டாடிய காலத்திலும், ஈதற்பொருட்டே இந்தியச் செல்வர் பலர் மேன்மேலும் ஐசுவரியத்தை அவாவினர். இயற்கையில் இவ்வளவு தியாக புத்தியுடையோரின் சந்ததியாராகும் நாம், பிறர் சொத்துக்கு ஆசைப்படாது, உள்ளதுகொண்டு மனம் நிறைவது வியப்பன்றே?

சுதேச மன்னர்களின் ஆட்சி நீங்கி, இந்தியாவானது முதலில் முஸ்லிம்களுக்கும், பிறகு ஐரோப்பியருக்கும் கீழான காலம் தொட்டு, இந்தியரின் வெளியேற்றமும் வியாபகமும் தொலைந்துபோயிற் றென்னலாம். அதன் பின் பலதலைமுறைகளாகப், பிறநாட்டார் ஆட்சிக்குட்பட்டுத் தம் நாட்டிலேயே இந்தியர் வாழ்ந்து வந்தனர். அக்காலத்திலே, இத்தேசம், மிகப்பல முறைகள் மிகப்பல துறைகளில் கொள்ளைகளுக்கும் பொருள் நஷ்டத்துக்கும் உள்ளாயிற்று. இதனால், அந்நியர் நாட்டை அடக்கியாள வேண்டும் என்ற பேராசைமட்டுமன்றி, பிறநாடேகிச்செய்யும் வாணிக முயற்சியும் மதப்பிரசார நாகரிகப் பிரசார ஊக்கமும் குன்றி, ஒழிந்துபோயின. இம்மட்டோ? உலகத்துக்கெல்லாம் ஒரு காமதேனுவும் கற்பகவிருக்ஷமும் போல விளங்கிவந்த இம்மாபெரும் தேசத்தின் செல்வ ஊற்றுக்கள், தலைமுறைக்குத் தலைமுறை, நாளுக்கு நாள் அடைபட்டு, ஜீவாதார மூலங்கள் வறண்டு, ஜீவசக்தியே குன்றிப்போய், பஞ்சங்களும் பாழ்நோய்களும் மிஞ்சி மேலிட்டு, வயிற்றுக்குக் கால்கஞ்சியும் காணாது தவிக்கும் ஏழைக்குடிகள், வேறு தஞ்சமின்றிக் கூலிவேலை தேடி

வெளிநாடேறத் தலைப்பட்டனர். இதுவே இப்பொழுதுள்ள நம் நிலைமையும், அதன் ஏதுக்களுமாம். *

சுவாதீனத்தை இழந்து நம்நாடு இவ்வண்ணம் க்ஷீணித்துவரும் காலத்திலே தான், பிறதேசங்கள், காட்டுமிராண்டித் தனத்தைக் கடந்து, நாகரிகத்தை எட்டிப் பிடித்துப், பல வளம் பெருகத் தொடங்கலாயின. ஐரோப்பாவிலே இவ்வாறுண்டான புது நாகரிக இயக்கத்தாலும், பணவாசையாலும் தூண்டப்பட்டு, மரக்கலமேறி, எங்கே என்ன அகப்படும் என்று ஆலாப்பறப்பதுபோல இரைதேடிச்சென்ற வெள்ளை வீரர்களே, சிலர் அமெரிக்காவைக்கண்டு கைப்பற்றினர்; சிலர் இந்தியாவில் வந்து கரையேறினர்; சிலர் ஆபிரிக்காவில் ஆங்காங்கு வரைகோலினர். அக்காலத்து ஐரோப்பிய வீரர்கள், புதிதுபுதிதாகத் தாம் சென்றுகண்ட மாபெருங் கண்டங்களிலும் தேசங்களிலும்தம்கொடிகளை நாட்டி, எனக்கு உனக்கெனத் தம்முள் பங்கிட்டுக்கொண்ட விந்தையை, சிறு குழந்தைகள் தம் விளையாட்டில், 'இதுவரை உனக்கு' 'இது முதல் எனக்'கென வீதியையோ ஊரையேயோ பகிர்ந்துகொள்ளும் விநோதத்துக்கே ஒப்பிடலாகும். அவர்கள் வளைகோலிக்கொண்ட பிரதேசங்கள், ஐரோப்பாவிலுள்ள தத்தம் ஜன்மபூமிகளைவிட எத்தனை மடங்கோ பெரியனவாயிருப்பினும் என்ன? "ஆசைக்கோரளவில்லை" என்பது மெய்யன்றோ?

மேலையர் இங்ஙனம் கைப்பற்றிய பிரதேசங்களில், இந்தியாவொன்றைத் தவிர மற்றெல்லா நாடுகளிலும் வாழ்ந்துவந்த பூர்விக சுதேசிகள், பெரும்பாலும் காட்டுமிராண்டிகளாகவும், நரமாமிச பக்ஷிணிகளாகவு மிருந்தபடியால், அவர்களுடைய க்ஷேமத்தையோ சுதந்தரங்களையோ கவனிப்பது அனாவசியமாக எண்ணப்பட்டது. எனவே, அவர்களை அடிமைகளாக்கி, வேண்டிய பிரதேசங்களுக்குக்கெல்லாம்கொண்டுபோய், ஆடுமாடுகளிலும் கீழாக விற்பனைசெய்து, கசையடியாலும் பலவிதச் சித்திரவதைகளாலும் அவர்களை வதைத்து, அவர்களால் தங்களுக்கு வேண்டிய கடினவேலைகளையும் பணிவிடைகளையும் செய்துகொண்டனர். இந்த அடிமை வியாபாரத்தில்

* இங்க்லீஷ் அறிந்தவர், இந்தியாவின் வறுமையைப்பற்றித் தாதாபாய் நௌரோஜியும், உவில்யம் டிக்பியும் எழுதியுள்ள நூல்களையும், அம்மொழி அறியாத தமிழர், ஸ்ரீ.கிருஷ்ணஸ்வாமி சர்மாவின் "இந்தியா இழந்த தனம்" என்னும் நூலையும் நோக்குக.



ஐரோப்பியர் செய்திருக்கும் அக்கிரமங்களையும் குரூரங்களையும் நினைத்துப்பார்த்தால், அம்மம்ம! இவர்களும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்தானோ என்னும் சந்தேகமுண்டாகும். ஐரோப்பியாது அழிம்புகளாலும் கொடுமைகளாலும், ஆபிரிக்க அமெரிக்கப் பூர்வ குடிகளில் எத்தனையோ ஜாதியார், விருந்துக்கொருவன்கூட இன்றி, வேரோடு நசித்துப்போயினர்; இரத்தக் கண்ணீர் வடித்து மாண்டவரோ, கணக்கிலர் என்கலாம். பிறகு, நெடுநாளையப் பிரயத்தனம் போராட்டங்களுக்குப் பின், அடிமை வியாபாரம் ஒருவாறு தொலைந்தது. அக்காரணத்தாலும், நீக்ரவர் முதலிய பூர்விகர்களின் தொகை மிகக் குன்றிவிட்டதாலும், சிலசில வேலைகளை நன்கு செய்துமுடிக்கும் திறமை அவர்களுக்கில்லாமையாலும், ஆகாசக் கோட்டை கட்டுவதுபோல மிகவிசாலமான பிராந்தியங்களை வளைகோலிக் கொண்டிருந்த மிகச்சிலரான ஐரோப்பியர்களுக்கு, அவரது குடியேற்ற நாடுகளை விருத்திசெய்து பயன்பெறச்செய்ய, உதவி வேண்டியிருந்தது. அச்சமயமும், இந்தியர் கைப்பொருளிழந்து வறுமையுற்றுத் தவிக்கும் சமயமும் ஒத்துப்போகவே, நம்மவர் பலர் அந்நாடுகளுக்குச்செல்வாராயினர். நம் நாட்டின் துர் அதிர்ஷ்டம், மிகச்சிலரே வியாபாரிகளாகவும், பெரும்பாலார் பலவகைக் கூலியாட்களாயுமே சென்றனர். இதனிடையில், இந்தியா முழுமையும் இங்கிலீஷ்காரர் கைவசமாகிவிடவே, இங்குள்ள துரைத்தனத்தார், பிறநாடுகளில் குடியேறியுள்ள தம் இனத்தார்க்கு வேண்டியன செய்ய மனமுகந்து, இந்தியக்குடிகளை அந்நாடுகளுக்குக் கூலிகளாக அனுப்ப உதவிசெய்ய லாயினர். துரைத்தனத்தாரும் இசைந்து தலையிடவே, ஒப்பந்தச் சட்டங்களும், நிபந்தனைகளும், தண்டனைகளும் ஏற்பட்டு விட்டன. தம்முடைய கொடிய வறுமையும், மேல் சாதியா ரென்பார் கீழ்சாதிகளை நடத்தும் கொடுமையும், ஆட் சேர்க்கும் கண்காணிகளின் பெரும்புளுகுகளும், அரசாங்கத்தாரின் ஆத்திரமும், எல்லாம் ஒரு வழியே தூண்ட, பல்லாயிரம் ஏழை இந்தியர், ஆண்டுதோறும் தாய்நாடுவிட்டு மேய்புலம் நோக்கி வெளியேறுவாராயினர்.

தான் மேலேறுவதற்கு இன்றியமையாத கருவியாகி உதவிசெய்த ஏணியை, மேலேறியான பின்பு, அவமதித்து உதைத்துத் தள்ளுவது, செய்ந்நன்றி கொல்லும் கீழ்மக்களது சுபாவமாகும். இந்தியரின் உதவியைக்கொண்டு

தாம் குடியேறிய காடுகளை நாடுகளாக்கி, வளம்பொழியச் செய்து, நாகரிக சுகசௌகரியங்களை யெல்லாம் அமைத்துக்கொண்டு, தனிகர்களாய் விளங்கும் மேலையர் நடத்தையும், இவ்வாறே யாயிற்று. முதலில் இந்தியரைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கித் தம் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டனர்; பிறகு அவர்களைப் பலவிதங்களில் இமிசித்து, மிருகங்களினும் கீழாக நடத்திப் பகைத்து, வெளியே விரட்டத் தொடங்கினர். இந்தியர், என்றும் கூலிகளாகவே இருந்து, தமது வெள்ளை யஜமானர் காலா லிட்ட வேலையைத் தலையால் ஏற்று, அவர் உட்படுத்தும் அவமானங்களுக் கெல்லாம் வாய்பேசா திருப்பின், அவர்களுக்குச் சம்மதமே. ஆனால், இந்தியர் பாடுபட்டு, வயிற்றை யிறுக்கிக்கட்டி இரண்டு காசு மீத்து, கூலி ஒப்பந்தக்காலம் கழிந்தவுடன் சுதந்தரராகித், தாமாகவே பயிரோ வியாபாரமோ மற்றெந்தத் தொழிலோ செய்யத் தொடங்கிவிட்டால், இவ்விதம் தம்முடன் வாழ்க்கைப் போரில் போட்டி போடுவதைச் சகியாதவராய், இந்தியரை இமிசிக்கலாயினர். நாளாவட்டத்தில், அக்குடியேற்ற நாடுகளெல்லாம் ஆதிக்குடிகளாகிய ஆபிரிக்கருக்குமில்லை, காட்டை நாடாக்கிய இந்தியருக்குமில்லை, இருவருக்கும் யஜமானரா யிலங்கிய ஒரு சில மேலையருக்கே என்னும் அநியாயமே நியாயமாகிப், பலராலும் பறையறையப்பட்டு, அதுவே அரசாங்கத்தின் அடிப்படையாகி விட்டது. ஒரு விகடகவி, குழந்தைகளிடம்: "நான் உமி கொண்டுவருகிறேன்; நீ கடலை கொண்டுவா; நான் கலக்கிறேன்; நீ ஊது; நான் தின்கிறேன்" என்று வேடிக்கையாய்ச் சொல்வதுண்டு. மேலையர்க்கும் இந்தியர் ஆபிரிக்கருக்கும் வேலை விபாகமும், விளைபயன்களைப் பங்கிட்டு அநுபவிக்கும் நியாயமும், அவ்வண்ணமே ஆயிற்று. பாடுபடுவோரும் வரிப்பணம் அதிகம் கொடுப்போரும் இவர்கள்; அதிகாரஞ்செய்து ஆள்வோரும் பலனை அநுபவிப்போரும் அவர்கள்!

இத்தகைய அநியாயங்களை நீக்கும்பொருட்டு, மகாத்மா காந்தி தென் ஆபிரிக்காவிலே தங்கிப் பல ஆண்டுகளாகச் செய்த சத்தியாக்ரகப் போராட்டமும், பல முறை சிறையிருந்து பட்ட கஷ்டங்களும், அவர் தலைமையின்கீழ் ஆங்குள்ள தமிழ் மக்களும் பிறரும் தன் மானத்தின் பொருட்டும் நியாயத்தின் பொருட்டும் சிறை சென்றும் உயிரையே கொடுத்தும் செய்த வீரச்செயல்களும், என்றும் அழியாப் புகழை இந்தியர்க்கு அளிக்கும் சரித்திர வரலாறுகளாம்; அவற்றை இங்கெடுத்துக்கூறின் விரியும். இக்கஷ்டங்களும் அநியாயங்களும் இன்னும் விடிந்தபாடில்லை என்பதை, சென்ற வாரத்திலே பிரிட்டிஷ் கயானாவிலிருந்து வந்து சென்னையிலிறங்கிய ஒருவர், 'இக்குடியேற்ற நாடுகளுக்கு இந்தியரை அனுப்புவதை விட, அவர்களை நெருப்பிலேனும் கடலிலேனும் தள்ளி விடலாம்' என்று சொன்ன சொல்லே விளக்கும். குடியேறியுள்ள ஐரோப்பியரே சுயாதீனம் பெற்றுத் துரைத்தனத்தை நடத்தும் கானடா, ஆஸ்திரேலியா, நேட்டால், டிரான்ஸ்வால் முதலிய குடியேற்ற நாடுகளாகுக; இன்னும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக் குட்பட்டதும், நம்மையாளும் பிரிட்டிஷ் காபினட் என்னும் மந்திரசபையாலே ஆளப்பட்டுவருவதும், மேலையருக்கு முன் மிகப்பல இந்தியரே வியாபாரிகளாகவும் உத்தியோகஸ்தராகவும் ரயில் வேலைக்காரராகவும் குடியேறிப் பெரும்பாலும் இந்தியரே முன்னுக்குக் கொண்டுவந்த பின்பே மேலையர்கள் வந்து பறித்துக்கொண்டதுமான கெநியாவைப்போன்ற தற்சுதந்தரமில்லா நாடுகளாகுக; எல்லா இடத்திலுமே, குடியேறிய இந்தியமக்களின் அடிமைத்தனமும் மானக்கேடும் கஷ்டங்களும் ஒன்றுபோலவே இருக்கின்றன. துக்ககரமான இந்த நிலைமையிலே, இனி நாம் செய்யவேண்டியது, செய்யக்கூடியது என்ன என்பதைக் கவனிப்போம்.

(தொடரும்.)



# நமக்குள்

ஒரு கருமயோகி எழுதியது.

## சங்கல்பம்.

"நமக்குள்" என்று நான் எழுதும் இது, எனக்கும் உனக்கும் மட்டுமே; இதை எழுதும் என்னுடைய மனம், நேராக, ஒளிவு மறைவின்றி, இதை வாசிக்கும்

உன்னுடைய மனதுக்குச் சொல்வது. தனித்திருக்கும் பொழுதுமே, உனக்குமட்டுமேகூட, இதை நீ இரைந்து வாசித்துக் கொள்வது தகாது; ஏனெனில், அப்பொழுது, உன்மனதுக்கென்றே சொன்னதை உன்காதும் கேட்டுவிடும். அதனால், என் மனத்துக்கும் உன் மனத்துக்கும் இருக்கவேண்டிய அந்தரங்க அந்யோந்ய விசுவாசம் அழிந்துவிடும். எனவே, யாராயிருந்தாலுமே, ஒருவர் பிறருக்கு இதை வாசித்தல் தகாது என்பது, தானே விளங்கும். ஒவ்வொருவனும் தனக்குத்தானே, தனக்குள் தானே, பிறருடன் கலவாமல், படித்துச் சிந்திக்க வேண்டியது இது.

ஒரு பெண்ணினிடத்தில் ஓர் ஆண் மகன் அநுபவிக்கும் இன்பத்தினை, "எண்ணி நோக்கி" ஒருவன் பிறருக்கு எடுத்துரைக்க முடியாதென்று கம்பர் கூறியிருக்கிறார். இதுவும் அப்படிப்பட்ட நுண்ணிய விஷயமென்று கருதி, 'நமக்குள் மட்டுமே' என்று இதைக் கூறவில்லை. அப்படிப்பட்டதாயின், நான்தான் உனக்கு எப்படி எடுத்துரைக்கக் கூடும்? வாய்ப்பேச்சுக்கும் சிந்தனைக்கும் வித்தியாசமுண்டு. சில எண்ணங்களை எடுத்தோத முடியாது; சொற்கள் குறிக்கும் வெளிப்படையான பொருளில் அடங்கமாட்டா. ஒரு மனத்திலுள்ளதைப் பிறிதொரு மனத்துக்கு மொழிகள் மூலமாகவே சாதாரணமாய்த் தெரிவிக்க வேண்டுமெனினும், வாங்கிக்கொள்ளும் மனம், அச்சொற்களைத் தனக்குள்ளேயே ஆர அமரச் சிந்தித்துப் பார்த்து, அவற்றின் ஒலிப்பொருளை மட்டுமன்றி, உள்ளுறை கருப்பொருளையும்கண்டுணரவேண்டும். இதுவன்றி, உள்ளத்தின் உள்ளாழத்திலே அரைகுறையாக உதிக்கும் எண்ணங்கள் சில, எண்ணுவோனுக்கே உருப்பட்டு விளங்காது மறையும். அவற்றையும் இங்கே உருப்படுத்திச் சொற்களில் புனைந்தோதுவேன். கூச்சம், பயம், வெட்கம், முதலிய ஏதுக்களால் இவற்றைப் பிறர் அறிய உரத்துக்கூறுவது பொருந்தாது. இக்காரணங்களினால்தான், இதை வாசிக்கும் ஒவ்வொருவரையும், தனக்குள் தானே வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன்.

இந்நூலைப் பலர் வாசியார் என்பது எனக்குத் தெரியும். அதிக யோசனையில்லாமல், "எய்தின் எய்தியதாக" வாழ்நாள்களைக் கழிப்பதே, உலகத்திலே மிகப் பலர் செய்வது. "பின்னால் என்னவிந்தை வருகிறது?"



என்றறியும் ஆசையுடன் மட்டும், மேலே சென்ற சிலவாசகங்களை இதுவரையில் பொறுமையோடு படித்தோருங்கூட, "இவர் ஏதோ வேதாந்தம் பேச வருகிறார்!" என்ற அலுப்புடன், இப்பக்கங்களைத் தள்ளிவிடலாம். இதுவரை வாசித்தோரில் பலர் அப்படியே செய்வார் என்பது உறுதி. அதனால் எனக்கு மனவருத்தமில்லை; அன்னோருக்கன்று இதை நான் எழுதுவது; எனினும், என் விஷயம் வேதாந்தம் அன்று; உலக அநுபவ சித்தாந்தமே. ஆனால், 'நானும் உலகத்தில் வாழவில்லையா? எனக்கும் அநுபவமில்லையா? நீ என்ன புதிதாகச் சொல்லப் போகிறாய்?' என்று கேட்கலாம். நான் சொல்லப்போவது புதிதன்று; ஆயினும் புதிதே. உலகத்திலேயுள்ள பல பாஷைகளிலும் வழங்கும் லக்ஷக்கணக்கான நூல்களிலே, மிகமிகச் சிலவே, அநுபவ சித்தாந்தங்களை, உள்ளதை உள்ளபடி, ஒளியாது கூறுகின்றன. அதனால், மனிதர்க்குப் பொதுவானவும், நம் நாட்டுக்கே உரியனவுமான சித்தாந்தங்கள் பல, இதுவரை நூலுருவாக எழுதப்படவில்லை. அவற்றில் சிலவற்றை நான் கூறும்போது, அநுபவங்கள் புதியனவாயிராவிடினும், அவற்றினால் கிடைத்த சித்தாந்தங்களை வெளிப்படையாய் எழுதுவது புதிதேயாகும். உலக வாழ்க்கையை ஒரு பெரும்பேறாக மதித்து, "எய்தின் எய்தியதாக" அதைக்கழிய விடாது, தானாக யோசித்தமைத்த வழியிலேயே அது நிகழ வேண்டுமென்னும் அக்கறையும் பிடிவாதமுமுள்ள மிகச்சிலரே, இதை வாசிக்க விரும்புவர். இன்னார் பொருட்டே நானும் இதை எழுதுகிறேன்.

அணுவிலும் அண்டமுழுதும் அடங்கி அமைந்திருப்பது மெய்யே. ஒவ்வொருவன் அநுபவமும் உலக அநுபவமேயாகும். கரும்பு பனைவெல்லம் லட்டு உக்காரி யாவற்றிலும் சருக்கரைச் சத்தையே காணவல்லார்க்கு, இவ்வுண்மை எளிதில் விளங்கும். என் சுயாநுபவத்தையும் நான் ஊகித்தறிந்தவற்றையுங் கொண்டே இதை எழுதப்போகிறேன். வேறு வழியேது? இதனை வாசிப்போர், தத்தம் அநுபவங்களோடு ஒப்புநோக்கி, பொதுப் பொருத்தமான உண்மைகளைத் தெளிந்து கொள்வாராக.

நான் சொல்வதை ஒன்பது தலைப்புக்களில் அடக்கிக் கூறுவேன். அவை தாம் (க) தான் (உ) தாய் தந்தையர் (ங) மனைவி (ச) மக்கள் (ரு) உறவினர் (சு) இனத்

தார் (எ) ஊரார் (அ) உலகத்தார் (கூ) கடவுள், என்பனவாம். இவற்றுள் சில, ஒன்றோடொன்று தொடர்புள்ளன, வரையறுத்துப் பிரிக்கமுடியாதன என்பது தெளிவு. இதனால், சில உரைகளைப்பற்றித், 'இத்தலைப்பைவிட அத்தலைப்புக்கு மிகப்பொருந்தும்' என்னும் அபிப்பிராய பேதம் உண்டாகவே செய்யும். சில கூற்றுக்களை ஓரிடத்து மட்டுமன்றி, மற்றிடத்தில் கூறவும் நேரலாம். அதனாலென்? அறிவுப் பெருக்கையே நாடுவார், இவற்றைப் பெருங்குற்றங்களாக நினையார்; நினைப்பினும் பொறுத்துக்கொள்வர். இந்நிமித்தம் நான் கவலைப்படவில்லை. இந்நூல் மிகச்சிலர்க்கேனும் பயன்படவேண்டுமென்பதே என் ஒரு கவலை. ஒருவற்கேனும் இது பயன்படின் என் எண்ணம் நிறைவேறி, அதையுமே எனக்குப் போதிய 'கைம்மாறாகக் கருதி அகமகிழ்வேன்.

(தொடரும்.)

# குழந்தைகள்

சிவி. மா. பாமணி, சென்னை.




லகப்பற்றுக்கள் எல்லாவற்றிலும் மக்கட்பற்று மிகப்பெரிது. அதை விடுவது, செல்வம், கீர்த்தி முதலிய மோகப் பொருள்களில் பற்றிழந்தவர்க்கும் அரிய செயலாகும். குழந்தைகள், சூரிய வொளியைப்போல் எங்கும் களிப்பைப் பரப்பும் தேவதூதர்கள்; மனக்கவலையை நீக்கும் மருந்துகள்; தூய்மைக்கும் அன்புக்கும் உறைவிடமான பொற்களஞ்சியங்கள். குழந்தையின் சிரிப்பைப் போல் உற்சாகம் ஊட்டுவது வேறில்லை; முகச் சுளிப்பைப் போக்குவது வேறில்லை. குழந்தைப் பருவமே ஓர்



இன்பக் கனவு. முதுமையில் அப் பருவத்தை நோக்கி நோக்கி ஏங்காத மனிதர் இல்லை யென்றே கூறலாம்.

சமயங்கள் யாவும் இப் பருவத்தைச் சிலாகித்துக் கூறுகின்றன. ஏசுகிறிஸ்து: "இக் குழந்தையைப்போல் நீங்களும் ஆனாலன்றி, சுவர்க்க சாம்ராஜ்யத்தை அடைய மாட்டீர்கள்!" என்று, குழந்தைப் பருவ மன நிலையின் மேன்மையைப் பாராட்டி யுரைத்தார். மக்கட் பேறில்லார் நரகவேதனையைப் பெறுவர் என்று நம் முன்னோர் விதித்ததே, ஹிந்துமதத்தினர் குழந்தைப்பருவத்தின் சிறப்பை நன்குணர்ந்திருந்தனர் என்பதை விளக்கும். குழந்தை ஜனித்தல் பற்றியன்றோ விவாகம் புனிதம் பெறுகின்றது? "ஆண்டவன் தன் வடிவில் மக்களைச் சிருஷ்டித்தான்" என்பது பொய்யெனக் கூறின், விவாகத்தின் உட்கருத்தே அழிந்து போய், அது, கேவலம் இன்ப நிமித்தம் புரியும் இழிந்த செயலாகிவிடும்.

ஓர் ஆங்கில கவி, 'பிறப்பதற்குமுன் நாம் சுவர்க்கத்தில் கழித்த இன்பநிலையின் தொடர்ச்சியே குழந்தைப் பருவம்' என்று கூறுகிறார். 'தெய்வீக ஒளி நம்மைச்சுற்றி இளமையில் வீசுகிறது. சர்வஞானமும் குழந்தையில் அடங்கியுளது. குழந்தைகளை நாம் வணங்குதல் பொருந்தும். ஒரு குழந்தையின் சரீரம் மிகச் சிறிதெனினும், அதன் ஆத்மா பெரியவர்களின் ஆத்மாவைவிடத் தெய்வத் தன்மை நிறைந்துள்ளது. காலம் செல்லச் செல்ல நாம் உலக மயக்கத்தில் ஆழ்ந்து விடுகிறோம்; நம்முடைய ஜனன அற்புதத்தை மறந்துவிடுகிறோம்; பல் வேறு துறைகளில் பிரவிர்த்திக்கிறோம்; பிறகு மாண்டுபோகிறோம்.' என்றும் பாடியிருக்கிறார்.

குழந்தைப் பருவச் சிறப்பினைக் கூறும் அரிய பாக்களும் அற்புத நூல்களும் தமிழ் மொழியில் மலிந்து கிடக்கின்றன. "பிள்ளைத் தமிழ்" என்று பாலப் பருவ லீலைகளை வருணிக்கும் நூல்வகை ஒன்று நமதிலக்கியத்தில் இருப்பதே இதற்குத் தகுந்த சான்றாகும். கிருஷ்ணனது செயல்களை திவ்யப்பிரபந்தத்தில் வருணித்திருப்பது போல, வேறெந்த மொழியில் குழந்தைப் பருவத்தைப் பற்றிய அதிசயக் கற்பனைகளைக் காணலாகும்? இந்த வியாசத்திலே குழந்தைகளைச் சிறப்பித்துக் கூறும் சிலப் பாக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன்,

"குழலினிது யாழினி தென்ப,தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்"

என்னும் நாயனார் வாக்கை யாவரும் அறிந்திருப்பர் எனினும், "நவில் தொறும் நூல் நயம்" கெடுவதில்லை யாதலின், அச்செய்யுளின் கருத்தழகு படிக்கப் படிக்க நவீன மாகவே தோற்றும்.

"தொடர்ந்த மும்மல முருக்கிவெம் பவக்கடல் தொலையக்
கடந்து ளோர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்?"

என்று, குழந்தைகளின் மேலுள்ள அன்பின் வலிமையை வற்புறுத்தி, நைடதத்தில் கூறி யிருக்கிறது. நளவெண்பாவிலும் :—

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக் கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களை இங்கில்லாதவர்?"

என்று, மக்கட்பேற்றின் அருமை பெருமைகளை விளக்கி யிருக்கின்றது.

திருமொழியிலே பாலகிருஷ்ணனைக் குளிப்பாட்டும் காட்சியின் அழகை வருணிக்கும் செய்யுள், ஒரு நாளும் கேட்டவர் நினைவை விட்டகலாது :—

"நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்,
நாக்கு வழித்து நீராட்டும் இந் நம்பிக்கு,
வாக்கும் நயநமும் வாயும் முறுவலும்,
மூக்கும் இருந்தவா காணீரே;மொய் குழலீர்,வந்து காணீரே!"

வில்லி பாரதத்திலும் பாலகிருஷ்ணனை வருணிக்கும் மாசற்ற கவிகள் சிலவுள. ஒன்றிரண்டு கூறுகிறேன்:—

"தந்தம் உறியில் அவர்வைத்த தயிர்பால் வெண்ணெய் எட்டாமல்,
குந்திஉரலின் மிசையேறி, இளங்கோ வியர் முன் கூத்தாடி,
நந்தன் மனையில் யசோதை இரு நயநம்களிக்க விளையாடும்,
மைந்தன் இருதாள் ஒருநாளும் மறவா தாரே பிறவாதார்"

என்ற செய்யுளின் சந்தவினிமையை வியப்பதா? அல்லது,

"சேய பங்கயச் சிறுவிரல் அங்கையில் திரட்டிய நறுவெண்ணெய்,
ஆயர் மங்கையர் இடவிட அமுது செய் தாடிய திருக்கூத்தும்,
நேய மும்குறு முறுவலும் புரிந்து பார்த் தருளிய நெடுங்கண்ணும்,
மாயவன் திருவடிவமும், அழகும் என்மனத்தை விட்டகலாவே."

என்ற செய்யுளின் பொருள் நயத்தை வியப்பதா?

பிள்ளைத் தமிழென்பது, நூலின் நாயகனையோ நாயகியையோ குழந்தையாகப் பாவித்து, இலக்கிய விதிகளுக்



கேற்பச் சில பருவங்களை அமைத்துப் பாடுவது. மீனாக்ஷியம்மனை அவ்வாறு பாவித்துச் செய்த நூலில், குமர குருபரர், முத்தப் பருவத்தில், அழகு செறியப் பின்வருமாறு பாடியுள்ளார் :—

"தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொடையின் பயனே! நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே! அகந் தைக்கிழங்கை அகழ்ந்||தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே! வளர்சிமைய விமயப் பொருப்பில் விளையாடும் இளமென்பிடியே! எறி தரங்கம் || உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழ கொழுக எழுதப் பார்த்திருக்கும் உயிரோவியமே! மதுகரம் வாய்||மடுக்கும் குழற்காடேந்தும் இள வஞ்சிக்கொடியே! வருகவே, மலயத்துவசன் பெற்றபெரு வாழ்வே! வருக வருகவே!"

சிவப்பிரகாசர், பிரபுலிங்கலீலையிலே ஒரு பெண் குழந்தையின் வளர்ச்சியை அழகாக வருணித்திருக்கிறார். அப்பெண், பருவத்திற்கேற்ற வனப்பைப் பெற்றதாகச் சொல்லும் பொழுது:—

"பாகமாகப் பொங்கியெழும் பதமே போலப் பொங்கும் எழில்
மோகமாயை"

என்று, பலரும் அதிசயிக்கும் வாறு, ஏற்ற உவமையைக் கையாண்டிருக்கிறார். அப்பெண் பிறந்தகாலத்துத் தாயார் செய்த உபசாரங்களைப், பின் வரும் செய்யுள்களில், கவி, அழகுபடக் கூறியிருக்கிறார்:—

"மாயைப் பெயர்கொள் மகளை நறு மஞ்சள் திமிர்ந்து,கணைக்காலின்
எயக்கிடத்தி நீராட்டி, இணைக்கண் உந்தி நீர்ஊதி,
நேயத்துகிலின்மெய்துடைத்து,நெகிழ்மென்முலையோடுறத்தழுவி
வாயில் திவலை கொடு தேய்த்து, மண்பொட் டணிந்து, நீறிட்டு;

"போக்கும்பொருளால் கண்மிச்சல் போக்கி,அன்பால்முலையூட்டித்
தூக்கும் பவளக் காற்பசும்பொன் தொட்டின் மலியக் கிடத்தியே,
பார்க்கும் சுவைவா னமுதமே! பார்வேந்தணியே! என் துயரம்
தீர்க்கும் கரும்பே ! கண்மணியே ! திருவே ! என்று சீராட்டி ;

"மிடியன் ஒருசெய்யாளன் அச்செய்விளையக்காக்கும்செயல்போலக்
படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்றும் அது போல்
ஒடிவில் செங்கோல் மநுவேந்தன் உலகம் புரக்கு முறை போலக்
கொடியநோன்புசெய்தீன்றகொடியைவளர்த்தாள்மோகினியே."

முற்கூறிய பாக்களைப்போல், குழந்தைப் பருவச் சிறப்பைப்பற்றி, சொல்நயமும் பொருள்நயமும் ஒருங்கேயமைந்துள்ள பாக்கள் கணக்கற்றன வுள. நமது முன்னோர், இயற்கை அழகை அநுபவித்தனர். மக்களின்

மேன்மையை அறிந்தனர். இக்காலத்தில், சுப்பிரமணிய பாரதியார் எழுதியுள்ள "கண்ணன் பாட்டு" என்ற நூல் தவிர, குழந்தைப் பருவச் சிறப்பைக் கூறும் நூல் உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கும் படியாக விருக்கின்றது.

ஒரு பிரபுவை, ஓர் அரசன், உமது முக்கிய செல்வம் யாதென்று கேட்க, அவர் தமது முப்பத்திரண்டு மக்களை யும் அழைத்துக் காண்பித்தார் என்னும் பழங்கதை ஒன் றுண்டு.

"பெறும் அவற்றுள் யாமறிவ தில்லை, அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற." என்றார் பொய்யாமொழிப்புலவர்.

உண்மையில், சிறு குழந்தைகள்தான் வாழ்க்கையின் செல்வம்; மனத்திற்கு ஆறுதல்; கண்களுக்கு இன்பம்.

இக்காலத்திலோ, தாய்தந்தையர், ஐந்து வயதிலும் நான்கு வயதிலும் தமது குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பி, முகப் பொலிவையும் அகப் பொலிவையும் பாழாக்குகின்றனர். தம் மக்களின் இன்பக் கனவினுள் உபாத்தியாயர் பிரம்படி நினைப்பைப் புகுத்திவிடுகின்றனர்.

நண்பர்களே! இவ்வியாசத்தைப் படித்தபின், உமது குழந்தைகளை அழைத்து முத்தமிட்டுக்கொண்டு மகிழ்வீராக! குழந்தைகளே ஆண்டவன் பேருட் பிழம்புகள்!

# தாய்-மக்கள் சம்பாஷணை

அமுதகவி இயற்றியது.

(" ஆறுமுகவடிவேலவனே " என்னும் காவடிச்சிந்து மெட்டு)

## இந்திய மக்கள்

'வந்தே மாதரம்! வந்தே மாதரம்!'
என்றுனை வாழ்த்துதுமே—எங்கள்
இந்தியத் தாயே! உன் சொந்தக் குமரர்யாம்
உன் புகழ் ஏத்துதுமே! (1)



அம்மே! புந்தி தெளிந்தனம்: முன்னவர்
ஆதி முறைகளையே—இனி
எம்மையும் காத்திட ஏற்று, விலக்குவம்
ஈனக் குறைகளையே. (2)

ஆரியர் வேத புராணம், திராவிடர்
ஆகமம் ஆய்குவமே—பழஞ்
சீருறவே; பிற தேயத்து மாக்களின்
தீவழி ஒய்குவமே. (3)

## பாரத மாதா

வாழி என் மக்களே! உங்கள் மழலையைக்
கேட்டு மகிழ் மனமே—இனித்
தாழ்வின்றிக் காணத் தவித்திடும் வீரச்
சபதம் நிகழ் தினமே. (4)

பாதம் பணிகுவீர், பண்டைப் புகழ்களைப்
பாரதம் பாடிடுவீர்—முனம்
சாத ஹுற்றபழம் சாத்திரம் சூத்திரம்
சாற்றிட நாடிடுவீர்! (5)

பண்டையிலேபுகழ் கொண்டவர் பண்பை, நீர்
பாரில் அறியாரோ!—அவர்
கண்ட கண்டவழிக் கண்டகண்ட நலம்
கைக்கொள் குறியாரோ! (6)

'எங்கெது நன்மை விளைப்பது? எவ்வழி
ஏற்றமாம் செவ்வழியே?'—என
உங்கள் முனோர், இடம் காலம் எல்லாம் உணர்ந்(து)
ஊக்கினர் அவ்வழியே. (7)

அன்னவர் அன்றுகை யாண்டவை, மாண்டவை,
இன்றுநீர் ஆளுவிரேல்—மிகச்
சின்னவர் ஆடை முதியவர் போர்க்கும்
சிறுமதி மூளுவிரே! (8)

சாலவும் நீர்தடு மாறித் தளர்வினில்
சாய்ந்து துயின்றிடினே—விரை
காலமும் மேனுறல் இன்றிக் கவன்று
கருணையில் நின்றிடுமோ? (9)

பாரினில், கண்கள் திறந்துமைப் போலினி
யாருளரோ, பாரீர்!—பழஞ்
சீரும் சிறப்பும் இக் காலத் திழிவிற்குத்
தீவட்டியே தேரீர்! (10)

### இந்திய மக்கள்

தாயே! இந்தஉன் நன்மதிப் பொன்மொழி
தாழ்தலே தாங்குவமே !—இனி
நீயே எம்மை உகந்திட, நீள்புகழ்
நேர்வழி ஓங்குவமே! (11)

பத்தி யுளேம், மிகு புத்தியுளேம், தொகை
பற்பல கோடியுளேம்—வினை
உத்தம சித்தி யுறும் வழி, இன்று நீ
ஓதிடக் கூடியுளேம். (12)

ஆக்கம் படைத்திடும் ஊக்கமும் ஆசையும்
ஆரினும் மிக்குடையேம்;—சிறு
தூக்கம் தளர்வு தொலைந்தன; என்றுமே
சோர்ந்தினி நெக்குடையேம். (13)

### பாரத மாதா.

மக்களே! நீவிர் மகிழ்தரு வார்த்தைகள்
மிக்க தொனித்திடுவீர்—எனின்,
'சர்க்கரை' என்றே எழுதிய தாளினை
நக்க இனித்திடுமோ ? (14)

உங்களுக் குட்கல கங்கள் பொறாமைகள்
ஊழல்கள் ஓய்ந்தனவோ ?—காணும்
கண்கள் கலங்கி மனங்கலங்கி என(து)
ஆவியும் காய்ந்ததுவே! (15)

எத்தனை நாளினி இப்படி ஏங்கி
இரங்கித் தவித்திடு வேன் !—நீவிர்
உத்தமராயின், உம் புத்தியும் ஆண்மையும்
ஒத்துயர் வித்திடுமே. (16)

தாயெனத் தாழுவீர் : தாரணி மீதிழி
தாழ்வையே உற்றேனே !—வெறும்
பேயரில் பித்தரில் பேதையரில் கழி
பேடியர்ப் பெற்றேனே! (17)

'என்மனை', 'என்மகன்' 'என்பொருள்' என்றே
இதயங்கள் நொந்தோராய்—உயர்
தன்மம் கடமைகள் தன் மரியாதை
தவிர்பவர்த் தந்தேனே! (18)



'என்நலம்', 'என்குலம்', 'என் அதிகாரம்'
எனவே நயந்தோராய்—மிகச்
சின்ன மதியோ டடிமையிற் சீவிக்கும்
சிலர்ப் பயந்தேனே! (19)

முப்பது கோடியர், மூடரு மில்லை, என்
மக்கள் : இப்பாரினிலே—எவர்
இப்படி என்போல் எளியவ ராயிருந்(து)
ஏங்குவர், ஊரினிலே! (20)

### இந்திய மக்கள்.

தாயே! பொறுத்தருள் : நின்னடி ஆணை!
இனித்தலை தாழ்குவமேல்,—அடி
நாயேம், எக்காலமும் நன்மை யிழந்து
நரகினில் வீழ்குவமே! (21)

சாதி மதம் தொழில் ஆதிய பேதங்கள்,
தன்சுகம், தன்நலமே—இவை
யாதும் எமையினிப் பேதியா தாக்குவம்,
அன்னையே! உன்நலமே. (22)

சாகத் துணிந்தவ ருக்குச் சமுத்திரம்
தான்முழங் காலளவே—உயிர்
போகவரினும், சுதந்திரம் கொள்வம் ;
பொருள் அதன் மேலுளவே! (23)

வந்தே மாதரம்! வந்தே மாதரம்!
வந்தே மாதரமே !—இனி,
இந்தியத் தாயே ! இறைவனும் நீயுமே
எங்களுக் காதரமே! (24)

குசிகர் குட்டிக் கதைகள்

படிக்கப் படிக்கத் திகட்டாதன!
இடித்து இடித்துப் புத்திகூறுவன!
வெடிக்க வெடிக்கச் சிரிக்கச்செய்வன!

| | | | |
|---|---|---|---|
| முதல் எட்டுக்கதைகள் | 0 | 10 | 0 |
| இரண்டாம் ௸ | 0 | 10 | 0 |
| மூன்றும் பாகம் | 0 | 10 | 0 |
| 2-சேர்த்து வாங்கினால் | 1 | 0 | 0 |
| 3-ம் சேர்த்து வாங்கினால் | 1 | 8 | 0 |

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர் - சென்னை.

# வேளாளர் இயல்பு

ஸ்ரீலஸ்ரீ இலக்குமணப் போற்றிகள்
தச்சநல்லூர்

வேளாளர் யாவர்? வேளாளர் என்பவர் மனு தர்ம சாஸ்திரத்திற் கண்ட நான்கு வருணத்தவருள் ஒருவராவரா? அவரைச் சிலர் சூத்ரர் என்பர்; சிலர் சற்சூத்ரர் என்பர்; சிலர் வைசியர் என்பர். அவர் யாவர்?

மனுவானவர் ஜாதிவகுத்ததும் தொழில் பற்றியேயாகும். அறிவின் சம்பந்தம் மிகுதியும் வேண்டற்பாலதோர் தொழிலுக்கு உயர்வும், அது குறைவுற்ற தொழிலுக்குத் தாழ்வும் கற்பித்தனர். அத்தொடர்ச்சி பற்றியே அத்தொழிலாளிகளின் சந்ததிகள் அவ்வத்தொழிலைக் கைப்பற்றி வருவாராயினர். இந்தியருடைய ஜனசமூக நிலைமை அக்காலத்திலிருந்தமைக்குத் தக்கவாறு, ஜீவனத்தின் பொருட்டு அப்பாகுபாடு ஏற்பட்டதாகக் காணப்படுகின்றது. தமிழ் நாடு முதலிய மற்ற நாடுகளில் அவ்விதமான ஜாதி வகுப்பின்றியே அத்தொழில்கள் நடைபெற்று வந்துள்ளன. ஆதலால் மனுவின் ஜாதி வகுப்பானது எல்லா நாட்டினுக்கும் உரியதென்பது கொள்ளத்தக்கதன்று. அம் மனுவும் மன ஒழுக்கம் பற்றி இச் சாதிவேற்றுமை நாட்டவில்லையென்பதற்கு, அவருடைய ஸ்மிருதி 10-வது அதிகாரம் 63-வது சுலோகமே சான்று ஆகின்றது. அது வருமாறு:—"அஹிம்ஸா, ஸத்யம், அஸ்தேயம், சௌசம், இந்திரிய நிக்ரஹ: ஏதம் ஸாமாஸிகம் தர்மம் சாதுர்வர்ண்யே அப்ரவீத்மநு:" இதன் பொருள்: துன்பப்படுத்தாமை, ஸத்யம், களவு செய்யாமை, பரிசுத்தம், புலனடக்கல், இவைகள் நான்கு வருணத்தவருக்கும் பொதுவான தர்மம் என்று மனு





சொன்னார் என்பதாம். உண்மையான யோக்கியதையும் உயர்வும் மன ஒழுக்கத்தினால் உண்டாமேயன்றி ஜீவனத் தொழிலின் பெருமையால் உண்டாக மாட்டாதென்பது யாவரும் ஒப்பத்தக்கது. மிகுந்த கல்வித் தேர்ச்சியுறினும் மன ஒழுக்கத்திற் குறைவுற்ற ஓர் பிராமணன், கல்வித் தேர்ச்சியில்லாவிடினும் சித்த சுத்தியையுடைய ஓர் பஞ்சமனுக்கு நிகர் ஆகானென்பது துணிபு. பொருள் உணர்ச்சியின்றிப் புரியும் வேத அத்யயனமானது, ஒருவாறு ஞாபக சக்தியை விளைவிக்குமேயன்றி, வேறு யோக்கியதையை உண்டாக்கமாட்டாது. எழுத்தின் வரிவடிவும் அச்சியந்திரமும் இல்லாத காலத்தில், வேதத்தைப் பாதுகாப்பதற்கு மான்யங்கள் பெற்று, வேதத்தை அத்யயனம் செய்துவந்த அளவில் அவருக்குப் பெருமையேற்பட்டது. அம்மட்டில் அவர்கள் பூஜ்யரே ஆவர். ஆனால் ஆரியவேதத்தின் ஞானக் கருத்தானது உலகத்திலுள்ள மற்றெந்த பாஷையிலும் இல்லையென்பது தவறு; இன்று தமிழிலுள்ள திருவள்ளுவர் திருக்குறளையும், ஸோக்கிரேடிஸ் ஞானோபதேசங்களையும், பைபில் கொரான்களையும் ஆராயின், அவ்வுண்மை விளங்கும். கடவுள் சர்வவியாபகர் என்பதையும், எக்காலத்தும் எத்தேசத்தும் உண்மையான ஈசுவர பக்தர்களிருந்திருக்கின்றனரென்பதையும் ஒப்புக்கொள்ளுகிற அறிஞர்கள், ஆரிய வேதத்தின் கருத்தானது, அதனைக் கற்றுணராத ஏனைய ஜாதி ஜனங்களிடத்தில் இல்லையென்று கூறத்துணியார். ஆதலால் ஆரியவேதத்தைக் கற்றவர்களுக்குத்தான் உயர்வு என்றும், கல்லாதார்க்குத் தாழ்வு என்றும் எண்ணுதற்கு இடமின்று. வேதம் ஓதினோர் மற்றவரைத் தொடாததினாலும், மற்றவரோடு பந்திபோஜனம் செய்யாததினாலும் உயர்வு பெறலாமென நினைக்கில், அதுவும் பொருந்தாது. ஆரியர் சம்பந்தத்திற்கு முன்முதலே தமிழ்நாட்டில் சைவம் அசைவம் என இரண்டு ஜாதி ஏற்பட்டிருந்ததில், மாமிசம் புசியாதவர் சைவர் எனவும், மாமிசம் புசிப்பவர் அசைவர் எனவும் அழைக்கப்பட்டனர். வேதம் ஓதுதலினால் உயர்வுற்றதாகக் கருதிய பிராமண ஜாதியில், மீன் முதலியன தின்னும் கௌடர் முதலிய பிராமணரை, தமிழ் நாட்டுச் சைவர், தொடவாவது, அவருடன் சமபந்தியில் புசிக்கவாவது செய்யார் எனின், தொடுதலையும் பந்தி போஜனத்தையும் உயர்வு தாழ்வுக்குக் காரணமாகக் கருதக்கூடாது. அவ் வழக்கமானது மனோபீஷ்டத்தைப்

பொருத்தமே யன்றி, பாவ புண்ணியங்களுக்குக் காரண மாகாமையை உணர்க.

வாய்மை, ஈகை, இரவாமை, பெருந்தகைமை, இரக்கம், சாந்தம், முதலிய சற்குணங்களே உயர்வுற்ற பிராமணத் தன்மைக்கு உரிய இலக்கணமாம். அக்குணங்களில் தமிழ் நாட்டுச் சைவர் எவ்வாற்றானும் குறைவுற்றவர் ஆவரா? ஆகார் என்பதே தேற்றம். இத்தகைய சைவர் வகுப்பினைச் சேர்ந்தவர் வேளாளர் ஆவர். இவ் வேளாளரை, ஆரிய வேதத்திற்கு அருகரல்லராகக் கொண்ட ஆரிய சூத்திரரோடொப்ப, ஆரிய பிராமண ஜாதியார் மதிப்பது தகாது. இத்தமிழ் நாட்டு வேளாளரும், தம்மை சூத்திர ரென்றாவது, வைசிய ரென்றாவது கொண்டாட விரும்புவதும் தகாது. இவ்வேளாளர், தம்மைச் சைவராக அறிந்து, தம் இனத்தாருள் ஆசாரியம் ஏற்பட்ட வண்ணம் அவரைக் கொண்டே தமது கிரியைகளை நடப்பித்து, சிவ தீக்ஷைப்பேற்றையே உயர் ஜாதிக் குறியெனக் கொண்டொழுகில், இவருடைய ஜாதி மகிமையானது தானே விளங்குவதாகும். பிராமணர் முதல் பறையர் ஈறான பற்பல ஜாதிகளிலும் பிறப்புற்ற அறுபத்துமூன்று நாயன்மார், பன்னிரண்டு ஆழ்வார் முதலியோர், ஆலயங்களில் ஆராதிக்கப்பட்டு வருதலைக் கண்ணுற்று நின்ற இவ்வேளாளர், தம்மை உயர்குலச் சைவராக மதித்து, சத்தியம், சாந்தம், தயை, முதலிய சற்குணங்களுக்குச் சார்பாகிய சைவசமயத்தைக் கடைப்பிடித் தொழுகுவர் ஆகுக.

# ஜீவசக்தியும் நீண்ட ஆயுளும்

ஸ்ரீ. பா. ஆதிமூர்த்தி அவர்கள், காசி

ஜீவ சக்தியின் அவசியமும் பஞ்சமும் இவ்வுலகத்தில் மறுபடியும் தலைகாட்டிக் கொண்டு வருகின்றன. எங்கு பார்த்தாலும் பலஹீனமும் நோய்களும் அற்பாயுளும் வெகு வேகமாய்ப் பரவிவருகின்றன. இந்தியர்கள் தங்கள் கலைத்திறத்தையும் விஞ்ஞான விசாரத்தையும் பல



பெரிய காரணங்களால் சிறுகச்சிறுக இழந்து கடைசியாக மறந்தே போய்விட்டார்கள். அன்றியும் தற்போது தழைத்து வரும் புதிய கலைத்திறமும் சுதந்தர ஹீனத்தால் அபிவிருத்தி யடையத் தடைப்பட்டுத் தத்தளித்து நிற்கிறது. ஐரோப்பிய விஞ்ஞான வல்லவர்களோ, பொருட் பேராசையும் போலிக்கீர்த்தியும் மேலிட்டவர்களாய், பௌதிக இயற்கையையும் பதார்த்த சக்திகளையும் ஆராய்ந்து, செல்வப் பெருக்கையும் ஜீவ நாசத்தையும் உண்டாக்கும் கருவிகளைக் கண்டு பிடிப்பதில், தங்கள் ஆராய்ச்சித் திறத்தை உபயோகித்து வருகிறார்கள். இவ்விதமான இவர்களின் பயிற்சி வழிகள், நிஜமாகவே ஒருவழியில் நன்மையும் அபிவிருத்தியும் உள்ளவைகளாக விருந்தும், மற்றொருவகையில் அஸ்திபாரம் இல்லாத அரண்போல் கேடுகளை யுண்டாக்கிக் கொண்டு வருகின்றன.

மேலே கண்ட காரணங்களால் கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் ஜீவதத்துவ விஞ்ஞான ஆராய்ச்சி அலட்சியம் செய்யப்பட்டுவருகிறது.

இவ்விதம் அலட்சியம் செய்யப்பட்டு வருவது காரணமாக மனித சமூகம், இயற்கைக்கும் அவசியத்திற்கும் மீறியவான தப்பிதங்களை, மறந்தோ அறியாமையாலோ, அளவுக்கு மிஞ்சிக் கையாடிவருகின்றது. இவற்றால் சிசுமாணம், நோய், அற்பாயுள் முதலிய கொடுமைகளும், பலக்குறைவும், அறிவீனமும், பகைமையும், போராட்டமும், நாசமும் எங்கு பார்த்தாலும் அபிவிருத்தி யடைந்து வரத் தொடங்கிவிட்டன.

இதே நிலைமையில் உலகம் போய்க்கொண்டிருக்குமானால், இனி 100 முதல் 200 வருடங்களுக்குள், சராசரி மனிதனது ஜீவகாலம் இன்னும் குன்றிவிடும் என்பதில் ஆட்சேபணையில்லை. எப்படி யெனில், தற்போது உலகத்தின் சராசரி மனித வாழ்வு 25 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையிலுந்தான் என்று நிபுணர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தற்கால மனிதவாழ்வின் சராசரி வயதே மிகவும் பயப்படும்படியான நிலைமையில் இருக்கும்போது, இனிவரப்போகும் காலத்தில் இவ்வுலகம் எவ்வித மிருக்கு மென்று நாம் எதிர்பார்க்கலாம்?

உதாரணமாக, நமது அநுபவத்தைக்கொண்டு நம் நாட்டின் தற்காலத்து வாழ்க்கை நிலையைச் சற்று ஆராய்வோம்:—பொது ஜன சமூகத்தில் தற்போது சிசுக்களின்

மர்ண விகிதமும், பெண்களின் மரணவிகிதமுமோ பயப்படும் நிலையில் நிற்கின்றன. எத்தனை கைம்பெண்களோ, அதற்கிருமடங்கு அல்லது மும்மடங்கு ஆண்விதைகள்(?) நிரம்பி யிருக்கின்றனர். விருத்தாப்பிய வாழ்வு மிகவும் குறைந்து போய்விட்டது. முற்காலத்துக் கொள்கைகளை விடாமல், கிராம வாழ்க்கையிலுள்ள சிலரே பூரண விருத்தாப்பிய தெசையில் காலகதி யடைகிறார்கள். மற்ற வகுப்பாரோ, ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கற்று, கலாசாலைகளை நீங்கு முன்னரே ஜீவசக்திகுன்றி, இல்லற வாழ்வுக்குத் தகுதியற்றவர்களாய், வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு ஊழியமும் போராட்ட வாழ்வும் கைக்கொண்டு, முன்னிலும் தவிக்கிறார்கள். உயர்தரக் கல்வியறிவைப் பெற்றுத் தேசாபிமானமும் பரோபகாரமும் மேற்கொண்டு பொது ஜனங்களுக்காகவும் தேசத்திற்காகவும் பாடுபட்டுவரும் புத்திமான்கள், ஜனசமூக நன்மைக்காக எந்த வேலையும் செய்யத்தயாராக விருந்தும், தங்களுடைய ஜீவிய சக்தியின் குறைவினாலும் பழக்கப்பட்ட இயற்கை விரோதமான வாழ்வினாலும் பலஹீனர்களாய், அற்பாயுளுள் மடிந்து வருகிறார்கள். உலகத்திற்கெல்லாம் புத்திசொல்லும் அநேக தேசாபிமான ரத்தினங்கள், காற்படி அரிசியைக்கூட ஜீரணம் செய்யச் சக்தியற்றவர்களாய், மிகமாயமான குழந்தைகளின் உணவில் காலந்தள்ளி மடிகிறார்கள். நம் நாட்டுத் தற்கால மஹாரிஷிகளான கோபால கிருஷ்ண கோகலே, வி. கிருஷ்ணசாமி, ஜி. சுப்பிரமணியம், பால கங்காதர திலக், சுப்பிரமணிய பாரதி முதலியவர்கள், ஒவ்வொருவரும் (வைத்திய முறைப்படி) தீராதரோகத்திற்குட்பட்டு மடிந்தார்கள், அல்லது ஜீவசக்தியின் குறைவால் மடிந்தார்களே யன்றி, பூரணாயுள்வரை வாழ்ந்தா மடிந்தார்கள்? நமது மதமும், ஆசாரங்களும், பழக்க வழக்கங்களும், புத்திக் குறைவும், நமக்குச் சத்துருக்களாக இருந்து வருகின்றன. இவைகளைச் சிறிது மாற்றிக்கொள்ளவாவது, புத்தியின் வல்லமையால் இயற்கையின் உண்மையைக் கண்டுபிடித்து நடக்கவாவது, நம்மவர்களுக்குச் சக்தியுமில்லை. அழுகிய வயிறும், நீரழிவும், மூலரோகமும், இன்னமும் பல நோய்களும் நிறைந்த குடலும், கெட்ட நாற்றம் நாறும் பற்களும் கொண்டு, ஆங்கில நீதிஸ்தலங்களிலும், பிரசங்க மேடைகளிலும் தொண்டையைக் கிழித்துக் கொள்ளும் அநேக பென்னம் பெரிய தேசாபிமானிகளையும்,



விவகாரிகளையும் நாம் தினமும் பார்த்து வருகிறோம். இப்பெரியோர்கள் காலில் ஒரு சிறுமுள் தைத்தாலும், கடுகளவு சிரங்கு ஒரு ஓரத்தில் வந்தாலும், உடனே மீட்சியின்றி யமலோகப் பிராப்தியை யடைகிறார்கள். மருந்தில் ஜீவசக்தி யில்லையென்ற உண்மை வெளியாகும் போது, வியாதிஸ்தனும் மரணத்தை விட்டுத் தப்புகிறான், உலகமும் சுகத்தையும் நீண்டாயுளை மடைகிறது.

இவ்விதம் நம் நாட்டின் நிலையிருப்பது போலவே, இவைகளில் இரண்டொன்று நீங்கலாக, மேல் நாட்டின் நிலையும் இதே நிலையிலிருந்து வருகிறது. இந்த ஆபத்தான நிலையை மாற்றுவதற்கு விஞ்ஞான முறையாக ஒருவரும் முயற்சி செய்ததாகத் தெரியவே யில்லை. பூரணாயுளுக்கும், ஜீவசக்திக்கும் மாத்திரைகளும், லேகியங்களும், இரசங்களும் பல தலைமுறைகளாகக் கண்டுபிடிக்க முயன்றும், வைத்திய சாஸ்திரம் தோற்றுப் போய்விட்டது. வைத்தியர்களும் நிராசையடைந்து விட்டார்கள். இந்திய ஐரோப்பிய யூனானி வைத்திய சாஸ்திரங்களெல்லாம் தீராத சில வியாதிகளிருப்பதாகப் பாடம் ஒப்புவித்தாய் விட்டன. தீராத வியாதிகள் என்ற கொடிய பதத்திற்குப் பொருள் :—இந்தப் பேர்பெற்ற வைத்திய சாஸ்திரங்களால் தீர்க்கமுடியாதவை என்பதையன்றி, உலகத்திலுள்ள எந்தத் தத்துவத்தினாலும் பூதபௌதிகங்களாலும் தீரமாட்டாதன என்று பொருள் கொள்ளக்கூடாது. தோற்றுப்போகும் ஒருவன், என்னால் முடியாமற்போய் விட்டது என்று கூறுகிறானேயன்றி, மற்றவர்களாலும் முடியாது என்று சொல்லவில்லை.

ஆகவே அற்ப தத்துவங்களை ஆதாரவாகக் கொண்டு வளர்ந்த இந்த வைத்திய சாஸ்திரங்களின் தோல்விக்காக நாம் பயப்படவே வேண்டியதில்லை. ஏனென்றால், இந்த வைத்திய சாஸ்திர ஔஷதங்களான கூட்டுப் பதார்த்தங்களின் மூல காரணமான பௌதிக பதார்த்தங்களிடம் நாம் விண்ணப்பம் செய்து கொண்டால், அந்தப் பௌதிக சக்திகள் நமக்கு வழி காட்டித்தான் தீரவேண்டும். அந்த வழியை நாம் கைக் கொண்டு உண்மையான ஜீவசக்தியைக் கண்டு பிடித்து, அற்பாயுள், நோய்கள் என்ற சத்துருக்களை வெல்லத் தயாராக விருப்போமாக.

கல்வி கற்ற பெரியோரும், கற்காத சாதாரண ஜனங்களும் சொல்லிக் கொள்வதுபோல், “மனிதன் அவசியம்

மரணமடையத்தான் வேண்டும், ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான், ஒருவரும் தப்பித்துக்கொள்ள முடியாது" என்ற இந்தச் சித்தாந்தத்தைப் பற்றி எமக்கு யாதொரு ஆட்சேபணையுமில்லை. ஆனால், உலகத்தில் பிறந்த மனிதவர்க்கம் ஒவ்வொன்றும் இத்தீர்மானப்படி துன்பத்தையும் நோயையும் எப்பொழுதும் அனுபவிக்க வேண்டிய அவசியமில்லையென்றும், பிறந்த சகல மனித கூட்டங்களும் பாலிய மரணம், நோய்கள் ஆகிய கஷ்டங்களின்றிப் பூரணாயுள் வரை, என்றால் நூறு வயதுக்கு மேற்பட, சுகதேகத்துடனும் சித்தமான புத்தியுடனும் அவசியம் வாழத்தான் வேண்டுமென்பதுமே எமது மதமாகும். அன்றியும், இவ்விதம் வாழ்வதற்குப் பதிலாக நோயாலும் அற்பாயுளாலும் கஷ்டங்கள் ஏற்பட்டால், அதற்குக் காரணம் ஜீவசக்தியின் குறைவென்று கொள்ளவேண்டும். ஜீவசக்தியின் குறைவினால் இந்தக் கஷ்டங்கள் வருவதால், அந்த ஜீவசக்தியை நமது தேகத்தில் நிரம்பப் பெருக்கி வைத்துக் கொண்டோமானால், தேக இயந்திரங்கள் ஒன்றுக்கும் கஷ்டப்படாமல் தன் தன் வேலைகளைச் செய்து கொண்டே வரும்; அப்படி வருமானால், நோய்கள், வலிகள், மரணம் ஆகிய ஆபத்துக்கள் சம்பவிப்பது முடியாத காரியமாகும். எப்படியெனில், முன் யோசனையுள்ள ஒரு விஞ்ஞானி கூறுவதுபோல், "திரியும் எண்ணெயும் விளக்கும் இருந்து, பெருங்காற்று மழை முதலிய துர்ப்பாதங்களணுகாமலும் காக்கப்பட்ட இடத்தில், விளக்கேற்றி வைக்கப்படுமானால், அவ்விளக்கின் குறைவைத் அடிக்கடி பார்த்து நிவர்த்தி செய்யப்படவும் கூடுந்தானால் அந்த விளக்கு ஒருக்காலும் அணைந்து போக[illegible]டாது. ஆகவே, ஜீவசக்தியின் பூரணம் நமது [illegible] எப்பொழுதும் நிரம்பித் ததும்பும்படியான ஒரு [illegible] மட்டும் நாம் கண்டு பிடித்து, அந்த முறைப்படி நிரப்பி வருவோமானால், தற்போதுள்ள யானிட வாழ்க்கையின் கஷ்டங்களைக் கூட்டிக் குப்பையிலெறிந்து விடலாம்."

(இன்னும் வரும்)

குசிகர் குட்டிக் கதைகள் — மூன்றாவது (கடைசி) பாகம் இந்த நவம்பர் மாதமே வெளிவந்து விட்டது!
633-ம் பக்கம் பார்க்க.

# மூன்றில் ஏது?

ஒரு சிறு கதை

ஸ்ரீமதி வி. விசாலாக்ஷியம்மாள், சென்னை.

"அம்மா! அம்மா! வேது, வாழை மட்டை சீவுகிறேனென்று, கையை வெட்டிக்கொண்டு விட்டது" என்று சொல்லிக் கொண்டே, ஒரு பையன் சமையற்கட்டை நோக்கி ஓடினான்.

"என்னடி அம்மா, ஒரு நிமிஷம் சும்மாவிருக்க ஒட்டேனென்கிறது! அரிவாள்மணையை எடுக்காமற் பார்த்துக்கொள்வதற்கென்ன? உனக்கு வயதாக வில்லையா?" என்று கூறினாள் தாயார்; இதற்குள் வேதுவும் அழுது கொண்டு ஓடிவந்தாள். கமலாம்பாளம்மாள், குழந்தையைத்தூக்கிக் கொண்டு: "எங்கே பட்டது பார்ப்போம்? இதற்குத் தானா இவ்வளவு பாடு! துளி கீறியிருக்கு," என்று சொல்லி, ஒரு கடுதாசித்துண்டையெடுத்து, வேதுவின் இடதுகை ஆட்காட்டி விரலில் பொசிந்த ரத்தத்தைத் துடைத்து விட்டு, "சர்க்கரை இந்தா, அழாதே. சீமா! குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்; எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது" என்று, தன்மகனைப் பார்த்துச் சொன்னாள்.

கமலாம்பாள் அம்மாளுக்கு வயது 24 இருக்கலாம். சீமாவும், வேதுவும் அவள் குழந்தைகள். சீமாவுக்கு 7 வயது; வேதுவுக்கு இன்னும் மூன்றுவயதாகவில்லை. அவள் கணவர் சுந்தரமையர், ரயில்வேயில் குமாஸ்தா. நாலு மாதங்களுக்கு முன் கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டதன் மேல், பெண்டாட்டி குழந்தைகளுடன் தனிக்குடித்தனம் செய்துகொண்டிருந்தார். அதுவரை கமலாம்பாள் தனியாயிருந்ததேயில்லை. மாமியாராவது,

அத்தையாவது கூடவிருந்துகொண் டிருந்தார்கள். ஆகையால், கமலாம்பாளுக்கு, வீட்டுவேலையும் செய்து, குழந்தைகளையும் கவனிப்பது சிரமமாயிருந்தது.

அன்று இரவு, வேது, தூங்காமல் முனகிக்கொண்டேயிருந்தாள். மறுநாட்காலை, குழந்தையின் விரல் வீங்கி, பார்ப்பதற்குச் செவ செவ என்றிருந்தது. வேதுவும் கையை வலிக்கிறதென்று அழுதுகொண்டே யிருந்தாள். சுந்தரமையர் ஆபீஸ் போகுமுன், மஞ்சளும் மிளகாய்ப் பழமும் அரைத்துக் கொதிக்கவைத்துப் போட்டால் எல்லாம் சரியாகிவிடு மென்று சொல்லிப் போனார். ஆனாலும், கமலாம்பாள் குழந்தையை வைத்துக்கொண்டு தனியாகக் கஷ்டப்படுகிறாளோ என்ற விசாரத்தில், மத்தியானம் இரண்டு மணிக்கே வீடு திரும்பிவிட்டார். வேதுவுக்கு நல்ல ஜுரம் வந்திருந்தது. கையும் மணிக்கட்டுவரை வீங்கி விட்டது. கையை வலிக்கிறதென்று குழந்தை அழுதுகொண்டே யிருந்தது.

"துளிப்பட்டது; இரத்தம்கூட நன்றாக வரவில்லை. இப்படி வீங்குவானேன்? எனக்குப் பயமாயிருக்கு. என்னமோ, இந்த நாளிலே ரத்தம்கெட்டு விஷம் ஏறிவிடுகிறதென்கிறார்களே! டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டலாமா? என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கமலாம்பாளம்மாள் கேட்டாள்.

"சரி: பக்கத்துத்தெருவில் டாக்டர் மேனன் என்று புதிதாக ஒருவர் வந்திருக்கிறார். சீமையிற் படித்தவராம்; கெட்டிக்காரனென்கிறார்கள். அவரை அழைத்து வருகிறேன்" என்று, சுந்தரமையர் போனார்.

டாக்டர் மேனன் வந்தார். அவருக்கு வயது 28 த்தான். சீமையிற் படித்து "F. R. C. S." பட்டம் பெற்றிருந்தார். மருந்துகளில் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை கிடையாது. தொந்திரவு கொடுக்கும் அவயவங்களைக் கத்தியால் வெட்டி வேருடன்களைந்து விடுவதே நலம் என்பதில் மிக்க ஊக்கம் உடையவர். குழந்தை கையைப் பார்த்தார். அரிவாள் மணையில் துரு இருந்ததாலும், உடனேயே 'விஷமாற்றான்' (ஆன்டி ஸெப்டிக்) மருந்து ஒன்றும் போடாததினாலும், கை விஷம் ஏறிவிட்டதென்று சொன்னார். மணிக்கட்டுவரை கையை வெட்டி விடுவது அவசிய மென்றும், இல்லாவிட்டால் உயிருக்கே அபாயம் நேரிடலா மென்றும், இன்னும் ஒருமணி நேரத்திற்



சில மருந்துகள் எடுத்துக்கொண்டு வருவதாகவும் சொல்லிப் போனார். சுந்தரமையரும், அவர் சொன்ன வேறு சில மருந்துகள் வாங்க, ஷாப்புக்குப் போகவேண்டியதாயிற்று.

பாவம்! கமலாம்பாளுக்கு இன்னசெய்வ தென்று தெரியவில்லை. டாக்டர் உயிருக்கு அபாயம் நேரிடக்கூடு மென்றதால், குழந்தை கையை வெட்டுவது நலமென்றே அவள் மனதிற்பட்டது. பித்துப் பிடித்தவள்போல் நின்றுகொண்டிருந்தாள். வாசலில்,

"ஆண்டிப் பண்டாரம்! உனைநான் வேண்டிக் கொண்டேனே!"

என்று பாடிக்கொண்டு, ஒரு பிச்சைக்காரன் வந்தான். அவனுக்குக் காசுகொடுக்கச்சொல்லி, தாயாரின் கையைப் பிடித்துச் சீமா இழுத்தான். தான் செய்வது இன்னதென்று அறியாதவளாய், கமலாம்பாள், வாசலிற் சென்றாள். தன் மனத்தி லிருந்த திகிலினால், தன் குழந்தைக்கு வந்திருக்கும் ஆபத்தைப்பற்றி, அந்தப்பண்டாரத்தினிடம் சொன்னாள். அவன் கொஞ்சம் விபூதியும், ஒரு பச்சிலையும் கொடுத்து, "திருநீறை நெற்றியிற் பூசி, இலையைக் கசக்கிக் கையில் பூசுங்கள், எல்லாம் மாயமாய்ப் பறந்து போய்விடும். பயப்படாதேயுங்கள், அம்மணீ! பழனியாண்டவர் இருக்கிறார்!" என்று கூறிவிட்டு, கமலாம்பாள் கொடுத்த காசை வாங்கிக்கொண்டு போய்விட்டான். கமலாம்பாள் உள்ளேசென்று விபூதியையும், பச்சிலைச் சாற்றையும் பூசிவிட்டு, குழந்தை அருகி லுட்கார்ந்து பரிதபித்துக் கொண்டிருந்தாள். வேதுவின் கையை எடுத்துத் தன் முகத்துடன் அணைத்துக்கொண்டாள். "ஐயோ! சதையும் தானுமாக, கை களிப்புக் களிப்பா யிருக்கு, கொலுசு பண்ணிப்போடவேண்டு மென்றிருந்தேனே! கையை வெட்டவேணு மென்கிறார்களே! ஐயோ! மங்களாம்பிகே! உன்னைவிட்டாற் கதியில்லை. உன் கைக்குத் தங்கக்கொலுசு செய்துபோடுகிறேன்; என் குழந்தையைக் காப்பாற்று," என்று புலம்பினாள். கண்ணிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகி, குழந்தையின் கைம்மேல் விழுந்து நனைத்தது. ஒரு மணி நேரத்தில் சுந்தரமையரும், டாக்டரும் திரும்பிவந்தார்கள்.

"இதென்னம்மா! கண்ணீர் பட்டால் இன்னம் 'ஸெப்டிக்' விஷம் அதிகமாகாதா? இதென்ன இப்படிச் செய்கிறீர்கள்?" என்றார் மேனன். பிற்பாடு, இரவுக்கு ஏதோ மருந்து கொடுத்துவிட்டு, காலையில் ஆபரேஷ

னுக்கு வேண்டியதெல்லாம் எடுத்துவருவதாகச் சொல்லி, டாக்டர் போனார். மறுநாட்காலை ஏழுமணிக்கு, டாக்டர் மேனன், மயக்கம் கொடுக்க மற்றொருவரையும் தனக்கு ஒத்தாசை செய்ய ஒரு தாதியையும் அழைத்துக்கொண்டு வந்துசேர்ந்தார்.

"குழந்தை நன்றாகத் தூங்கினாள். ஜுரம் மட்டுபட்டிருக்கு" என்று, கமலாம்பாள் ஆவலுடன் சொன்னாள். டாக்டர், அதைக் காதில் வாங்காமல், ஆபரேஷனுக்கு எல்லாம் தயார்செய்துகொண்டார். பிற்பாடு குழந்தை கை நாடியைப் பிடித்துப் பார்த்தார். ஆச்சரியக்குறி தோன்றும் முகத்துடன், சூடறிகருவியை வைத்துப்பார்த்தார்; கைக் கட்டை அவிழ்த்தார். வீக்கம் எல்லாம் குறைந்து, சுரம் விட்டு, வேது, முக்கால்வாசி குணமடைந்திருந்தாள். "இதென்ன அற்புதம்! நேற்று இந்தக் குழந்தை பிழைப்பதே கஷ்டம்; எப்படியும் கையை வெட்டுவது அவசியமென்று நினைத்தேனே; இப்பொழுது எல்லாம் குணமாயிருக்கிறதே! நான் இதுவரை இப்படிப் பார்த்ததில்லை" என்று, திகைத்தார் டாக்டர் மேனன், F. R. C. S.

"அம்மா! மங்களாம்பிகே! பரதேவதே! குறையும் குணப்படுத்து; பாலபிஷேகம் செய்விக்கிறேன்" என்றாள் கமலாம்பாள்.

அவ் வுள்ளுக்குள் வரக்கூடாதென்று வெளியே அனுப்பப்பட்டிருந்த சீமா, தன்னை யாரும் கவனியாததை அறிந்து, மெதுவாக உள்ளே வந்தான். இந்த பூட்ஸ், தொப்பி எல்லாம் போட்டுக்கொண்டு ஜோராயிருக்கும் டாக்டருக்கு, தனக்கு படிக்கத்தெரியுமென்பதைக் காட்ட வேண்டுமென்ற ஆசையினால், அவன், அங்கே கிடந்த ஒரு தமிழ்ப்பத்திரிகை*யை எடுத்து, உரத்த குரலில், பின்வருமாறு வாசித்தான்:—

"கண்ணீர்:—மனிதரை வாட்டி வதைக்கும் நோய்களில் பல, கண்ணுக்குப் புலப்படாத சிறு விஷ ஜெந்துக்களினால் உண்டாகின்றன என்பது பிரபலம். இந்த விஷஜெந்துக்களை நசித்துவிடும் ஒரு வஸ்து மனிதர் வடிக்கும் கண்ணீரிலிருக்கிறதாம். இதில் ஒரு சொட்டு, பலகோடி விஷஜெந்துக்களைக் கொன்றுவிடும். இன்னும் கண்ணீரிலிருந்து இந்த வஸ்துவைத் தனித்துப் பிரிக்க முடியவில்லை. அது தெரிந்தவுடன், விஷ ஜெந்துக்களை அழிக்கும் நமக்குத்தெரிந்த மற்ற எல்லாப்பொருள்களிலும் உக்கிரமான வஸ்துவாய், அது பயன்படும்."

* "பஞ்சாமிர்தம்"—ஆனிமாதத்துக் காசு, 219-ம் பக்கம்—ப—ர். ப—ம்.



"That is it! 'Out of the mouths of babes and sucklings,' மிஸ்டர் சுந்திரம்! நேற்று இந்த அம்மாள் கண்ணீர்பட்டுக் குழந்தை கை நனைந்ததே, அதுதான் இவ்வளவு சீக்கிரம் விஷப்பூச்சி 'பாக்டீரியா'க்களைக் கொன்று, கையைச் சரிப்படுத்தியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நானிப்படிப் பார்த்ததே யில்லை. அமெரிக்கன் டாக்டர் ஒருவர், கண்ணீர் 'ஆன்டிஸெப்டிக்' என்று எழுதியிருந்ததை நானும் படித்தேன்; நம்பவில்லை. இயற்கையின் அற்புதமே அற்புதம்! நானிதைப்பற்றி 'லான்ஸெட்' பத்திரிகைக்கு எழுதவேண்டும். சாயங்காலம் ஒருமுறை வந்து பார்த்துப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, தான் அழைத்து வந்திருந்த ஆட்கள் சாமான்களுடன் டாக்டர் மேனன் போய்ச் சேர்ந்தார்.

"ஒருவேளை அந்தப் பச்சிலையின் மகிமையோ, என்னவோ? வயித்தியர்களுக்குத் தெரியாத அநேக பச்சிலைகள் பண்டாரங்களுக்குத் தெரியுமென்கிறார்களே? அதன் குணமாயேனிருக்கக் கூடாது?" என்றார் சுந்தரமையர்.

"கண்ணீராம்! பச்சிலையாம்! குணமாச்சாம்! குழந்தை கை சுகமானால், மங்களாம்பிகைத் தாயாருக்குத் தங்கக் கொலுசு பண்ணிப்போடுகிறேனென்று வேண்டிக்கொண்டேன். எல்லாம் அம்மன் கிருபை. சாயங்காலத்திற்குள் தட்டான் சொக்கலிங்கத்தை அழைத்து வாருங்கள்" என்று, ஆனந்தக் கண்ணீர் சொரிய, கமலாம்பாள் பதிற்சொன்னாள்.

விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து-கற்புப்பத்து. 2-ம் பதிப்பு—நவரஸம் சொழிக்கும் நாவல்-பழமொழிக் களஞ்சியம்-விலை 1—4—0.

பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய்க் கூறுவது—விலை 0—12—0.

பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்—0—6—0. பஞ்சாமிர்தம் சந்தாதாரர்க்குப் பாதி விலை—மூன்றணா தான்.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர்.

# ஏகாதசி விரதம்

ஸ்ரீ. T. N. S. இராகவாசாரியார், B. A., மயிலை.

ஏகாதசி திதி வருகிற தினத்திற்கு, பம்பாய், வங்காளம் முதலிய வடதேசங்களில், 'ஹரிதினம்' என்று ஒரு பெயர் வழங்குகிறார்கள். ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு ஏகாதசி திதிகள் வருகின்றன. வைதிக சம்பிரதாயப்படி இவ்விரண்டு திதிகளும் உபவாஸத்துக் குரிய நாட்களாகும். தசமி தினத்தன்று ஒரு பொழுது மட்டும் சாப்பிட்டுவிட்டு, ஏகாதசி யன்று (நிர்ஜல) உபவாஸமிருந்து, துவாதசியன்று அதிகாலையில் ஸ்நாநம் செய்து, பகவானை ஆராதனை செய்துவிட்டு, (பாரணை) போஜனம் செய்ய வேண்டியதென்பது நியமம். ஏகாதசி யன்று இரவில் தூங்காமலே பகவத்தியானம் செய்வது முறை.

மேலே கூறியவாறு விதிக்கப்பட் டிருக்கும் அனுஷ்டானம், எவ்விதத்திலும் மனிதருக்கு அனுகூலத்தைத் தரத் தக்கதென்பது நிச்சயம். மோக்ஷ சாதனங்களில் இவ் வுபவாஸம் ஒன்றாகக் கருதப்படுவதோடு மட்டும் நிற்காமல், இவ்வித உபவாஸத்தால், இகத்தில், மனிதருடைய சரீர ஆரோக்கியம் எவ்விதத்தில் மேம்பாடடைகிறதென்பதைக் கவனிப்போம் :—

நம்முடைய சரீரத்தை, நீராவியால் ஓட்டப்படும் ஒரு யந்திரத்துக்கு ஒப்பிடலாம். ஏனெனில், அவ்வியந்திரத்தில் பற்பல உறுப்புக்கள் வெவ்வேறு வேலைகளைச் செய்து வருவது போல, நம்முடைய சரீரத்திலும் பற்பல அவயவங்கள் பற்பல வேலைகளைச் செய்து வருகின்றன. இவ்வாறு செய்வதற்கு வேண்டிய உணவுப் பொருள்களை அவயவங்களுக்குக் கொண்டுவந்து சேர்க்கும் கருவி, நமது தேகத்தி லுள்ள இரத்தக் குழாய்களில் எப்பொழுதும் பரவி யோடிக்கொண் டிருக்கும் இரத்தமேதான். நமது தேகத்தை வளர்ப்பதற்கான உணவுப் பொருள்களை நாம் தினந்தோறும் சாப்பிடுகிறோம். நமது வயிறு,





குடல், ஈரல் முதலிய உறுப்புக்கள், நாம் சாப்பிடும் பதார்த்தங்களை ஜீரணித்து, இரத்தத்தோடு எளிதில் கலக்கக் கூடியபடி மாற்றி, இரத் வோட்டத்தில் கலக்கச் செய்கின்றன. நாம் ஒவ்வொரு வேளையும் சாப்பிடுகிற நேரம் கால்மணிக்கும் குறைவாகவே இருந்தாலும், அந்த நேரத்திற்குள் நாம் உட்கொண்ட உணவை ஜீரணித்து, இரத்தத்தில் கலக்க உபயோகப்படும்படி செய்வதற்கு, மேற்கூறிய குடல் முதலிய உறுப்புக்களுக்கு, ஐந்து, அல்லது ஆறுமணி நேரம் பிடிக்கிறது. ஆகவே, அவைகள், ஓய்ச்சல், ஒழிவு அதிகமாக இல்லாமலே வேலை செய்து வருகின்றன. இரும்பு, எஃகு முதலிய உலோகங்களா லாக்கிய நீராவி யந்திரத்தின் உறுப்புக்களுமே, ஓய்ச்சல், ஒழிவு, அடிக்கடி சுத்தம் பண்ணப்படுதல், இவைகள் இல்லாமல் வெகு நாள் வேலை செய்வதில்லை. ஆகவே, அதிக மிருதுவான தசை, இரத்தம் இவைகளாலாக்கப்பெற்ற வயிறு, குடல் முதலிய உறுப்புக்கள், ஓய்ச்சல் இல்லாமல் வேலை சுமத்தப் பெற்றால், வெகு சீக்கிரத்தில் பலம் குறைந்து, தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாமல் நோய்களால் பீடிக்கப்படும்.

ஆகையால் அவைகளைச் சரிவரப் பாதுகாப்பது அவசியம். தவிரவும், அடிக்கடி சாப்பிடும் பெருந்தீனிக்காரர்கள், புத்திக்கூர்மை யிழந்து மந்த புத்தியினராவதை, நாம் சாதாரணமாய்க் காணலாம். பதினான்கு நாட்கள் இஷ்டப்படி சாப்பிட்டுவிட்டு, பதினைந்தாவது நாள், வயிறு, குடல் முதலிய அவயவங்கள் களைப்பாறுதற்கு இடங் கொடுக்க வேண்டியே தான், நாகரிகங்களிலும், பற்பல சாஸ்திரங்களிலும் நிபுணரா யிருந்த நம் முன்னோர்கள், ஏகாதசி உபவாஸத்தை நிர்ணயித்து வைத்திருப்பது போலத் தோன்றுகிறது.* நம்முடைய (இந்தியர்களுடைய) மதக் கொள்கைகளை முன்வைத்து எக்காரியங்களையும் வற்புறுத்தினாலன்றி, நாம் கைவிட்டு விடுதல் கூடுமாகையால், அவ் வுபவாஸம் முதலிய சுகாதார விதிகளை, சாஸ்திர சம்பந்தமான ஐதிகங்களைத் தழுவிநிற்கும்படிச் செய்துள்ளார் என்பது என் துணிபு. நம்முடைய நித்திய நைமித்திய நடவடிக்கைகளில் நாம் அனுஷ்டிக்க வேண்டியதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு நிபந்தனைக்கும், சுகாதார நிலையைத் தழுவிய ஒவ்வொரு காரணம் இருப்பது, சற்று யோஜித்துப்பார்த்தால் எளிதில் புலப்படும்.* இது

* இரவில் தூங்கக்கூடாதென்பது ஏனோ? ப-ம். ப-ர்.

நிற்க, ஏகாதசி யுபவாஸத்தைப்பற்றிய ஐதிகங்களை இனிக் கவனிப்போம். உபநயனம் ஏழாம்வயது செய்யவேண்டியதென்று கிரமமாக விதிக்கப்பட்டிருக்கிறது. அது முதல் ஆரம்பித்து எண்பதாவது வயது முடியும் வரையில், ஏகாதசி யுபவாஸத்தை யனுஷ்டிக்கும்படி சொல்லியிருக்கிறது.

ஏழாவது பிராயத்தில் உபநயனம் செய்வது கிரமம் என்று விதித்ததன் வைதிக காரணம் என்னவானாலும், ஏகாதசி யனுஷ்டிப்பதற்கு ஏழாம் பிராயத்தைச் சுட்டியதற்கு, சுகாதாரத்தை யொட்டியதாக எனக்குத் தோன்றும் காரணம் என்ன வெனில்: சாதாரணமாக ஐந்து ஆறு பிராயம் வரையில் குழந்தைகளின் ஆகாரம் பால், இன்னும் எளிதில் ஜீரணிக்கக்கூடிய பதார்த்தங்கள தாம் பெரும்பான்மையன வாதலாலும், இன்னும் அப் பிள்ளைகளின் குடல் முதலிய உறுப்புக்கள், ஆகாரமே யில்லாமல் வெகு நேரம் தாமதிப்பதற்கு ஏற்ற வலிவு அடைந்திராமையாலும், தவிரவும், ஏழு, எட்டுவயதானவுடன், குழந்தைகள் பள்ளிக்கூடம் முதலிய இடங்களுக்குப் போயும், பறபல விடங்களில் விருந்துண்ணல் முதலிய காரணங்களினால் குடலுக்கு அதிக வேலையைக்கொடுக்க ஆரம்பிப்பதாலும், அந்தப்பிராயம் வந்தவுடனேயே, ஏகாதசி விரதத்தை யனுஷ்டிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இது பிசகான தோற்றமென்று பட்டால், படிப்பவர்கள் மன்னித்துக் காரணம் கூறுவாராக. எண்பது வயதான மேல், ஒரு மனிதன் சிறு குழந்தையாக மதிக்கப்பட வேண்டும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆகையால், அந்த வயதிற்குப் பிறகு உபவாஸ மிருப்பது அசாத்தியம்.

ஸ்திரீகள் தகப்பனுடையவோ, அல்லது கணவனுடையவோ அநுமதியின்பேரில் உபவாஸம் அநுஷ்டிக்க வேண்டியது என்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளுக்கு சுதந்தரமே வைக்காமல், எவ்விஷயத்திலும் புருஷருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதாக நியமித்த பிற்காலத்தவர்களே இவ்விதியையும் நிருமித்தனர் போலும்.

## சர்வ சமய சமரச தர்சநி

(588-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

39. "விறகில் தீயில், நன் பாலில் படுநெய்போல்,
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான் ;
உறவு கோல்நட்டு, (உ)ணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"—தேவாரம்.

40. "அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை ; அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு"—திருக்குறள்.

41. "உன்னுடைய நடத்தையே உனக்குச் சன்மானத்தையும் தண்டனையையும் அது அதற்கு ஏற்ற வண்ணமாகக் கொண்டுவந்து கொடுக்கும்"—மகமது நபி.

42. "முழு மனத்தோடும் முழு வலியோடும் கடவுளை வழிபடு ; உன்னை நேசிப்பதுபோலவே அயலானிடத்தும் அன்பு பாராட்டு"—ஏசு கிரிஸ்து.

43. "கண்ணுக்குக்கண்ணாய் வாக்குக்குவாக்காய் செவிக்குச்செவியாய் மனத்துக்குமனதாய் மூச்சுக்கு மூச்சாயிருந்து, இந்திரிய மனதுகளுக்கு எட்டாததாய் அவற்றை இயக்கி வருவதே ப்ரும்மம்"—உபநிடதம்.

44. "செத்த பின்பு, சுவர்க்கத்துக்கோ நரகத்துக்கோ உள்ளாக்குமுன், கடவுள், 'நீ எவ்வளவு படித்தவன்? எவ்வளவு சாதுரியமாய்ப் பேச வல்லவன்?' என்று கேட்க மாட்டார் ; 'நீ, என்ன என்ன செய்தாய்? நல்வழியில் நடந்தாயா?' என்றே கேட்பர்"—தாமஸ் எகிம்பிஸ்.

45. "மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழிப்ப தொழித்து விடின்"—திருக்குறள்.

# கம்பராமாயண இன்கவித் திரட்டு

(491-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C., வெள்ளக்கால்

## சுந்தர காண்டம்.

(மற்றைய காண்டக் கதைகளினும் அழகான கதையைக் கூறுவது, இராமனது திருமேனி அழகைக் கூறுவது, சுந்தரன் என்னும் பெயரை யுடைய அநுமான் செயல்களைக் கூறுவது எனப் பலர் பலவாறு பொருள் கூறப்பட்டுள்ளது.)

### கடவுள் வணக்கம்.

1. அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவெனப், பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்றவீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால், அவர் என்பர், கையில் ஏந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே, மறைகளுக் கிறுதி ஆவார்.

இதன் பொருள்:—(உண்மைப் பொருளாகிய மாலையை உள்ளபடி கண்டால், (முன் அம்) மாலையால் தோன்றிய தோற்றப் பொருளாகிய பாம்பு (காணப்படாது நீங்குதல்) போல, (உண்மைப் பொருளாகிய) எவரைக் கண்டால், (அவரால் தோன்றிய தோற்றப் பொருளாகிய) பிரபஞ்சம் (காணப்படாது) நீங்குமோ, வேதாந்தப் பொருளாகிய அவரே இலங்கையில் (இராக்கதரோடு) போர் செய்தார் என்பார்கள் (பெரியோர்).

உற்ற - மிகுந்த. வீக்கம் - மிகுதி. அன்று ஏ அசைகள்.

'அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு, (அலங்கலை உள்ளபடி கண்ட மாத்திரத்தில், காணப்படா தொழிதல்) என' என்று, 'அரவு' என்பதற்குப் பின் 'என' என்பதற்கு முன் பல சொற்களை வருவித்துப் பொருள் கொள்ளல் வேண்டும். இவ்வாறு பொருள் விளக்கத்துக்குத் தடையின்றிக், கூறாது விடக்கூடிய சொற்களைக் கூறாது விடுதலைக் கம்பராமாயணத்திற் பல இடங்களிற் காணலாம். இதற்கோ ருதாரணமாகக் கையடைப்படலம் கக—ம் பாட்டைப் பார்க்க.

* All Rights Reserved by the Author.





மாலை மாயைக்கும், மாலை காரணமாகத் தோன்றும் பாம்பு மாயை காரணமாகத் தோன்றும் பிரபஞ்சத்துக்கும், மாலையைப் பாம்பாகக் காணும் (சூரியன் ஒளி தோன்றாத) காலம் மாயையைப் பிரபஞ்சமாகக் காணும் (ஈசுவரன் அருள் தோன்றாத) காலத்துக்கும், காண்போன் ஆன்மாவுக்கும், சூரியன் ஈசுவரனுக்கும், சூரியன் ஒளி ஈசுவரன் அருளுக்கும், சூரியன் ஒளியால் மாலையை உள்ளபடி அறிதல் ஈசுவரன் அருளால் மாயையை உள்ளபடி அறிதலுக்கும், மாலையை உள்ளபடி அறியவே அதுகாரணமாகத் தோன்றிய பாம்பு காணப்படா தொழிதல் மாயையை உள்ளபடி அறியவே அது காரணமாகத் தோன்றிய பிரபஞ்சம் காணப்படா தொழிதலுக்கும் ஒப்பு என்று உவமான உவமேயங்களை விரித்துணர்ந்து கொள்க.

பிரபஞ்சத்திற்கு மூலமாயிருக்கும் மாயை பிரகிருதி என்றும் கூறப்படும்.

நமக்குப் புலப்படும் பிரபஞ்சத்துக்கு முதற்காரணமான மாயை சடமாதலால், தானே தொழிற்பட மாட்டாத அதனினின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவர் "ஆதிபகவன் முதற்றே உலகு" என்றவாறு ஈசுவரனென்பது பற்றி 'அவரால் தோன்றிய தோற்றப் பொருளாகிய பிரபஞ்சம்' என உரையிற் கூறப்பட்டது.

மாலையை வியவகாரிக உண்மைப் பொருளாகவும் மாயையைப் பாரமார்த்திக உண்மைப் பொருளாகவும் கொள்க.

(நிலம் நீர் தீ காற்று வானம் ஆகிய) பஞ்சபூதங்களும் (தனிப்பொருள்களாக உள்ள தன்மை நீங்கித் தம்முட் கலப்புற்றுத் தம் தனி நிலையினின்று) மாறிய மாறு பாட்டினால் (ஆகிய சராசர) பேதங்கள் மிகுந்த மிகுதி' என்ற பொருள் உள்ள 'பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம்' என்பது, அண்டகோடிகளடங்கிய பிரபஞ்சத்தைக் குறித்தது.

மாலையில் தோன்றும் பாம்பு, தோற்றத்தில் உள்ளதாய், உண்மையில் இல்லாததாதல்பற்றிப் 'பொய்ம்மை அரவு' எனப்பட்டது.

'மர யானையைக் காண்போர், அது எப்பொருளால் ஆக்கப்பட்டதோ, அப்பொருளாகிய மரத்தைக்காணார்; மரத்தைக் காண்போர், அதனால் ஆக்கக்கூடிய யானையைக் காணார்; அவ்வாறே, பாராதி பூதபரிணாமமான பிரபஞ்சத்

தைக் காண்போர் அதன் காரணமாகிய பரம்பொருளைக் காணார்; பரம்பொருளைக் காண்போர் அதன் காரியமாகிய பிரபஞ்சத்தைக் காணார்’ என்று பொருள்படும்,

‘மாத்தை மறைத்தது மாமத யானை
மாத்தில் மறைந்தது மாமத யானை
பாத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பாத்தில் மறைந்தது பார்முதற் பூதம்.’

என்ற திருமந்திரப் பாட்டுடன் இப்பாட்டு ஒருவாறு கருத்தொத் திருத்தல் காண்க.

இந்தியாவினின்று இலங்கைக்குத் தூத்துக்குடி வழியாகச் செல்வோர், இடையே உள்ள ஒரு தீவைக் கடக்கும்வரையும் இந்தியாவைக் காண்கின்றன ரென்றும், இலங்கையைக் காண்கின்றில ரென்றும், அத்தீவைக் கடந்த மாத்திரத்தில் அவர்களுக்கு இலங்கை தோன்ற, இந்தியா மறைந்து விடுகின்றதென்றும் சொல்லப்படுவதும் மேற்கூறிய கருத்துக்குத் துணையாயிருத்தல் காண்க.

ஆன்மா, பிரபஞ்ச முகமாகிப் பிரபஞ்சப் பற்று (அதாவது பிரபஞ்சப் பொருள்களில் அவா) உடைமையே, “அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்—தவாப் பிறப்பீனும் வித்து” என்றவாறு, பிறப்புக்குக் காரணம்; அதுபோல, ஆன்மா பரம்பொருள் முகமாகிப் பரம்பொருட் பற்றுடைமையே பிறப்பு நீங்குதற்குக் காரணம் என்ற கருத்தை இப்பாட்டு விளக்குதல் கவனிக்கத்தக்கது.

மெய்ப் பொருளல்லாத பிரபஞ்சத்தை மெய்ப்பொருளென்று மயங்குதலால் பிறப்பு உண்டாதலும் மெய்ப்பொரு(ளாகிய கடவு)ளை அறிதலால் அம்மயக்கமும் பிறவியும் ஒழிதலும் கூறுதலால், இப்பாட்டு, “பொருள் (—மெய்ப்பொருள்) அல்லவற்றைப் பொருளென்றுணரும்-மருளான் (—மயக்கத்தால்) ஆம் மாணாப் பிறப்பு” என்ற குறட் கருத்தைத் திருட்டாந்த முகத்தால் தெளிவித்தல் தெரிக. (மருள், மயக்கம், விபரீத உணர்வு, திரிபுணர்ச்சி என்பவை ஒரு பொருள் குறித்தவை.)

உயிர் ஈசுரன் உலகம் என்ற முப் பொருள்கள், என்றும் உள்ள மெய்ப் பொருள்களென்னுங் கொள்கை, சைவ வைணவர்க்குப் பொது. ஆதலால், மேலே, பிரபஞ்சம் என்ற உலகத்தைப் பொய்ப் பொருளென்றது தூலப் பிரபஞ்சத்தைக் குறித்தென்க. தூலப் பிரபஞ்சம் அழிதலாவது அது முன்னிருந்த சூக்கும நிலையை யடைதலென்றும், தூலப் பிரபஞ்சம் சூக்குமப் பிரப்ஞ்சத்தி லொடுங்கச் சூக்குமப் பிரபஞ்சம் மூலப் பகுதியில் ஒடுங்கி இறுதி



யாகச் சர்வ வியாபகப் பொருளாகிய பரத்தி லொடுங்கிய நிலையைப் ‘பாத்தில் மறைந்தது பார் முதற் பூதம்’ என்பது குறித்ததென்றும் மேற் கூறிய கொள்கை யுடையார் கூறுவர்.

“மாலையினிடத்தில் உண்டாகின்ற பாம்பு என்ற பொய்யாகிய எண்ணம்போல (விபரீத புத்தியை உண்டாக்குவதும்) பஞ்ச பூதங்களும் தனித்தனியே யிருக்கும் தம் தன்மையைவிட்டு மாறி ஒன்றாகச் சேர்ந்ததனாலானதும் (இருத்தல் பிறத்தல் பருத்தல் வளர்தல் தேய்தல் அழிதல் என்ற உடலுக் குண்டாகின்ற அறுவகையாக) விகாரப்படுதலையுடையதும் (தேவர் மனிதர் விலங்கு தாவரம் என்னும், பாகு பாடு பொருந்தியதுமான மிக்க பிறப்பு எவரைப் பார்த்த மாத்திரத்தில் ஒழிந்து விடுமோ, வேதங்களின் முடிவான உபநிடதங்களிற் கூறப்படுகின்ற பொருளா யிருப்பவராகிய அக்கடவுளை இலங்கையிற் (சென்று அரக்கருடன்) போர் புரிந்து அவரை வென்றவராவர் என்று சொல்வார் (தத்துவ ஞானிகள்)” என்று இப்பாட்டு விளக்கப்பட்டிருப்பது காண்க.

இப்பாட்டிற்கூறிய மயக்கக் காட்சிபோல, அடுத்த பாட்டில் கடலைக் கடக்கப் பேருருவங்கொண்ட அநுமான் பொன்னுலக மாகிய தேவ லோகத்தைக் கண்டபோது, அது பொன்னுடான இலங்கையோ என்று சந்தேகித்தற் கேதுவான மயக்கக் காட்சி கூறப்பட்டிருத்தல் கவனிக்கத் தக்கது. அம் மயக்கக் காட்சிக்கு இம்மயக்கக் காட்சி தோற்றுவாய் செய்தது போலும்.

## கடல் தாவு படலம்.

2. வன்றந்த வரிகொள் நாகம் வயங்கனல் உமிழும் வாய,
பொன்றந்த முழைகள்தோறும் புறத்துராய்ப் புரண்டுபோவ,
நின்றந்தம் இல்லான் ஊன்ற நெரிந்துகீழ் அழுந்தி நீலக்
குன்றந்தன் வயிறுகீறிப் பிதுங்கின குடர்கள் மான.

இ - ள்:—(மகேந்திர மலைமீது ஏறி நின்று இலங்கை சேர்தற்குப் பேருருவங் கொண்ட) அநுமான் கால்கள் அழுத்த, (அவன் உடற் பாரத்தினால் அந்த) மலை நெரிந்து கீழே அழுந்தியதனால், அதன் வயிறு பிளந்து பிதுங்கின குடல்கள் போல (பெரியமலைப்) பாம்புகள் (தாம் தங்கியிருந்த) குகைகளிலிருந்து வெளியே நெளிந்து பெயர்ந்து போவனவாயின.

வல் தந்தம் வரிகொள்—வன்மையான பற்களையும் (உடல்) வரிகளையும் உடைய. அனல், விஷத்தைக் குறித்

தது. வாய - வாயை உடையன. பொன் தந்த முழை— (சுரங்கங்களில்) பொன்னைத் தருகின்ற குகைகள். உராய்- பெயர்ந்து (சிந்தாமணி); உலாவி (புறநானூறு). 'உராவி' உராய் என வந்தது. அந்தம் இல்லான், அநுமான் சிரஞ்சீவி என்பதைக் குறித்தது. குடர், குடல் என்பதன் விகாரம். மான - போல.

[அநுமான் கால் ஊன்றிய அதிர்ச்சியால் வெருண்டு அந்த மலைப் புலிகள் இன்னும் மயிர் முளையாத கண் திறவாத தம் இளங்குட்டிகளை வாயிற் கௌவித் தூக்கிக் கொண்டு ஓடலுற்றன.]

3. தாரகை சுடர்கள் மேகம் என்றிவை தவிரத் தாழ்ந்து
பாரிடை அழுந்துகின்ற படர்நெடும் பனிமாக் குன்றம்,
கூருகிர்க் குவவுத்தோளான் கூம்பெனக், குமிழிபொங்க,
ஆர்கலி அழுவத் தாழும் கலமென லாயிற்றன்றே.

இ - ள்:—நட்சத்திரங்கள் சூரிய சந்திரர்கள் மேகம் என்ற (தன் உச்சிக்கு அடுக்க உள்ள) பொருள்கள் (மேலே செல்லுதல் போலத் தன்னினின்று) நீங்காநிற்கப், பூமியில் அழுந்துகின்ற அந்த மலை, (தன்மேல் நின்ற) அநுமான் பாய்மாம் போலத், தான், சமுத்திரத்தில் குமிழிகள் எழ முழுகுகின்ற மாக்கலமென்று சொல்லும்படி யாயிற்று.

தாரகை - நட்சத்திரம். என்ற இவை, என்றிவை யெனத் தொக்கது. தவிர - நீங்க. கூர்உகிர் - கூர்மையான நகம். குவவு - திரட்சி. கூம்பு - பாய்மரம். ஆர்கலி - கடல். அழுவம் - பரப்பு; ஆழம். கலம் - கப்பல்.

"பூமியை ஆர்கலி யழுவமாகவும், அப் பூமியில் தாழ்ந்து உட்புகும் மகேந்திர மலையை அக்கடலில் முழுகிப்போகும் மாக்கல மாகவும், அம்மலை மீது நின்ற அநுமானை அம் மாக்கலத்தின் மீதுள்ள பாய்மரமாகவும், அக்காலத்து மலையின் மேற்புறத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களையும் சுடர்களையும் அம் மாக்கலம் முழுகுங் காலத்துத் தோன்றும் நீர்க் குமிழிகளாகவும் கொள்க. 'மேகந் தவிர' என்று கூறியது, இயற்கை பற்றியதே யன்றி, உவமையை நிறைத்தற்காகவன் றென்க." உவமை நிறைத்தற்காகவன்றென்று கொள்ளாமல், உவமானத்தில் மேகத்தை வெண் மேகமாகக்கொண்டு, உவமேயத்தில் நுரையை வருவித்து 'மேகம் நுரையாகவும்' என்று சேர்த்துக் கூறலாம். கம்பர் உவமான உவமேயங்கள் கூறுங்கால், சில சமயங்களில், அவைகளிற் சில பகுதிகளைக் கூறாது உய்த்துணரவைத்த லுண்டாதலால்.

(இன்னும் வரும்.)

# செலவு

(வெருலாம் பிரபு பிரான்ஸிஸ் பேகன் என்பவர் இங்கிலீஷில் எழுதியது.)

(533-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வே. நாராயணையர், M. A., M. L., மொழிபெயர்த்தது.

செலவிடுதற் கென்று, செலவிலும் பேர் நிலைக்கவும் நற் செயல்களில் பயன்படவுமே, நாம் செல்வம் பெறுவது. ஆகவே, அதிகப்படியான விஷயங்களில் தகுந்தவாறு அளவிட்டே செலவிடவேண்டும். ஆயினும், பரலோக சுகத்திற்காகத் தன் பொருள் முழுவதையும் துறப்பதுபோல, தன் நாட்டிற்காகவும் செலவிடுதல் தகும். சாதாரண விஷயங்களிலோ, சொத்துக்குத் தகுந்தவாறு செலவிடல் வேண்டும். செலவு விஷயங்களை யெல்லாம் தன் மேற்பார்வைக் குள்ளாக்கவேண்டும். சேவகர் மோசஞ்செய்து துர்விநியோகப்படுத்த இடம்கொடுக்கலாகாது. எவ்விதம் செலவிட்டால் மதிப்பாக இருக்குமோ, வாஸ்தவச்செலவிலும் அதிகம் செலவிடுவதாக வெளித்தோற்றத்தில் தோற்றுமோ, அவ்விதம் செலவிடவேண்டும். மெய்யாக, ஒருவன் வரவு செலவு இரு புறமும் ஒக்கச் சரிப்படுத்த விரும்புவானாயின், நித்தியச் செலவைத் தன் வருமானத்தில் நேர்பாதிக்குள்ளேயே ஆக்கவேண்டும்; பணக்காரனாக விரும்புவானாயின், மூன்றில் ஒரு பங்குதான் செலவிடலாம்.

மிகப்பெரியவனா யிருந்தாலும், தன் சொந்தச் சொத்தைக் கவனித்துப் பார்ப்பதில் ஒருவித அவமானமும் இல்லை. ஆயினும், சிலர், சோம்பலினால் மட்டுமே யன்றி, உள்ளே புகுந்துபார்த்தால் ஒருவேளை சொத்துக்குறைந்து சீர்குலைந்து இருப்பதாகத் தென்பட்டால் வருந்தவேண்டியிருக்குமே யென்று பயந்தும், சொத்தைப்பற்றிச் சிறிதும் கவனியாமல் இருக்கின்றனர். புண்ணைக்கிளறி மருந்திடாமல் மூடிவைத்தால் குணமாகுமோ?

தன்சொத்தைத் தானே நிர்வகிக்க முடியாவிட்டால் சரியான வேலைக்காரரைத் தேர்ந்தெடுத்து நிர்வகித்து, அடிக்கடி அவர்களை மாற்றவும் வேண்டும். புதுச்சேவகர் பயந்து நடப்பர், வஞ்சிப்பதில் அவர்புத்தி கூர்மையடைந்திராது. தன் சொத்தை நேரில் கவனிக்க முடியாதவன், தன் வருமானம் செலவு இவைகளைத் திட்டப்படுத்த வேண்டும்.

ஒருவன் ஒரு துறையில் அதிகம் செலவிட விரும்புவானாயின், மற்றொரு துறையில் அதற்குத் தகுந்த அளவு செலவைச் சுருக்கவேண்டும்; வீட்டுச்செலவு அதிகமானால், குதிரைச்செலவைச் சுருக்கவேண்டும். மற்றும் இப்படியே; எல்லாச் செலவுகளிலும் தாராளமாயிருப்பவன் கேடுறாது தப்புவது அரிது.

சொத்தின்பேரிலுள்ள கடனைத் தீர்ப்பதில், அதிக அவசரமும், அதிக தாமதத்தைப்போலவே கேடு விளைக்கக் கூடும். ஏனெனில், அவசர விற்பனை, வட்டிகொடுப்பதைவிட நஷ்டமாக்கிவிடக்கூடும். மேலும், கடன் தீர்ந்ததும், மறுபடி கடன்வாங்க நேரிடும். கஷ்டம் தொலைந்தால் மறுபடியும் பழையவழிக்குத் திரும்பிவிடுவானன்றோ? படிப்படியாகக் கடனையடைப்பவனோ, அம்முயற்சியாலேயே செட்டுத்தனத்தில் பழகி, சொத்துக்கு இலாபம் வருவதுடன், தானும் சீர்திருந்தியவனாகிறான். உண்மையிலே, கடன்பட்டசொத்துள்ளவன் சிறுகாரியங்களையும் அவமதிப்பின்றிக் கவனித்துப்பார்க்கவேண்டும்; சாதாரணமாக, சிறு செலவுகளைக் குறைப்பது, சிறு வருமானங்களைத்தேடித் திரிவதைப்போல் அவ்வளவு இழிவானதன்று. ஒரு தடவை துவக்கிவிட்டால் நீடித்திருக்கும் செலவு விஷயங்களில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; மறுபடி வராத செலவு விஷயங்களிலோ, அப்படியல்ல; தாராளமனதுடன் பெருந்தன்மையாய்ச் செலவிடலாம்.

———:[ * ]:———

குறள் நானூறு

பல பண்டிதர்களும் அறிவாளர்களும் கூடிச் சாமானிய ஜனங்களுக்காகத் திரட்டியுதவிய நூல்; எளிய இனிய தமிழில் கருத்துரை, அரும்பதவுரை, இங்கிலீஷிலும் கருத்துரை, இவைகளோடு விரைவில் வெளிவரும்—விலை நாலணாதான். இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர் - சென்னை.

# இலங்கையும் இலங்கையரும்*

(597-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

Rev. F. கிங்ஸ்பேரி, B.A., சென்னை.

## இலங்கைத் தமிழர் வழக்க பழக்கங்கள்

இந்திய தமிழரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், சில விஷயங்களில் யாழ்ப்பாணத்துத் தமிழர் விசேஷித்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.



தோண்ட்ரா தீபஸ்தம்பம்.

(1) கல்வி—இலங்கையிலே யாதொரு சர்வ கலாசாலையுமில்லையாகையால், உயர்தரக் கல்வி கற்றுத்தேறினவர்கள் இந்தியாவைப் போல அவ்வளவதிகங் காணப்படாவிடினும், மூலாதாரக் கல்வி கற்றவர்களோ, நூறுபேருக்கு நாற்பதுபேரளவுண்டு. இந்தியாவிலோ எழுத வாசிக்கத்

தெரிந்தவர்கள் நூறுபேருக்கு ஆறுபேரே. அன்றியும், படிப்பு விஷயத்தில் இந்தியாவிலே ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள பேதம் இலங்கையில் இல்லை. சிறுவர்களைப் போலவே சிறுமியர்களும் பள்ளிக் கூடங்களுக்குச் சென்று படித்து வருகிறார்கள். இலங்கைச் சட்டப்படி, சிறுவர், சிறுமியர், யாவரும் கட்டாயம் பள்ளிக்கூடங்களுக் கனுப்பப் படவேண்டும் என்பது சாதாரண விதி. ஆயினும் இச் சட்டம் யாழ்ப்பாணத்தாருக்கு அவசிய



செக்காடுதல்



மில்லையென்று விடப்பட்டது; ஏனெனில், சட்டம் வருவதற்கு முன்னமே, யாழ்ப்பாணத்துத் தமிழர், தங்கள் சிறுவரையும் சிறுமியரையும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வந்தனர்.

விவாகம்—சிறுவர் சிறுமியர் விவாகம் யாழ்ப்பாணத்திற் கிடையவே கிடையாது. பிராமணர் கூடத் தங்கள் பெண்கள் ருதுவான பின்பே விவாகஞ் செய்து கொடுப்பார்கள். வாலிபர்கள், தாங்களே சம்பாதித்துத் தங்கள்



தோண்ட்ராவில் சிதைவுண்ட பழைய கட்டடங்கள்.

மனைவி மக்களை ஆதரிக்கக் கூடிய நிலைக்கு வரும்வரையில், விவாகஞ் செய்வதில்லை.

பெண்களுக்கு மரியாதை—இந்தியாவிலே பாமர ஜனங்களில் மட்டும் மனைவி புருஷனோடு பேசும்போது,



பொல்லநறுவையில் சிதைவுண்ட பழைய கட்டடங்கள்.



அவனை நீ என்பாள்; மற்றப்படி மனைவிமார் தங்கள் புருஷரை நீங்கள் என்று சொல்லவேண்டும். புருஷனோவெனில், எவ்வளவு படித்தவனாயிருந்தாலும் மூடனாயிருந்தாலுமே, மனைவியை நீ என்பான். யாழ்ப்பாணத்திலோ, இப்படியில்லை. அங்கேயும் பாமர ஜனங்கள் மட்டும், புருஷனும் மனைவியும் ஒருவரை யொருவர் நீ என்பார்கள். சிறிது படித்தவர்களுக்குள்ளேயோ, மனைவி புருஷனை நீர் என்பாள்; புருஷனும் மனைவியை நீர் என்பான். இருவரும் ஒருவரை யொருவர் சமமென்றே எண்ணி நடப்பதும் நடத்துவதும் வழக்கம்.

மதவிஷயத்திற் சுயாதீனம்—யாழ்ப்பாணத்துத் தமிழர் ஹிந்துக்கள், சிவமத அனுசாரிகள். ஆயினும் இவர்களுக்குள்ளே பல்லாயிரவர் கிறிஸ்தவர்களாகி, கிறிஸ்தவமத சடங் காசாரங்களை அநுஷ்டிக்கிறார்கள். எனினும் இந்துக்களாலே புறம்பே தள்ளப்பட்டவர்கள் அல்ல. சில கொடுஞ் சைவரைத் தவிர, மற்றவர்கள் எல்லாரும், தங்கள் பந்துக்களில் கிறிஸ்தவர்களானவர்களையும் தங்கள் வீடுகளிலேயே வைத்திருப்பார்கள், உடனுண்ணுவார்கள். கிறிஸ்தவர்களுக்கும் சைவருக்கும் விவாகம் நடப்பது அபூர்வமல்ல. கிறிஸ்தவன் ஒருவன் ஹிந்துப் பெண்ணை விவாகஞ் செய்ய விரும்பினால், தங்கள் மதப்படி விவாகஞ் செய்யத் தடையிருந்தாலும், தேச சட்ட விவாகம் (Civil Marriage) செய்து கொள்ளலாம். இப்படியே இலங்கை முழுவதிலும் ஹிந்துக்களும் பௌத்தர்களும், பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் விவாகஞ் செய்வதுண்டு. இதனாலே யாதொரு கஷ்டநஷ்டங்கள் இல்லை. இந்தியாவிலே, இராச்சிய விஷயங்களிற்கூட, வர்ண பேதங்களும், மத பேதங்களும் கவனிக்கப் படுகின்றன. இங்கேயுள்ள கிறிஸ்தவர்கள், ஹிந்து மதத்திலிருந்து வந்தவர்களின் பிள்ளைகளாவர்; அல்லது தாங்களே ஹிந்துமத அனுசாரிகளாயிருந்தவர்கள். சட்டசங்கங்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளும்போது, ஹிந்துக்கள் ஹிந்துக்களுக்கே வோட் (Vote) கொடுக்கவேண்டுமாம். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களுக்கே வோட் கொடுக்கவேண்டுமாம். இப்படிப்பட்ட சட்டம் இலங்கையில் இல்லை. சமூகப்படி தெரிதல் (Communal representation) இலங்கையில், இந்தியாவைப்போல அதிகமில்லை. மாகாணப்படி தெரிதல் (Territorial representation) தான் இலங்கையிற் பெரும்

பாரும் உண்டு. இப்படி நான் எழுதுவதினால், யாழ்ப்பாணத்துத் தமிழருக்குள்ளே குறைகளில்லை என்று சொல்ல வந்தவனல்ல. யாழ்ப்பாணத்தாருக் குள்ளும், "ஆதி திராவிடர்" களைத் தாழ்ந்த நிலையிலே விட்டிருத்தல் நாகரிகமுள்ள தமிழருக்கு அவமானமேயாம். விவாக



போல்ல நாகுவா அருவியுள்ள தடாகம்.



விஷயத்தில் ஸ்ரீதனம் பேசி, "இத்தனையாயிரம் ரூபா நீர் கொடுத்தால்தான் உம்முடைய மகளை என் மகன் கலியாணஞ் செய்வான்" என்பது, தம் ஆண்மக்களை விற்பது தானே? ஓ யாழ்ப்பாணத்தாரே! நீங்கள் வேறு எத்தனைதான் பெருமையுற்றிருந்தாலும், இஃது ஒன்று உங்களுக்குப் பெரும் அவமானமே. "இப்படிப்பட்ட தீமை இந்தியாவிலும் இல்லையோ?" என்று நீங்கள் உங்களுக்கே சமாதானஞ் சொல்லிக்கொள்ள வேண்டா.

யாழ்ப்பாணத்து ஸ்திரீகள் ஆடை ஆபரணங்களில் மட்டுக்கு மிஞ்சின ஆசையுடையவர் என்பது, யாழ்ப்பாணத்தாரை நன்குயறிந்த பலர் அபிப்பிராயம். ஆடையாபரணங்களிலே ஆசை எல்லாத் தேசத்து ஸ்திரீகளுக்குமுண்டு (புருஷர்களுக்கு முண்டு). இதிலே யாதொரு தப்பிதமுமில்லை. ஆனால் மட்டுக்கு மிஞ்சின ஆசையே தப்பிதம.

(இன்னும் வரும்)

## இயற்கை ஆராய்ச்சி.

### மனிதர் சரீர வளர்ச்சி விவரம்:—

சாதாரணமாய், ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போது 19½ அங்குல நீளம் இருக்கும். முதல் வருஷத்தில் 9 அங்குலமும், இரண்டில் 3½ அங்குலமும், மூன்றில் 2½ அங்குலமுமாக வளரும். பிறகு 13 வருஷகாலம் வருஷத்துக்குச் சராசரி 1½ அங்குலமே வளரும். 16வது வயதுக்கு மேல் வளர்ச்சியின் வேகம் இன்னும் மட்டுப்படுகிறது. 17வது வயதில் 1¼; 18ல் 1; 19ல் ¾; 20ல் ½ அங்குலமும்தான் வளர்ச்சி, பின்னுமோர் 5 வருஷகாலம்தான், வருஷத்துக்கு 1/5 அங்குலம் விதமாக வளர்ச்சியுண்டு. ஆகவே 25 வயதோடு வளர்ச்சி முடிந்துவிடுகிறது.

முழு வளர்ச்சியை அடைந்த உத்தம புருஷனது உயரம், அவனது பாதத்தின் அளவுக்கு 6¾ பங்கு அதிகமும்; உத்தம ஸ்திரீயின் உயரம் அவள் பாதத்தின் நீளத்துக்கு 6¼ பங்கு அதிகமும் இருக்கவேண்டும்.

உடலின் உறுப்புக்கள் எல்லாம் ஒரேமாதிரி வளருவதில்லை. அவை வெவ்வேறு மாதிரியாக வளர்கின்றன

உதாரணமாக:— கால்கள்:—பிறவியில் இருந்த அளவை விட 3 வருஷ முடிவில் 2 பங்கு அதிகமாயும், 12 வருஷ முடிவில் 3 பங்கு அதிகமாயும், 25வருஷ முடிவில் 5 பங்கு அதிகமாயும் வளர்கின்றன.

பாதம்:— 10 வயதுவரை தலையின் நீளத்தைவிடக் குறைந்தும், 10வது வயதில் அதே அளவாயும், அதன் பின் அதைவிட மிகுந்தும் காண்கிறது.

ஆணும் பெண்ணும், அளவில் ஒரே கிரமமாய் வளர்ந்து வருவதில்லை. ஆண் பிள்ளைகள் 16-17 வயதுகளில் தான் ஜாஸ்தியாக வளர்கின்றனர். பெண்கள் 14வது வயதில் தான் வளர்ச்சி அதிகம். பெண்கள் தமது 16வது வயதில் முழு உயரத்தையும், 20வது வயதில் முழு கனத்தையும் அடைகின்றனர். பெண்களைவிட ஆண்பாலார் மந்தமாகவே வளர்ச்சி யடைகின்றனர்.

11 வயதுவரை, பெண்களைவிடப் பையன்களே பலசாலிகள். 11வது வயது முதல் 17வது வயது வரை, பெண்கள் பையன்களை விட அதிக பலசாலிகளாகக் காணப்படுகிறார்கள். அதற்குப் பிறகு பையன்கள் மறுபடியும் பலத்தில் மிகுந்து விடுகிறார்கள்.

மயிர்:—நாளொன்றுக்கு ·018 அங்குலமாக வளருகிறது. ஆகையால் 66 நாளில் ஒரு அங்குல நீளம் மயிர் வளரும். ஒவ்வொரு மயிருக்கும் ஆறு வருஷத்துக்கு மேல் உயிர் இல்லை. அதற்குப் பின் அது உதிர்ந்துவிடுகிறது.

கண் இமை மயிர்:—நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் நாலைந்து மாதத்துக்கு மேல் இருப்பதில்லை.

நகம்:—வெகு வேகமாய் வளர்கிறது. நாலுமாத காலத்தில், இருந்த நகம் முற்றிலும் போய், வேறு நகமாக மாறிவிடுகிறது.

மூளை:—பிறந்த குழந்தையின் மூளை 10 அவுன்ஸ், அதாவது அரையேகாலரைக்கால் பவுண்டுதான் இருக்கும். புருஷனது மூளை மூன்றேமுக்காணி பவுண்டும், ஸ்திரீயின் மூளை 2⅝ பவுண்டும் என்று, ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர்.

(சுருக்கி எழுதியது) —தமிழர் நேசன்.



## சீமைக் கடிதம்

(483-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமதி M. லக்ஷ்மி அம்மாள்,
(B. A. Hons) லண்டன்.




களுக்கு மூன்றுமாதம் கோடை ரஜா. என் சிநேகிதிகளிற் சிலர் ஸ்காண்டிநேவியாவில் பிரயாணம் செய்வதாயும், சிலர் லண்டனிலேயே பாதிநாளிருந்து படிப்பதாயும், உத்தேசித் திருந்தார்கள். வின்ஸருக்குப் போய்த் திரும்பிய தினமுதல், லண்டனுக்குப் புறம்பே வீசும் காற்றைப்பற்றி எனக்கு அவக்கை பிடித்திருந்தது. ஆனால் அயலிடங்களில் எனக்குத்தெரிந்த ஜனங்கள் யாருமில்லை. சமுத்திரக் கரை, ஏரிக்கரை ஊர்களில், கோடைநாளில், கூட்டமும் வேடிக்கையுமா யிருக்கும்; அப்படிக்கின்றி, சாதாரணமாய்ப் பட்டணவாசத்தார் தேடாத கிராமாந்தரத்தில் ஊர் ஜனங்களுடன் பழகி, அமரிக்கையாய் வாழவேண்டுமென்றது தான் என்னுடைய கோரிக்கை. பேப்பர் விளம்பரங்களைக்கொண்டு நானாக விசாரித்ததில், வசதியான தங்குமிடம் சடுதியில் அகப்படவில்லை. அச்சமயத்தில் அகஸ்மாத்தாய் 'சர்வஜன அத்தைமார் கம்பெனி' யைப் பற்றி எனக்குத் தெரிய வரவே, அவர்கள் மூலமாய் வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டேன். தனக்கு வேண்டிய ஜனம் 'சொல்லிக்கொடுத்த வார்த்தையும் கட்டிக் கொடுத்த சாதமும்' செலவாக விட்டு, கையில் கொஞ்சம் தக்ஷிணைக் காசு மட்டும் உண்டானால், இவ்வித உறவினரிடம் எவரும் எக்குறையையும் சொல்லித் தீர்த்துக்கொள்ளலாம். அயலிடங்களிலிருந்து வந்து சொற்பச் சம்பளத்தில் தனிக் குடித்தனம் செய்யும் பெண்களுக்குப் பல வகையாலும் உதவிசெய்வது தான், இவ்வித காரியஸ்தலங்களின் முக்

கிய நோக்கம்; எனினும், அவற்றால் மற்றவர்களுக்கும் உபகார முண்டு. அவசரமாய் வேலை வேண்டுவோரும், வேலைக்காரர் வேண்டுவோரும், தங்கும் விடுதி கிடைக்காமல் தவிப்போரும், பாஷை தெரியாமலும் பட்டண வாசப் பழக்க மில்லாமலும் பலவித இக்கட்டுக்களுக்குள் மாட்டிக்கொள்ளும் அன்னியரும், பட்டிக்காட்டாரும், அங்கு வருவது சகஜமாம். உள்ளே போகும் வழி நெடுகவும், 'ஆபீஸ்' அறை வாசல்களிலும், கதவைத் தட்ட வேண்டாம்; சும்மா உள்ளே வரலாம். என்று விளம்பரங்கள் ஒட்டியிருப்பது, பயந்த சுபாவமுள்ள ஜனங்களைத் தைரியப்படுத்துவதற்காகப் போலும். அந்தரங்கமாய்ப் பேச விரும்புவோர் தனியறைக்குப்போக, மற்றவர்களுடன் வேலை நடக்கும் விதம், 'கரூர்' தான். வந்தவர்கள், வார்த்தையை வளர்க்கப் பார்க்கும்போது, காரியத்திலே கண்ணான பெண் ஒருத்தி, வெகு சாதுரியமாயும் பக்ஷமாயும் அவர்களைக் குறுக்குக் கேள்விக் கேட்டுத் தக்க பதில் சொல்லி வெளியனுப்பும் தீவிரமும், கண்டு வியக்கத் தக்கதே.

நான் குடியிருக்கப்போன வான்டேஜ் என்னும் ஊர், வயல்களுக்கு மத்தியில் உள்ள ஒரு கிராமம். முக்கும்



வான்டேஜ் கிராமம்



முடுக்குமான ஏழெட்டுத் தெருக்கள் உள்ளது. மேலைக் கோடியில் ஒரு கோயிலும் (சர்ச்சு) புதயலிடமும், யுத்தத்தில் மரித்தவர்களுக்கு ஞாபக சின்னமாய் ஊர் நடுவில் ஒரு சிலுவைக் கட்டடமும் இருந்தன. அவ்வூரில் ஒரு ஹோட்டலைத் தவிர வேறு இரண்டடுக்குமாடி வீடே கிடையாது; அநேக வீடுகளுக்கு மாடியே யில்லை. அவ்வூராரில் பாதிப்பெயர்கள் விவசாயத்தாற் பிழைப்பவர்கள். தோட்டமும் வீடுமாய் வாழ விரும்பியும், தமது உழவுக் குதிரைகளுக்கும் பசுக்களுக்கும் பன்றிகளுக்கும் வேண்டிய கொட்டகை சௌகரியங்களை உத்தேசித்தும், நிலசுவான்களும், கூலிக்குப் பயிர்வேலை செய்பவரும் அநேகர், ஊருக்கு வெளியே தனித்தனியா யுள்ள மனைகளிலும் குடிசைகளிலும் குடியிருந்தார்கள். பயிர்வேலை பெரும்பாலும் யந்திரக் கருவிகளால் நடப்பதால், அறுப்புக் காலத்தில் கூட, வயல்களில் அதிக ஜனங்கள் இல்லை. யுத்தகாலத்தில், ஆட்கள் கிடையாமல், நீராப் பொறியாகத் தம் வயல்களைத் தாமே பயிர்செய்த சொற்ப சொத்துள்ள கனவான்கள் பலர், அதனால் கிடைத்த லாபத்தைக்கண்டு, பின்னால் அவ்வழக்கத்தைக் கைவிடவில்லை யென்றும்; இந்த நாளில் விவசாயத்தால் பிழைப்பது வெகு கஷ்டமானதால், பயிர்வேலையைக் கண்ணியக் குறைவென்று இப்பொழுது பாராட்டுவதில்லை யென்றும், நான் கேள்விப்பட்டேன். குழந்தைகளின்றி, தக்கசொத்தும் அந்தஸ்துமுள்ள வயது சென்ற தம்பதிகளிருவர், வீட்டிலும் தோட்டத்திலுமுள்ள சகல வேலைகளையும் தாமே செய்து வந்தனர். யுத்தகாலத்தில், தேசத்துக்குத் தம்மாலான உபகாரமாக, அவர்கள், வேலைக்காரரில்லாமல் வாழ்ந்தார்களென்றும்; அதுவே அவர்களுக்குச் சௌகரியமாகவும் சந்தோஷமாகவும் தோன்றிப்போய் விட்டதென்றும்; தனித்த மனையில் கூப்பிட்ட குரலுக்கு ஆளில்லாமல் அவர்கள் இருப்பதைக் கண்டு விசாரப்பட்ட உறவினர் அடிக்கடி ஏற்படுத்தின வேலைக்காரர் ஒருவரும் அவர்களுக்குத் திருப்தியாக வில்லையென்றும்; தள்ளாதவர்களென்று தங்களை யாராவது சொல்லக் கேட்டால், அவர்களுக்கு வெகு கோபம் வந்துவிடுமென்றும்; அவர்கள், தம் உறவினர் குழந்தைகளைப் படிக்கவைத்து உபகாரம் செய்வதாயும், நான் கேள்விப்பட்டேன். பிற்பாடு ஒருநாள் நான் அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். அவ்வூரில் நான் பார்த்துப் பேசிய மற்ற ஸ்திரீகளைவிட, அந்த வீட்டு அம்மாள் அதி

கம் படித்தவளாயும், படிப்பு விஷயங்களில் ஆசையுள்ள வளாயும் தோன்றினாள். அவள் கணவருக்குக் கொஞ்சம காது செவிடு; அவரிடம் பேசுவது கஷ்டமா யிருந்தது. டீ யுடன் நாங்கள் சாப்பிட்ட சில பக்ஷணங்களை, அவருடைய பதினான்காவது பிறந்த நாளுக்குச் செய்தவை என்று சொல்லி, அவர்களிருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அவருக்கு ஈரேழு–77-வது—ஆண்டு நிறைவு கழிந்து, ஒருவார மாயிற்றாம்.

அவ்வூர் ஸ்திரீகள் வருந்தி விருந்தோம்பியும், எளியவர்களுக் குதவியும், தாராளமாய்ப் பண்டங்களைச் செலவிட்டார்களே யன்றி, பண விஷயத்தில் வெகு செட்டா யிருந்தார்கள். வேண்டிய சொத்துள்ளவர்களும், பீங்கான், வெள்ளிப் பாத்திரங்களிலும், மர சாமான்களிலும், நீடித் தனுபவிக்கக் கூடிய உடைமைகளிலும், தங்கள் பொருளைச் செலவிட்டு, தினப்படியாகச் சிக்கனமாய் உண்டு உடுத்து வாழ்ந்தார்கள். ஒருவரை யொருவர் தூண்டித் துளைத்து யோக க்ஷேமம் விசாரித்தும், தற்கால நடவடிக்கைகளைப் பழித்தும், சாரமாய் சாவகாசமாய் வம்பளந்தும், அவ்வூரார் சிலர்பேசும் பேச்சையும்; வெள்ளிக் கிழமைச் சந்தை யிரைச்சலையும்; நடுத்தெருவில் பாண்டி கீறி விளையாடும் குழந்தைகளின் சண்டையையும் கேட்டால், கிராமாந்தர வாடிக்கைகள், எங்கும் ஒன்றுபோலுள்ளன வென்று தோன்றும்.

அவ்வூரில், சகல ஜனங்களுக்கும் பொதுவான ஒரு 'போர்டு' பள்ளிக்கூட முண்டு. சுற்று முள்ள குக்கிராமங்களிலிருந்தும் குழந்தைகள் அப்பள்ளிக் கூடத்துக்கு வருவ துண்டு. ஏழைப் பிள்ளைகளுடன் சேர்ந்தால் தம் குழந்தைகளுடைய பேச்சும் நடத்தையும் 'கொச்சை' யாகி விடுமென்று பயந்து, அவ்வூர்ச் செல்வந்தர், தம் குழந்தைகளை அயலூர்களுக்கு, நாகரிகமான 'தனிப் பள்ளி' க்கூடங்களுக் கனுப்புவார்கள். குழந்தைகளுக்குப் படிப்புச்சொல்லிக் கொடுப்பதற்குத் தோதகமாய் இந்த நாளில் ஏற்பட்ட புதிய முறைகளும், கருவிகளும், விளையாட்டுச் சாமான்களும் சில, அந்தக் கிராமப் பள்ளிக்கூடத்திலும் வழங்கி வந்தன.

என்னைத் தவிர வேறு இந்தியரெவரையும் அவ்வூரார் பார்த்த தில்லை. முதலில் அநேகர் நான் சீன தேசத்தவள் என்றும், ஜப்பானிய ஸ்திரீ என்றும் நினைத்திருந்தார்கள்.



அவர்கள் ஒருவருக்குமே நம் தேசத்தைப்பற்றி விசேஷமாய் ஒன்றும் தெரிய வில்லை. பேபர்களிலும் கதைப் புத்தகங்களிலும் வாசித்ததைக் கொண்டு, இந்தியர்கள் பெரும்பாலர் பொன்னும் பீதாம்பரமும் தரித்து வீண் பொழுது போக்கப்பட்டவர்க ளென்றும்; ஏழை ஜனங்களைக் கூலிக் கமர்த்திக்கொண்டு, இங்கிலீஷ்காரரே பாடுபட்டுக் கஷ்ட ஜீவனம் செய்து, இந்தியா தேசத்தில் நடக்க வேண்டிய சகல வேலைகளையும் எடுத்து நிறுத்துகிறார்க ளென்றும், அவர்கள் நினைத்திருந்தார்கள். இங்கு வரும்வரை நான் இருந்தது, தென்னிந்தியாவிலே, உஷ்ண பூமியில்தான் என்று கேட்டுத் தெரிந்து கொண்ட கனவான் ஒருவர், நான் பார்த்திராத ஓர் அழகான காட்சியைக் காட்டுவதாகச் சொல்லி, ஒரு மேட்டிடத்திலிருந்து, நெடுக வயலும் வரப்பும் மரஞ்செடிகளும் தென்படுவதை எனக்குக் காண்பித்தார். ஏதோ கதைப் புத்தகத்தில் படித்ததைக் கொண்டு, இந்தியாவிலே தக்ஷிண முழுவதும் பாலைவனமென்றும், பசுந்தரையைக் கண்டால் அந்நாட்டார் அதிசயித்து ஆனந்தமடைவார்களென்றும் அவர் நினைத்திருந்தாரென்று பின்பு தெரியவந்தது.

ஊர் சிறியதே யெனினும், அவ்வூராருக்குள் பிரிவுகள் பலவாயிருந்தன. பணத்திலும் சுத்தத்திலும் நாகரிக நடவடிக்கைகளிலும் பரீக்ஷை கொடுத்துத தேறினவர்களும் தவறினவர்களுமாகிய மேலோர், கீழோர் என்ற பெரும் பிரிவுகளுக்குள், எத்தனையோ கிளைப்பிரிவுகளும் இருந்தன. எவரேனும், தம் சொந்தப் பிரிவிலிருந்து தள்ளி நிற்கும் ஜனங்களுடன் காரியார்த்தமாயன்றிச் சிநேக பாவத்தில் பழகினால், அப்பழக்கம், இனம் இனத்தோடு சேருமென்ற கட்டுரையை எடுத்தோதும் பல ஜனங்கள் வாய்க்கு அவலாகி, ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடமாகுமாம். இவ்விதமான பிரிவுகளையும் கட்டுப்பாடுகளையும் மனமொத்து ஏற்றுக்கொண்டு, அவ்வூர் ஜனங்கள், ஒருவரோடொருவர் ஒட்டாது வாழ்ந்தார்கள். யுத்த காலத்துக் கலவரத்தில், சகலரும் தேசத்துக்காக ஒத்துழைத்து உரிமை கொண்டாடிய நாள்களில், இவ் வேற்றத் தாழ்ச்சிகளை ஒருவருமே பாராட்ட வில்லையாம்; ஆனால், அதற்குப் பின்பு, பிறரை அவமதியாது தன் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும் திறமை பொதுஜனங்களுக்கு இன்னும் வாய்க்காத காரணத்தாற்போலும், பல ஜனங்களும் பழைய ஸ்திதிக்கு மாறிவிட்டார்களாம்.

# மதிப்புரை.

(602-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

34. உத்தம பக்தர்—8 பக்தர்களது சரித்திரம்-21 பக்கம்-விலை 2 அணா. 35. ஈச்வ லீலை—64 திருவிளையாடற் சுருக்கம்-88 பக்கம்-விலை 8 அணா.

36. உதயணன் கதை—46 பக்கம்—விலை 5 அணா. இம்மூன்று சிறு நூல்களும் ஸ்ரீ. கா. சு. சேஷகிரி ஐயர் (43, ந்யூஸ்ட்ரீட், மயிலாப்பூர்) இயற்றியன. சில நாட்களுக்கு முன்புதான் மகாமகோபாத்யாயர் பண்டித சாமிநாதையரவர்கள், பல்லாண்டுகளாக அரும்பாடுபட்டு உருப்படுத்திய பெருங்கதை வெளி வந்தது. அவ்வரும் பெரும் நூலின் முற்பகுதியில், "உதயணன் கதை"யை, அவர்கள், யாவர்க்கும் முன் மாதிரியாகும் செந்தமிழ் நடையில் விரிவாய் எழுதியிருக்கிறார்கள். இந்த (36) உதயணன் கதை, நடை மட்டும் வேறுபட்ட அதன் சுருக்கமேயாம். 'அநுமதியின்றி ஒருவன் மைக்கூட்டில் வேறொருவன் பேனாவை முக்கிக்கொண்டால், அதுவுமே சட்டப்படி களவாகும்' என்று சொல்வதுண்டு. கல்விச் செல்வம் மக்கட் கெல்லாம் பொதுவே யெனினும், உலக இயற்கையிலே, "திருவேறு தெள்ளியராதலும் வேறாக" இருத்தலின், "பல தொழிலு மிருக்கக் கல்வி அதிக மென்றே படித்துவிட்ட"வர் பொதுவாய் ஏழைகளாய், "வயிற்றுக்கும் சிறிது ஈய" வழியின்றி வருந்துதலின், நாகரிக நாடுகளி லெல்லாம், மூளைப்பயிர்க்கும் வேலிகோலி, அதன் விளைவுரிமையைப்பற்றியும் சட்டங்கள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். ஆயின், இவ்விஷயத்திலும், 'கள்ளன் பெரிதோ காப்பான் பெரிதோ?' என்னும் வசனத்தின்படி, "நெஞ்சின் நிறை காக்கும் காப்பு" இல்லாவிடின், "சிறை காக்கும் காப்பு" மட்டும் பயன்படா தென்பதற்கு, இத்தகைய நூல்களே சான்றாகும். இச்சிறு விஷயத்தைப்பற்றி இவ்வளவு எழுதியதன் காரணம், இந்நூல் மட்டுமன்று; தமிழ் நாட்டிலே புஸ்தகங்களும் பத்திரிகைளும் நாளுக்கு நாள் மிக்கு வெளிவரும் இந்நாளிலே, இந்நியாயத்தைச் சிலர் அறியாதோ, மறந்தோ, மதியாதோ, ஒழுகுவதேயாம்.

—மா.


குசிகர் குட்டிக் கதைகள்

மூன்று பாகங்களும் சேர்ந்த 22-கதைகள்

சாதாரண பைண்டிங். ரூ. 1-8-0; டக்ஸீன் ரூ. 1-12-0.

பஞ்சாமிர்தம் ஆபீஸ், மயிலாப்பூர்.




# மதுவிலக்கு

(500-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**அபினி விஷயம்.**—சென்ற தாளில் கூறியபடி இந்தியாவிலே அபினி என்னும் சிறு நூலைப் படித்துப் பார்த்துத் தொகுத்தெழுதியது இது. அந்நூல், இந்தியா, பர்மா இலங்கை நாடுகளுக்குப் பொதுவான கிரிஸ்தவ சங்கத்தாரால் வெளியிடப் பட்டது. அச்சங்கத்தார், அகிலதேச மகாசபை (League of Nations) யுள் சில விஷயங்களில் கலந்து பொதுநன்மைக்காக உழைத்துவரும் அகில தேச கிரிஸ்தவப் பாதிரிகள் சங்கத்தாரின் (International Missionary League) வேண்டுகோளின்படி இவ்விஷயத்தை ஆராய்ந்து பார்த்துத் தங்கள் விசாரணையில் தெரியவந்த விஷயங்களை இந்நூலில் வெளியிட் டிருக்கின்றனர். இந்திய மக்களின் க்ஷேமத்தை நாடிப் பிற நாட்டார், பிற மதஸ்தர் இவ்வண்ணம் உழைப்பது யாவராலும் பாராட்டிக் கொண்டாடத் தக்கது. இதுநிற்க :

அபினி ஒரு சிறந்த மருந்துப் பொருள்; இயற்கையில் தானாகவே உண்டாகாது, மனிதர் பயிர் செய்ய விளைவது, ஆயின், சில நோய்களுக்கு அது கைகண்ட ஔஷத மெனினும், வழக்கத்தால் மனிதரைப்பிடித்துக்கொண்டு உயிரையே மாய்த்துவிடும். நோய்க்கு மருந்தாக வைத்தியர் அநுமதிப்படி அதை யுட்கொள்வோர் மிகச் சிலரும், அதன் லாகிரியை விரும்பி வழக்கம் செய்து, அதன் மாய வலையில் சிக்கி மடிவோர் மிகப் பலருமாவர். அபினி விசேஷமாய் விளையும் நாடுகள், சீனாவும், இந்தியாவும், பாரசீகமும், எகிப்துமே; அபினியை உட்கொள்வோரோ, உலகெங்கும் உள்ளார். அபினியால் மனிதருக் குண்டாகும் பெருங்கேட்டை விலக்க எண்ணி, அகிலதேச மகாசபையார், மருந்துக்கும் சாஸ்திர ஆராய்ச்சிக்கும் ஆண்டுதோறும் உலகத்திலே எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு அபினியை மட்டும் விளைவிக்கும்படி, இத்தேசங்களைக் கட்டுப்படுத்த முயன்று வருகின்றனர். இம்முயற்சி இதுவரை கைகூடாததன் காரணம், அபினி வியாபாரத்தால் அதிக லாபத்தை அடைந்து வரும் இந்நாடுகள், தங்கள் விளைவைக் குறைக்கச் சம்மதியாமையே. இதற்கு இவர் பல சாக்குப் போக்குக்கள் கூறுவர்.

நமது இந்தியா தேசம் சம்பந்தப் பட்டவரை இனிப் பேசுவோம்: இந்தியாவிலே அபினிப் பயிரின் விளைவு விற்பனை முழுமையும் இந்தியா கவர்ன்மெண்டார் கைக் குள்ளேயே இருக்கின்றது; எனவே, பிறநாடுகள் எக்கேடு கெடினும், இந்தியா கவர்ன்மெண்டார் மனம் வைத்துப் பிரயத்தனப் பட்டால், அபினியினால் இந்தியாவில் உண்டாகும் தீங்கை முற்றிலும் உடனே நிறுத்திவிடலாம். இவ்வண்ணம் செய்யாமைக்குத் துரைத்தனத்தாரின் முக்கிய காரணங்கள் இரண்டேயாம்: (1) நெடுங்காலந்தொட்டு இந்தியர் பல்லாயிரவர்க்கு அபினி யுண்ணும் வழக்கம் ஏற்பட்டிருப்பதால், திடீரென அபினி விளைவை நிறுத்திவிடுவது, அவரது தற்சுதந்தரத்தை முறித்து(!) அனாவசியமாக அவருக்குத் துன்பம் விளைப்பதாகும். இந்த

முகாந்தரம் இந்தியாவிலே செலவாகும் அபினியைப் பற்றியது. (2) பிறநாடுகளுக்கு அபினி அனுப்புவதை நிறுத்திவிட்டால், நமக்குப் பொருள் நஷ்டமேயன்றி, அந்நாட்டார் நன்மை யடையார்கள்; ஏனெனின், இந்தியா நிறுத்திவிட்டால், அபினி விளைவிக்கும் மற்ற நாடுகள் ஏராளமாய் விளைத் துதவி, லாபத்தை யடையும்; பிறநாடுகளில் அபினி உண்பது நின்றுவிடாது.

இந்நூலை வெளியிட்டோர், இந்தியாவிலே எல்லா மாகாணங்களிலும் உள்ள பிரபல வைத்தியர்கள், அநுபவஸ்தர்களுடைய அபிப்பிராயங்களை யெல்லாம் திரட்டி வெளியிட் டிருக்கின்றனர். உதாரணமாக, தக்ஷிணத்தில் மட்டும், டாக்டர்கள் கோமன், குருசாமி முதலியார், மயில்வாகனம், சுப்பராவ், வர்கீஸ் உள்பட 15 பேர் அபிப்பிராயம் கொடுத்திருக்கின்றனர். இதுபோலவே மற்ற மாகாணங்களிலும். இவர்களின் சாக்ஷியம் பொதுவாய் நிரூபிப்பது என்னவெனில் (1) வேலைக்கு வெளியே செல்லும் தாய்மாராலும் பிறராலும் இரண்டு வயது வரை சிசுக்கள் அழாதிருக்கும்படி அபினி கொடுக்கப்படுகிறது; இதனால் பெருந்தீங்கு விளைகின்றது. (2) பல போலிக் காரணங்களை முன்னிட்டும், வழக்கத்தினாலும், இந்தியர் பலர் அபினியை யுண்டும், பானமாக்கிக் குடித்தும், ஹுக்காவில் புகைக் குடித்தும் கெடுகின்றனர். (3) இப்பொழுது இந்தியாவுக்குள் செலவாகும் அபினியில், மிகச் சிறுபாகமே வைத்தியர் அநுமதிப்படி மருந்தாகச் செலவாகின்றது; மிகுதியாவும் அனாவசியமான, தீங்கு விளைப்பதான, செலவே. (4) அபினியை நிறுத்திவிட்டால் மிகமிகச் சிலர்க்கே சிறிது கஷ்டம் நேரிடக் கூடுமேயன்றி, பொதுவாய் நன்மையே உண்டாகும். அபினி வழக்கமுள்ளோர், சிறையில் அடைபட நேர்ந்து வழக்கம் நின்ற பொழுது, முதலில் சில நாள்களுக்கு வருந்தினும், பிறகு சரீரவலிமையும் கொழுப்பும் அதிகரித்து, முன்னினும் அதிக சுகமடைவது பிரத்தியக்ஷம். உண்மை இவ்வாறிருக்க, இந்திய கவரன்மெண்டார் இச் சீர்திருத்தத்தைச் செய்யா திருப்பதன் முக்கிய காரணம், லாகிரி வஸ்துக்களிலிருந்து இப்பொழுது ஆண்டுதோறும் கிடைக்கும் ஐந்தாறு கோடி ரூ வரையி லுள்ள வருமானமேயாம். எவ்வண்ணமாவது இந்நஷ்டத்துக்கு வேறு ஏற்பாடு செய்துகொண்டு, நாட்டைக் கெடுக்கும் இத்தீங்கை வேரோடு விரைவிற் களைவது அவசியமாகும்.

இனி, அயல் நாடுகளுக்கு அபினி அனுப்புவதைப்பற்றிக் கவனிப்போம்: "உலகத்திலே தீங்குகள் நேரத்தான் செய்யும்; ஆனால் தீங்கு செய்வோன் அதனால் நிரபராதியாகிவிடமாட்டான், அவனுக்குத் தண்டனையுண்டு" என்பது விவிலிய வேத வாக்கு. 'நாம் பிறரைக் கெடாவிட்டால் வேறுயாரேனும் கெடுப்பர்; அதனால் நாமே கெடுத்தல் பாதகமில்லை' என்பது நியாயவாத மாகாது. அவனவன் நல்வினை தீவினைப் பயன்களை அவனவன் அநுபவிப்பது திண்ணம்; இஃது, ஒரு மனிதனுக்குப்போல, ஒரு நாட்டார்க்கும் பொருந்தும் ஆதலால், பிறர் எவ்வாறொழுகினும், இந்தியராகிய நாம், நம் மட்டில் தீவினையைத் தவிர்த்தல், நமது கடமையாகும்.

## பல துறைப் பொறுக்குமணிகள்
### பத்திரிகை ஆராய்ச்சி

(540-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### சில்லறைக் கலம்பகம்.

(94) ஆதிகாலத்துப் புஸ்தகங்கள் :—நெடுங் காலமாக இந்தியர்கள் ஓலை ஏடுகளில் எழுதிவருவது தெரிந்த விஷயம். வேறு சில நாட்டார், களிமண் செங்கல்களிலும் செப்புத் தகடுகளிலும் எழுதி வந்தனர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவிலே, ரோம ராஜ்யத்திலே, 'வெல்லம்' என்னும் இலேசான தோலின் மேல் புஸ்தகங்கள் அடிமைகளால் எழுதப்பட்டு, சொற்ப விலைக்கு விற்கப்பட்டன. ஓர் ஆசிரியன் ஒரு நூலை இயற்றினால், ஆயிரம் பிரதிகள் வரை இவ்வாறு எழுதி விற்கப்படும். எழுதத் தெரிந்த அடிமைகள் பலரை வரிசையாக உட்காரச் செய்து, இந்நூலை மெதுவாய் ஒருவன் வாசிக்க, அவர்கள் விரைந்து பிரதி எழுதுவார்கள். அடிமைகளால் அதிகம் செலவில்லாததால், பிரதிகள் 2 ரூ - 3 ரூ வீதம் சொற்பவிலைக்கு விற்கப்படும். இப்புஸ்தகங்கள் நீண்ட தோலில் எழுதி, ஒரு கழியைச் சுற்றிச் சுற்றப்பட்டிருக்கும். இக்கழிகள் இரண்டு முனையிலும் அலங்காரமாயிருக்கும். ஒவ்வொரு பிரதிக்கும் ஒரு மேலுறையுமுண்டு. யுத்த சம்மந்தமான நூல்களுக்குச் சிவப்புறையும் பிரயாணங்களை விவரிக்கும் நூல்களுக்கு நீல உறையும் விவசாய சம்மந்தமானவற்றுக்குப் பச்சை உறையும் இடப்பட்டனவாம். எனவே, ஒவ்வொரு புஸ்தகமும் நன்றாய் அழுத்திச்சுற்றி உறையிட்ட ஒரு சிறு குடையைப் போலிருக்கும். இவ்வாறின்றி இப்பொழுது போலச் சதுர வடிவான புஸ்தகங்கள், ஐரோப்பாவிலே கி. பி. நான்காவது

நூற்றுண்டில் தான் முதலில் தோன்றின. ரோம ராஜ்யப் பிரபுக்கள் பலர் அரமனைகளில் பெரிய புஸ்தகசாலைகளிருந்தன. இவையன்றி, யாவரும் சென்று வாசிக்கும்படியான பொதுப் புஸ்தக சாலைகளும் ரோமபுரியி லிருந்தன. 1900-வருஷங்களுக்கு முன் அந் நகரத்திலே இப்படிப் பட்ட பொதுச்சாலைகள் 29-இருந்தனவாம். எகிப்தியரே முதலில் காகிதம்-பேப்பர்-கண்டுபிடித்தனராம். அந் நாட்டிலிருந்து பிறநாடுகளுக்குப் பேப்பரை ஏற்றுமதியும் செய்தனர். டாலமி பிலடல்பஸ் என்பவன் எகிப்தை ஆண்டு வந்தபொழுது, பெர்கிமஸ் வாசியான யூமினீஸ் என்பவன், தன்னதினும் பெரிய புஸ்தகசாலையை ஏற்படுத்திக்கொள்வானென்று பயந்து பொறுமையுற்று, பேப்பர் ஏற்றுமதியை நிறுத்திவிட்டானும். இதை யறிந்த யூமினீஸ், ஆட்டின்தோலை இலேசாய்ச் சீவிப் பதனிடச்செய்து, அதன்மீது புஸ்தகப் பிரதிகளை எழுதலானன். ‘வெல்லம்’ என்னும் எழுது தோல் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது. முதல் முதல் ‘பைண்டு’ செய்யப்பட்ட நூல், வெர்ஜில் கவீந்திரரின் காவியப் பிரதியாகும்; ரோம புரியிலேயுள்ள போப்பின் அரமனையில், இன்றும் அதைப் பார்க்கலாம். தந்தத்தைக் கொண்டு வெகு விசித்திரமாக அது பைண்டு செய்யப்பட் டிருக்கிறது. இது நடந்தது 1700 ஆண்டுகளுக்கு முன்பு.

(95) சுக்கு நாக்கர்:—என்னும் காட்டு மனிதரைப் பற்றி முன்பே (334-ம் பக்கத்தைப் பார்க்க) கூறப்பட்டது அந்த ஜாதி ஸ்திரீகள், வெகு சிக்கலும் விசித்திரமுமான கோலங்களைத் துணிகளில் செய்ய வல்லவராம். எகிப்தியருக்குமே தெரியாத அற்பு தமாதிரியாக, இச்சாதியார், பிணங்களைப் பாடம் பண்ணிச் சேமித்து வைத்திருக்கின்றனராம். பல நூற்றுண்டுகள் கழிந்த பின்னரும், இப்பிணங்களின் முகச்சாயல்களும் நிறமும்கூட மாறுதிருக்கின்றனவாம். இவர்க்குள் ஆண்-பெண்-காதல் என்பது அதிகம் இருப்பதாகத் தெரிய வில்லையாம். முத்தமிடும் வழக்கத்தை இவர் அறியார். ஸான்பிளாஸ் என்னும் தீவிலுள்ள சாதியார்க்குள் ஒரு சட்டமுண்டு: எந்த ஸ்திரீயுமே அந்தத் தீவிலே பிள்ளைப் பெறக்கூடாது. ஒரு கருப்பிணியின் பேற்றுக்காலம் நெருங்கியவுடன், ஒரு சிறு படகில் ஏறிக்கொண்டு, தன்னந் தனியே அவள் அக்கரை போய் விடுவாள். அங்கே ஒரு புதரின் கீழ் பிள்ளையைப் பெற்று,



உடனே குழந்தையுடன் தீவுக்குத் திரும்பிவிடுவாள். இவரன்றே இயற்கை மாதாவின் மக்களாவர்!

(96) சீனதேசமும் இந்தியாவும்:—இவ் விரு பெரும் தேசங்களுக்கும், சரித்திரம் அறிந்தமட்டில், கி. பி. முதல் நூற்றுண்டிலே போக்கு வரவு தொடங்கியது. புத்த மதப் பிரசாரமே இதன் தலைக்காரணம். கி. பி. 67-முதல் 789-வரை, 24-ஹிந்துக்கள் சீனம்சென்றனர்; இவர்களுள், குமார ஜீவன், புத்தபத்ரர், ஜினபத்ரர் முதலியோரே முக்கியர். கி. பி. 265-முதல் 790-வரை, 187-சீனர்கள் இந்தியாவுக்கு வந்தனர்; இவர்களில் நூற்றைவரின் பெயர்கள் தெரியும்; இவர்களுள் முக்கியர், தூஷின், யுவான்சாங், இட்சின் முதலியோரே. ஆத்மஜ்ஞானம், ஜீவகாருண்யம், சிற்பம் சங்கீதம் முதலியகலைகள், காவியங்கள், நாடகங்கள், இவ்விஷயங்களி லெல்லாம் இந்தியாவே சீனவின் குரு என்பது பொருந்தும். தற்காலத்துச் சீன அறிவாளரே இதை ஒப்புக்கொள்கின்றனர்.

(97) வெள்ளை அடிமைகள்:—தென் ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகளில் வந்து பயிர்களை அழிக்கும் வெட்டுக்கிளிப் பூச்சிகளின் உற்பத்தியைத் தேடிக்கொண்டு சென்ற சில ஆராய்ச்சிக்காரர், மத்திய ஆப்பிரிக்காவின் உட்பிரதேசத்தில், 7000-ஜனங்கள் உள்ளதும், எப்பல்வி என்னும் தலைவனை யுடையதுமான மோலோப் என்னும் பட்டணத்தை யடைந்தனர். அவ்வூரார், நீகரவர் போன்ற கறுப்பர். ஆனல், அவர்கள் தலைவனிடம், ஆணும் பெண்ணுமாக நூறுபேர் வரை, வெள்ளை அடிமைகள் இருந்தனர். இந்த அடிமைகள் இங்கிலீஷ் பாஷையும் டச்சுபாஷையும் பேசுகின்றனர். அரை நாகரிகமே அறிந்தவராயும் விவாக முறையை மறந்தவராயு மிருக்கின்றனர். தேகத்தின் மேல்பாதியை மட்டும் ஆடையால் மூடி வாழ்கின்றனர். இவர்களுடன் உள்ளூர் கறுப்பு யஜமானர் விவாக சம்பந்தம் செய்வதில்லை; ஏனெனில், வெள்ளையரைக் கறுப்பர் மிகத் தாழ்வாக மதிக்கின்றனர். இது, குதிரை மனிதனைச் சவாரிசெய்வது போலாகும். இரண்டு தலைமுறைக்கு முன் பொன் தேடிச்சென்ற வெள்ளையர் கூட்டமொன்று வழிதப்பி யகப்பட, மோலோப்பார் பிடித்துத் தங்களுக்கு அடிமைகளாக்கிக் கொண்டனர்; அவர்களின் சந்ததியாரே இவர், என்றெண்ணப் படுகிறது. பிரிட்டிஷார், தம் அதிகாரத்தைச் செலுத்தி, இவர்களை விடுதலை செய்யப் போகின்றனராம்.

(98) ஆழ்கடலின் நிலைமை:—பூமண்டலத்தின் மேற்பரப்பிலே, ஏறத்தாழ 570 லட்சம் சதுர மைல் தான் நிலப்பரபு; மிச்சம் 1400 லக்ஷம் சதுரமைலும் நீர்ப் பரப்பே. இந் நிலப்பரப்பி லுள்ள மேடு பள்ளங்கள் மலைகள், இவற்றின் சராசரி உயரம், கடலின் நீர் மட்டத்துக்கு மேல் அரைமைலே யாகும்; அவ்வாறே கணக்கிட்டால், நீர்ப் பரப்பின் (கடலின்) சராசரி ஆழம் 2½ மைலாகும்.

நிலத்தை (மலைகள் உள்பட) தட்டி நிரத்தி நீர்மட்டத்துக்கு மேலான மண் கல் யாவற்றையு கடலுக்குள் தள்ளிவிட்டாலும் கூட, கடல் தூர்ந்துபோகாமல் பின்னும் சராசரி 1¾மைல் ஆழமிருக்கும். பூமியிலுள்ள மலைகளில் எல்லாம் மகோன்னதமான (Mt. Everest) கௌரிசங்கர கிரியைக் கடலிலுள்ள பெருங்குழிகள் ஒன்றில் ஆழ்த்திவிடின், பின்னும் அதன் மேலுள்ள நீர் ஆழம் அரைமைலிருக்கும்! நீல வானத்தின் பிரதி யொளியினாலும், பாசிகளினாலும், கடல்கள், நீலமாயும் பச்சையாயும் சிவப்பாயும் காணுவ துண்டு. இந் நிறபேத மெல்லாம் மூவாயிரம் அடி ஆழத்துக்கே; அதன் கீழ் சூரிய வெளிச்சம் பிரவேசிப்ப தில்லை, செடி கொடி வாழ்க்கையு மில்லை. கன்னங் கரேலென்ற ஒரே கும்மிருட்டுத் தான். சமுத்திரத்து நீரிலே, பத்தில் ஒன்பது பங்கு, இவ்வாழத்துக்குக் கீழேதா னிருக்கிறது. சூரிய உஷ்ணம் தாக்காததால், இருண்ட அந்த நீர்ப்பிரதேசம் மிகக் குளிர்ந்திருக்கும். கடலிலே, ஆயிரம் பவுண்டு நிறை நீருக்கு 35-பவுண்டு உப்பிருக்கிறது; எனவே, மொத்தம் 50-லக்ஷம் கனமைல் உப்புண்டு. அமெரிக்கா கண்டத்து ஆறுகள் மட்டுமே, ஆண்டு தோறும் 50-கோடி டன் உப்பைக் கடலில் கொண்டு சேர்க்கின்றன. சூரியனது உஷ்ணத்தினால் கடலின் மேற்பரப்பு நீர் (3000-அடி ஆழம் வரை) சருவதா அசைந்து கொண்டே இருக்கிறது. இப் பரப்பில், கடலுக்குள் ஆறுகளும் ஏரிகளும் உட்கடல்களும் இருக்கின்றன. நீரில் முக்குளிக்க வல்லோர் 200 அடிக்குக் கீழ் இறங்கின தில்லை. மேலுள்ள நீர்த்தொகுதியின் கனத்தினா லுண்டாகும் அமுக்கல், ஆழ்கடலில், ஒரு சிறு சதுர அங்குலத்துக்கு 2½-டன் ஆகும் என்று மதிப்பிட் டிருக்கின்றனர். சூரிய வெளிச்ச மில்லாததால் ஆழ் கடலில் செடிகொடிகள் இல்லை யெனினும், நீர் வாழ் ஜந்துக்கள் உள்ளன. கடலில் உள்ள சராசர வஸ்துக்கள் பூமியின்மே லுள்ளவற்றினும் எவ்வளவோ அதிக மாவது மட்டு மன்றி, வர்ண ரூப பேத அதிசய அற்புதங்களினும் மிகச் சிறந்தனவாம்.



(99) அதிசய ஒற்றுமை:—பிரீனம் ஹான்ஸ் என்னும் ஊரி லுள்ள ஒய்ட் (Mrs. White) என்ற ஸ்திரீக்கு ஆறு குழந்தைகள். அவர்கள் அறுவரும் ஒரே தினத்தில்தான் தாம் பிறந்தநாளைக் கொண்டாடுகின்றனர். ஏனெனில், பெண்பிறந்த நாள் 27-7-1886; (2-3-4) மூன்று குழந்தைகள் ஒரே பிறவியில் பிறந்தநாள் 27-7-1901; (5-6) இரட்டைப்பிள்ளைகள் ஒரே பிறவியில், 27-7-1902ல். இந்த அறுவரும் ஜூலைமீ 27உயில் பிறந்தது மட்டு மன்றி, அன்று 4-மணிக்குமேல் 5-க்குள் பிறந்தவர்!

(100) போர்டு மோட்டார்கார்:—இது வரை செய்து விலைக்கு வெளிச்சென் றுள்ள கார்கள் ஒரு கோடிக்கு மேலாம். ஹென்ரி போர்டு என்னும் அமெரிக்க குபேரர், தன் 31-வது வயதில் 'போர்டு மோட்டார் கம்பெனி'யை ஸ்தாபித்தார். அப்பொழுது அவரை மிகச் சிலரே நம்பிப் பங்கு சேர்ந்தார்கள். முதலில் நூறு டாலர் (ஒரு டாலர் சுமார் 3-ரூபாயாகும்) பங்கு கொண்ட ஒரு வாத்திச்சி, பிறகு 355,000-டாலர் வரை லாபம் அடைந்தாள்; ரொக்கம் 900-டாலரும், 1500-டாலர் நோட்டுக்களுமாகப் பங்குகொண்ட அவள் சகோதரர் ஜேம்ஸ் கூஸன்ஸ் என்பவர், 39,500,000-டாலர் வரை பெற்றிருக்கிறார்! ஒரு லக்ஷம் டாலர் கம்பெனியில், தன் பங்கு 100-ல் 51-ஆக, ஒரு நிலக்கரி வியாபாரி அவருடன் முதலில் பங்காளியானான். 3000-டாலர் வரை கொடுத்தபின், நிறுத்திவிட்டான். அவன் பங்கை, போர்டு (கடன்கொண்டு) 175,000-டாலர் கொடுத்து வாங்கினார். மத்தியில் நீங்கிவிட்டதால் அவன் இழந்த சொத்தை 250,000,000 டாலரென்று மதிக்கின்றனர். 1914-ம் வருஷத்தில், போர்டு, தன் வேலைக்காரரில் ஒவ்வொருவனுக்கும் நாள் ஒன்றுக்கு 5-டாலருக்குக் குறைவின்றிச் சம்பளம் கொடுக்கவும், ஒரு கோடி டாலர் வரைத் தன் லாபத்தில் அவர்களுக்குப் பங்கு கொடுக்கவும் தீர்மானித்தார். இப்படிக் கூலியும் லாபமும் கொடுத்தும் கூட, 1921-ம் வருஷத்திலே ஒரு நிமிஷத்துக்கு 505-டாலர் வீதம் அவருக்கு லாபமாம்! 1903-ம் வருஷத்தில் அவர் கீழ் வேலையாளிகள் மொத்தம் 125 பேர்; 1921-ல் 32,679-பேர்!

(101) சீனர்கள் நாகரிகத்தின் பழமை:—தற்காலத்திலே கைத்தொழில் திறமை யந்திரச் சூழ்ச்சி முதலியவற்றில் ஐரோப்பாவுக்குச் சீனு எவ்வளவோ பின்பட்டதெனினும், முற்காலத்தில் அப்படி யில்லை. சீனர்களுக்கு (1) கி. பி. 105-ல் காகிதம் செய்யவும். (2) கி. பி. 4-5-வது நூற்றுண்டுகளில் மரக்கட்டைகளில் தோண்டி அச்சடிக்கவும் (3) கி. பி. 1041-ல் தனி எழுத்துக்களைச் செய்து அச்சடிக்கவும் (4) கி. மு. 12 வது நூற்றுண்டில் திசை காட்டு கருவி (Compass) செய்யவும், (5) கி. பி. முதலாவது நூற்றுண்டில் வெடிமருந்து, கற்பிளக்கு மருந்து, ஆகாசவாணங்கள் முதலியன செய்யவும் (6) கி. பி. 1202ல் பீரங்கி துப்பாக்கிகள் செய்யவும் அறிந்திருந்தனர். இவையன்றி, பறக்கும் யந்திரம், வண்டியின் வேகத்தை அறியும் கருவி, தானே செல்லும் (மோட்டார் போன்ற) வண்டி, தூரதிருஷ்டிக் கண்ணுடி, பூகம்பங்களை அளக்கும் கருவி, மடக்கும் குடைகள், விசிறிகள் முதலி யனவும் சீனரே முதல் முதல் உண்டாக்கினராம்.

(102) கவர்னர்-ஜெனரல் டால்ஹௌஸி பிரபு :— இந்தியாவிலே பலநாடுகளைப் பிரிட்டிஷார் வசமாக்கினவர் இவரே. இவரது பாட்டியார், எலிஸபெத் க்லென் என்பவள், ஆண்ட்ரூ க்லென் என்னும் ஆங்கிலேயருக்கும் ஓர் இந்திய ஸ்திரீக்கும் இந்தியாவிலே பிறந்தவளாம். அந்த இந்திய ஸ்திரீ, ஒருவர் பின் ஒருவராக ஐந்து ஆங்கிலேயரை மணம் புரிந்தனளாம். அவர்களில் மூன்றுமவரே ஆண்ட்ரூ க்லென். அவள் மகள் மட்டும் தன் தந்தையுடன் இங்கிலாந்து சென்று, பிறகு டால்ஹௌஸி பிரபுவின் பாட்டனுரை மணந்ததேயன்றி, அவள் தாயாகிய பஞ்சவர் பத்தினி, ஒரு நாளுமே இங்கிலாந்து சென்றதில்லை. இந்தியாவிலேயே பிறந்து, வாழ்ந்து, இறந்தனளாம்.

(103) இந்தியர் படிப்புவிவரம்:—படிப்பின்றி, அறியாமையும் மூடக்கொள்கைகள் நம்பிக்கைகளும் தொலையா; அவை தொலைந்தாலன்றி, நாடு முன்னுக்கு வாராது. நமது தேசத்திலே பிரிட்டிஷ் துரைத்தனத்தார் ஆளும் சில மாகாணங்களிலும், சுதேச மன்னர் ஆளும் சில ராஜ்யங்களிலுமுள்ள ஹிந்துக்கள் முஸ்லீம்களுக்குள், ஆண் பெண் வேருக, ஆயிரம்பேர்'ல் எத்தனைபேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர் என்பதைக் கீழே காண்க. இக்கணக்கு 1921-ம் வருஷத்து ஜனசங்கைக் கணக்குப்படி யுள்ளது :—



| மாகாணம் அல்லது ராஜ்யத்தின் பெயர் | ஹிந்துக்கள் | | முஸ்லீம்கள் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| வங்காளம் | 268 | 36 | 107 | 6 |
| பம்பாய் | 151 | 21 | 114 | 15 |
| பர்மா | 288 | 86 | 302 | 87 |
| சென்னை | 170 | 21 | 201 | 18 |
| பஞ்சாப் | 113 | 11 | 37 | 4 |
| பரோடா | 234 | 42 | 309 | 48 |
| ஹைதராபாத் | 47 | 4 | 140 | 35 |
| மைசூர் | 133 | 16 | 238 | 62 |
| ராஜபுதனம் | 57 | 3 | 66 | 9 |
| திருவாங்கூர் | 371 | 146 | 238 | 50 |

# விகட விநோதம்

———:[ * ]:———

(1) வேலையாள்—ஐயோ! பிசாசைக் கண்டேன் ; பயமாயிருக்கிறது, உடம்பெல்லாம் நடுங்குகிறதே.
யஜமானன்—எங்கே கண்டாய் ? எப்படி இருந்தது ?
வேலையாள்—காளிகோவில் மதிற்சுவர் ஓரமாய்க் கண்டேன் ; ஒரு கழுதையைப் போலிருந்தது.
யஜமானன்—இவ்வளவு தானு ! உன் நிழலையே பார்த்திருப்பாய். சும்மாபோ ; பயப்படாதே.

(2) அம்பட்டன்—சாமி ! இந்த ரூபாய் செல்லுமா, பாருங்கள்.
வக்கீல்—செல்லும் ; இதற்கு அபிப்பிராயப் பீஸ் 12 அணு ; நாளைவா, பாக்கி நாலணு தருகிறேன்.
அம்பட்டன்—இதென்ன, சாமி, என்னையே சவரம்பண்ணி விடுகிறீர்களே !

(3) வீட்டு யஜமான்ன்—நீங்கள் திரும்பி, இன்னும் ஒருமுறை, வரமாட்டிர்கள் போலிருக்கே ?
விருந்தாடி—என் அப்படிச் சந்தேகம்? அடிக்கடி வருகிறேன்,

வீட்டு யஜமானன்—இப்பொழுது போனாலன்றோ பின்னும் திரும்பி வரக்கூடும்?

(4) சட்டசபை மெம்பர்—என்ன, பிள்ளையவாள், இந்த ஸெஷனிலே தாங்கள் வாய் திறக்கவே இல்லையே?

மற்றொரு மெம்பர்—தங்கள் பேச்சைக்கேட்டுக் கொட்டாவி விட்டு, அலகிரண்டும் நோகிறது; பேச முடியவில்லை.

(5) ஹைகோர்ட் ஜட்ஜ்—நான் எதற்காக இந்த ஸ்தானத்தில் இருக்கிறேனென்று நினைக்கிறாய்?

குற்றவாளி—மாதம் நாலாயிரம் ரூபாய்க்காக.

(6) பாதிரியார் உன்னைப்படைத்தவர் யார், தெரியுமா?

கிழப்பள்ளன்—எதாவது தப்புப் பண்ணினா, அப்பம், நயினா புடைப்பாங்க.

பாதிரியார்—அதல்ல; உன்னை உண்டாக்கினவர், சிருஷ்டித்தவர், யார் தெரியுமா?

கிளப்பள்ளன்—நான் பிறந்து ரொம்பநாளாச்சுங்க; மறந்து போச்சுங்க.

கிறள்.

யாகாவார் ஆயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு—உ. சா. வே.
தந்தை மகற்காற்றும் நன்றி, மகன் அவைக்காக்
கந்தை உடுக்கச் செயல்.
மகள் தந்தைக் காற்றும் உதவி, இவள் தந்தை
என் பிழைத்தான்கொல் என்னும் சொல்.—மா.

---

# ஸ்ரீமத் பகவத்கீதை.

மூலத்துடன் அத்வைத விசிஷ்டாத்வைத த்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும் இது வரையில் வெளியிடாத ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும் கண்ணனுடைய கருத்திற் கிணங்க சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயர் ஸ்ரீமான் சி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டது.

முழு காலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூபா 3—0—0

சுதேசமித்திரன் ஆபீஸ்,

சென்னை.



அக்காள் போய்விட்டால், அப்புறம் எங்களுக்கு பாத்யதையே இல்லையா? எல்லாம், குட்டியின் க்ஷேமத்தையும் லாபத்தையும் உத்தேசித்துத் தானே அப்பா சொல்லுகிறார்கள்? தெருக்கேலி தேர்க்கேலி திருநாட்கேலியாக, ஊரெல்லாம் சிரிப்பாய்ச் சிரிக்கிறதை, நான் சொன்னால் மட்டும் பொல்லாப்பு வந்துவிட்டதாக்கும்? எல்லாம், உள்ளதைச் சொன்னால் நொள்ளாப்புத்தான்!'' என்றான்.

கோபாலையர், தன் கோபத்தையும் கிலேசத்தையும் ஒருவாறு அரிதில் அடக்கிக்கொண்டு: "என்ன உள்ளது, நீ என்னதைக் கண்டுவிட்டாய், இந்த மாதிரி உளறுகிறாய்?'' என்று கேட்டார்.

"எல்லாம் கண்டும் கேட்டும் தான் இருக்கு; நீர் யாரோ ஒரு துரைசானி முண்டையை வைத்துக்கொண்டிருக்கிறீராம்; அதுதான் 'இரண்டாம் தாரம் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன்' என்கிறீராம்; நாடெல்லாம் பறையறைகிறது; சென்னப்பட்டணத்து வண்டோல்களெல்லாம் எங்களுக்குத் தெரியாதா, என்ன?'' என்று வெங்கிட்டு பதிலுரைத்தான்.

இதைக் கேட்டவுடன், கோபாலையரின் கோபம் முன்னிலும் அதிகம் பொங்கிற்று; ஆனால் ஒரு பதிலும் பேச அவருக்கு நாவெழ வில்லை. வெங்கிட்டுவின் குரலும், அவன் பேசும் விதமும் உச்சரிப்புக்களும், கலியாணியின் குரல் பேச்சுக்கள் போலவே யிருக்கும். அவன் இப்பொழுது தன்னைப் பழித்துக் கூறியதானது, அவளே உயிர்பெற்று வந்து பேசுவது போலவே அவருக்குக் கேட்டது. அவர் கண்களினின்றும் இரண்டு சொட்டு நீர் விழுந்ததன்றி, பதிலாக வாய்ப்பேச் சொன்றும் வெளிவர வில்லை.

உண்மை எவ்வாறு யிருப்பினும், தான் வந்த காரியம் சித்தி பெறுவதற்கு வழி யிதல்ல, என்றுணர்ந்த முத்தையர், தன் மகனை மீண்டும் அதட்டி யடக்கி, பேச்சுப்

போக்கை வேறு வழியிலே திருப்பினார். ஆனால் வெங்கிட்டுவின் விஷமத்தினால், கல்யாணப் பேச்சு அதிகம் மேற்போக வில்லை. சற்று நேரத்துக்குப் பின், நாராயணையர், தனக்கு நேரமாகி விட்டதென்று புறப்பட்டார்; கோபாலையரும், தனக்கு ஆசுபத்திரிக்குப் போகவேண்டு மென்று புறப்பட்டு விட்டார். வெங்கிட்டுவின் பேச்சுத் துடுக்கினால், அவனுக்கும் கோபாலையருக்கும் பெரிய மனஸ்தாபம் ஏற்பட்டுவிடு மென்று, நாராயணையரும் சாவித்திரியம்மாளும் அஞ்சினார்கள்; ஆனால், அப்படி யொன்றும் நிகழ வில்லை. அவன் விஷயத்தில், கோபாலையர் இவ்வளவு பொறுமை செய்ததன் காரணத்தை ஊன்றி நோக்கின், ஆச்சரியத்துக்கு இடமிராது: முதலாவது, அவன், பய மறியாத இளங்காளை, கள்ளம் கபடற்றவன்; இரண்டாவது, அவனுடைய குரலும் பேச்சும் சாயலுமே, அடிக்கடி, கலியாணியை அவருக்கு நினைப்பூட்டின. இதனால், அவன் மீது அவருக்குக் கோபம் நீடித்து நிற்க வில்லை; அவனும் அவரிடம் உண்மையில் பக்ஷமுள்ளவனாகவே இருந்தான். இவ்வாறாக, மாப்பிள்ளைக்கும் மைத்துனனுக்கும் உள்ளூரச் சிநேகமும், பரஸ்பர வாஞ்சையும் உண்டு.

கோபாலையரும் நாராயணையரும் போன பின்பு, முத்தையரும் வெங்கிட்டுவும் ஸ்நாநம் செய்து சாப்பிட்டார்கள். சாவித்திரியின் உதவி முக்கியமானது, அவள் பேச்சைக் கோபாலையர் சாதாரணமாய்த் தட்டமாட்டார் என்பது, முத்தையருக்குத் தெரியும்; தான் உத்தேசித்தது போலவே தன் பேர்த்திக்குக் கலியாணம் செய்வது, அவளுக்குச் சம்மதம் தான் என்பதும் தெரியும். அம்மட்டோடு நின்று விடாமல், இன்னும் தன் பக்ஷமாக அவள் முனைந்து வலிந்து பேசிக் கோபாலையரை இணங்கச் செய்ய வேண்டு மென்று கருதி, சாப்பிடும் பொழுது, முத்தையர், மீண்டும் அவ்விஷயத்தைப் பற்றிப் பேசலானார்.





முத்தையர்— மணி என்றால் மணிபோ லிருக்கிறான் பையன்; அவன் பங்குக்குமட்டும் ஒரு லகாரத்துக்குக் குறை வில்லை. நம்ம குட்டிக்கு இதைவிட நல்லவான் கிடைக்கவே கிடைக்காது. அடுத்த ஊர்; அறிந்த மனுஷியாள்; இந்தத் தை தப்பக்கூடா தென்கிறார்கள். எத்தனையோ பேர், 'நான்' 'நீ' என்று, பெண்களை வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள் அவனுக்காக.

சாவித்திரி— அம்பிக்கு அதெல்லாம் தெரியாதா, தெரியுமே. அவனுக்கும் அரைமனது, முக்கால் மனது சம்மதந்தான். நாராயணையரும் அவனும் இன்னும் சில பேரும் என்ன என்னமோ சபதம் செய்திருக்கிறார்களாம்; தங்கள் பெண்கள் பெரியவர்க ளாகவிட்டுத்தான் கலியாணம் செய்துகொடுக்க வேணுமாம்.

வெங்கிட்டு— இதென்ன, நடக்கிற காரியமா? அப்புறம் யாருக்குக் கலியாணம் பண்ணிக் கொடுக்கிறது?

சாவித்— அதுதான் நானும் சொல்லுகிறேன். எல்லாம் இசைந்து விடுவன்.

முத்தை— ஒருவேளை நாராயணையர் தடுப்பரோ?

சாவித்— இவனுக்கு இஷ்டமானால், அவர் குறுக்கே நிற்க மாட்டார்; ஆனால், அவரைக் கேளாமல் இவன் நடக்கவுமாட்டான்.

வெங்கிட்டு—எப்படியாவது, இதை முதலிலே முடித்துக் கொள்ள வேணும். அப்புறம், அத்தம்பியாருக்கும் நம்ம வழியிலேயே ஏற்பாடுசெய்து, அதையும் முடித்து வைக்க வேணும்.

சாவித்— அதென்னவோ, ஒரே பிடிவாதமா யிருக்கான். யார் என்ன சொன்னாலும், கேட்கிற தில்லை. நாராயணையருக்கும் அப்படிச்செய்வது இஷ்டம்தான். ஆனால் இதில் மட்டும் இவன் ஒரே முரண்டா யிருக்கான்.

முத்தை— ஆனால், ஊரிலே,—சொல்லிக் கொள்கிறது,—நிஜம், தானோ?

இந்தக் கேள்விக்குச் சாவித்திரி உடனே பதில் சொல்லவில்லை. வெங்கிட்டு மட்டும்: "பின்னை என்ன பொய்யா ஊரெல்லாம் பறையறைகிறது? ரயிலிலே வந்த டாக்டர் ஒருத்தர், நாம் இன்னார் என்று தெரியாமல், அகஸ்மாத்தாய்ச் சொல்ல வில்லையா?" என்றான்.

முத்தை— அது எப்படியானாலும் சரி: நீ தாறுமாறாய் உளறி, அவனுக்கு வீணில் கோபத்தை உண்டு பண்ணாதே; நாம் வந்த காரியம் கெட்டுப்போம். அவன் என்ன, பச்சைக் குழந்தையா, பாலனா, நாம் கண்டிக்கிறதற்கு? சாவித்திரி! நீ மாத்திரம் கொஞ்சம் நல்ல மனசு வைத்து, அழுத்திச் சொன்னால், 'இப்படித்தான் செய்ய வேண்டும், இந்த வரனை விட்டுவிடக் கூடாது' என்று கட்டாயப் படுத்தினால், காரியம் நடக்கும்.

சாவித்திரி, தனக்கு அது முழுச் சம்மதமே யென்றும், தன்னா லானமட்டும் சொல்லுவதில் தடை யில்லை யென்றும், பதில் சொன்னாள்.

## ஒன்பதாவது அதிகாரம்

ஆசுபத்திரி வேலை முடிந்தவுடன் நேராக வீடு திரும்பாது, டிராம்வண்டி யேறி, கோபாலையர் வேப்பேரி சென்றார். நடுவழியிலே வண்டியை விட்டிறங்கி, ஒரு முடுக்குத் தெருவில் திரும்பி, தெருவின் மத்தியி லுள்ள ஓர் ஓட்டு வீட்டுக்குள் நுழைந்தார். அவ் வீட்டு வராந்தாவில் நாலைந்து பூத்தொட்டிகள் இருந்தன; வெளித் தூணில் மாட்டியிருந்த பெயர்ப் பலகையினால், அவ்வீடு, மிஸ்ஸிஸ் மூடி என்ற மருத்துவச்சி குடியிருப்பது என்று துலங்கிற்று. கோபாலையர் போய்ச் சேரும்போது, வெளிவராந்தாவில் ஒரு வேலைக்காரி நின்றுகொண்டிருந்தாள். அவள், பறைச் சாதி; வயது முப்பதுக்கு மேலிராது; வெள்ளை வெளேலென்ற சீலையும், பச்சைப் பூ வேலைசெய்த சிவப்புச் சீட்டிரவிக்கையும் உடுத்து; கைகளில் பலவர்ணக் கண்ணாடி-





வளையல்களும், கழுத்தில் பொய்மினுக்குப் பொன் மாலையும், காதில் சாயச் சுருட்டோலையும், கை கால் விரல்களில் நெளி மோதிரம் மெட்டிகளும் அணிந்து; தன் இயற்கை நிறத்துக்குத் தோற்பதை விளக்குவதற்கென்றோ, நெற்றியில் கருஞ்சாந்துப் பொட்டிட்டு; தலைமயிரை வாரி வகிர்ந்து சவரியுடன் சேர்த்துச் செருகி முடித்து; வாய் நிறையத் தாம்பூலமும் புகையிலையும் கன்னங்கள் புடைக்க மென்று, வெகு ராங்கிக்காரியாய் இலங்கினாள். கோபாலையரைக் கண்டவுடன், சளப்பென்று பூத்தொட்டிக்குள் துப்பிவிட்டு, நெற்றியைத் தொட்டுச் சலாம் செய்து, சிரித்த முகத்துடன்: "ஐயரைக் காணவே யில்லையே? மிசி இப்பம் தான் வெளியே போச்சு; இன்னா வந்திடறேன் என்னு சொல்லிட்டுப் போச்சு." என்றாள்.

"அப்படியா! எங்கே போனாள் தெரியுமா?" என்று கோபாலையர் கேட்டார்.

"அண்டைச் சந்திலே, யாப்பார வீட்டிலே, ஆருக்கோ சுகமில்லையாம்; வந்து கூப்பிட்டாங்க, இப்பந்தான் போச்சு. சின்ன மிசியும் ஊரி லில்லை. நான் போயிப் பாத்து வாறேன், நீ உள்ளே போயிரு" என்று பதில் சொல்லிவிட்டு, அவள் வேகமாய் வெளியேறினாள்.

"நீயும் போய்விட்டால் எப்படி, பொன்னி? நான் அதிகம் காத்திருக்க முடியாது, போகவேண்டுமே" என்றார், கோபாலையர்.

"இன்னா நொடிப் பொளுதிலே வாறேன்" என்று சொல்லிக்கொண்டே அவள் போய்விட்டாள்.

கோபாலையர் வீட்டுக்குள் சென்று, மூன்றாந் தரமான சில மேஜை நாற்காலிகளும், ஒரு பழைய பிரம்புச் சோபாவும் போட்டிருந்த தலைக் கூடத்திலே, ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, தலைப்பாகையைக் கழற்றி மற்றொரு நாற்காலியின் மீது வைத்துவிட்டு, கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டு, சிறிது நேரம் தன் சிந்தனையில் ஆழ்ந்தவரா யிருந்தார். பிறகு வாசலை எட்டிப் பார்த்து

விட்டு, அக் கூடத்தி லுள்ள சாமான்களையும் சுவரில் மாட்டியிருந்த விவிலிய புராண சம்மந்தமான படங்களையும் வேறு வேலையின்றிப் பார்த்துக்கொண் டிருக்கையில், ஒரு மூலையி லிருந்த எழுது மேஜையின் மேல் வைத்திருந்த ஒரு படம் கண்ணுக்குத் தட்டுப்படவே, ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தவராகி, விரைந்து சென்று, அந்தப் படத்தைக் கையி லெடுத்து உற்றுப் பார்க்கலானார். அந்தப் படம் இருபத்தைந்து வயதுக்கு மேலில்லாத ஒரு துரைமகளின் படம்போ லிருந்தது. ஆனால், முகச் சாயலையும் களையையும் பார்த்தால், அங்கிலேயப் பெண்ணல்ல, இந்தியப் பெண்ணே என்று தோன்றிற்று. காதணி யொன்றும் இல்லையெனினும், காதில் குத்தப்பட்ட துளைகள் இந்த அநுமானத்தைப் பலப்படுத்தின. ஆடையும் தலையலங்காரமுமோ, துரைமகளையே குறித்தன. சந்தேகம் நமக்கே யன்றிக் கோபாலையருக்கில்லை. "எப்பொழுது பிடித்த படம் இது?" என்று, அவர் மகிழ்ந்து கூறி ஆச்சரியப்பட்டது மன்றி, இரண்டு மூன்று தரம், அந்தப் படத்தைக் கண்ணில் ஒற்றியும் முத்தமிட்டும் அருமை பாராட்டினார். அந்தப் புகைப் படத்தைப் பிடித்தவனது பெயரும் விலாசமும் நுண்ணிய அச்செழுத்தில் கீழே ஒரு மூலையில் குறித்திருந்ததைக் கவனித்து வாசித்து, தம் அங்கிப் பையிலிருந்து குறிப்புப் புஸ்தகத்தை எடுத்து, அதில் அவற்றைக் குறித்துக் கொண்டார்.

இதற்குள் அந்த வீட்டு வாசலில் ஒரு ரிக்ஷாவண்டி வந்து நிற்க, அதிலிருந்து மிஸ்ஸிஸ் மூடி தோற்பையும் கையுமாக இறங்கி உள்ளே வந்தாள்.

"குட் ஈவனிங், மாதாம்!" என்று கோபாலையர் உல்லாசக் குரலில் சொன்னதற்கு, அவள், "ஹல்லோ கோபால்! இந்த வீட்டுக்கு வழியும் தெரிந்ததா? மறந்து போயிற்றென்றே நினைத்தேன்" என்று, இங்கிலீஷில் சொல்லிக்கொண்டு உள்ளே வந்து, தோற்பையை ஒரு மேஜை மேல் வைத்து விட்டு, அவருடன் கைகுலுக்கி, அப்படியே







அவரை அழைத்துச் சென்று சோபாவில் உட்காரவைத்து, தானும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவர்கள் பேச்சு இங்கிலீஷிலேயே நடந்தது. அவளுக்கு வயது முப்பத்தைந் திருக்கலாம். சாதாரண துரைசானிகள் இந்தியர் கண்களுக்குத் தோற்றுவது போல, அவ்வளவு விகாரமானவ ளில்லை. சோபாவில் உட்கார்ந்த பின்புதான் அந்தப் படத்தை அவள் கண்டாள்.

மூடி:— அதற்குள் இதைப் பார்த்து விட்டாயா? கோபாலுக்கு எப்பொழுதும் தன் காரியத்திலேதான் கண்; பிறர் சங்கதிதான் மறந்து போகும்.

கோபா:—ஏன், உன்னை நான் எப்பொழுது மறந்தேன்? அதிருக்கட்டும், மூடி: இந்தப் படம் எப்பொழுது எடுத்தது? அவள் எப்படி இதற்குச் சம்மதித்தாள்?

மூடி:—போன மாதம் இங்கே வந்திருந்தாள். அப்பொழுது, அவளுக்கு எங்கள் உடை உடுத்தினால் அழகாயிருக்கு மென்று நான் சொன்னேன்; அப்படியே என்

தங்கையின் உடையை அவளுக்கு உடுத்தினோம். அது அழகாய் விநோதமா யிருந்ததால், என் தங்கை, அப்படியே படம் பிடிக்க வேண்டுமென்று சொல்ல, வெட்கத்தினாலும், தன் தகப்பனார் கோபிப்பாரென்றும், முதலில் அவள் இணங்கவில்லை. பிறகு என் தங்கையின் கட்டாயத்தின் பேரில் இணங்க, இந்தப் படத்தைப் பிடித்தோம். நன்றா யில்லையா இது?

கோபா:—நன்றா யில்லை யாவா? எப்பொழுதுமே, புதுமை, ஒன்று விகாரமாய்த் தோன்றும்; அல்லது, அதிக அழகாய்த் தோன்றும். இந்தப் பட விஷயத்தில், இயற்கையி லுள்ள பேரழகு நூறு மடங்கு சோபிக்கிறது. அவள் உயரத்துக்கு, உங்கள் உடையே பொருத்தம் போல் தோன்றுகிறது. இந்தப் படம் எனக்குத்தான்!

மூடி:—இந்தப் படம் உனக்கா? என் தங்கை ஒரு நாளும் தரமாட்டாள்; அவளும், அதற்கிசைவளோ என்னவோ, சந்தேகம்.

கோபா:—இதற்கு இவ்வளவு வீம்பா! படக்காரனிடத்தில் காசு கொடுத்து, நான் ஒன்றுக்கு இரண்டு பிரதிகள் வாங்கிக் கொள்கிறேன், பார்.

மூடி:—அப்படி நீ செய்து விட்டால், ஆயிரம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன். உன் சாமார்த்தியத்தைப் பார்ப்போம்.

கோபா:—ஏன் இவ்வளவு உறுதியாய்ச் சொல்லுகிறாய்? என் முடியாது?

மூடி:—அப்படி ஏதாவது நடக்காமல் தடுக்க வாக்குக் கொடுத்த பின்புதான், அவள் சம்மதித்தாள். மொத்தம் இரண்டு பிரதி தான் எடுத்தது; ஒன்று, எனக்கும் என் தங்கைக்கும் பொதுவாக, இது; மற்றொன்று, அவளிடம் இருக்கிறது. படம் பிடித்தவனுக்குக்கூட, பிரதி கிடையாது; பிடித்த மூலக்கண்ணாடியை உடைத்து விட்டாள். உனக்கு வேண்டுமானால், அவளைக் கேட்டு வாங்கிக் கொள்; அவள் தருகிறாளோ பார்ப்போம்.



# தானே தானும் தக்கடி தங்கம்

(605-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## 2. பிரதம தரிசன வைபவம்.



லைத் தீவாளிக்கு, நான் என் மாமியார் வீடு போயிருந்தேன். அப்பொழுது ஒரு நாள் பிற்பகலிலே, வீட்டின் உள் திண்ணையில், ஊண்மயக்கமும் (காதலியைக்) காண்மயக்குமாக அரை உறக்கத்தோடு படுத்திருக்கையில், திடீரென ஒரு பேரொலி கேட்டு எழுந்தேன். உற்றுக் கேட்கவே, 'தானே தானும் தக்கடி தங்கம்! தானே தானும் தக்கடி தங்கம்! ஜல்! ஜல்! ஜல்!' என்று யாரோ தெருவில் தாளத் துக்குப் பொருந்தப் பாடுவதும், நடனமாடும் சதங்கை ஒலியும் காதில் விழுந்தன. அதென்ன வேடிக்கை என்று பார்க்க வெளியே சென்றேன். தக்கடி, வீதி வழியே ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வந்துகொண்டிருந் தான். ஊர்க் குழந்தைகளெல்லாம், அவனைச் சூழ்ந்து தாமும் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், பரிகாசம் செய்துகொண்டும் வந்தார்கள். அதற்கு முன் தக்கடியை நான் பார்த்திராததால், அவன் உருவமும் செயல்களும் ஆடையும் வெகு விநோதமா யிருந்தன. அன்று அவன் உடுத்திருந்தது, முழங்காலுக்கு மேலும் தொப்புளுக்குக் கீழுமாக ஒரு சிறு கோடித் துணியே. நெற்றியிலே திரி புண்டர விபூதியும், தோள்களில் கோபியும், நெஞ்சில் குங்குமமும், தொந்தியின்மேல் நாமங்களும் போட்டுக் கொண்டிருந்தான். ஊர்க் குழந்தைகளில் இரண்டொருவர் மட்டும், எட்டி நின்று, அவன் மேல் பொடிக் கல்லையோ, ஓட்டையோ, மண்ணாங்கட்டியையோ, கைக்கு அகப்பட் டதை எடுத்து எறிந்தனர்; ஆனால், அவன் அதைப்

பாராட்ட வில்லை. மற்றக் குழந்தைகளெல்லாம், அவனோடு இகலிப் பாடியும் குதித்தும், அவன் சடையையும் வேஷ்டியையும் பிடித்திழுத்தும் விளையாடிக் கொண்டு, அவன் கூடவே வந்தனர். என் மாமியார் வீட்டு வாசலில் அவன் வந்தவுடன், ஊர்ப்பையன்களில் ஒருவன், என்னைச் சுட்டிக் காட்டி "அடே! தக்கடி! அதோ நிற்கிறாரே, அவர் புதுமாப்பிள்ளை யாக்கும்; தலைத்தீவாளி கொண்டாட வந்திருக்கிறார்; பண்ணையார் வீட்டுப் பிள்ளை; விடாதே அவரை" என்றான்.

உடனே தக்கடி முன்னிலும் அதிகமாக ஆடிப்பாடிக் குதித்தது மன்றி, தன் நாக்கை வெளியே சாணுக்குமேல் நீட்டியும், குண்டுமணிக் கண்களைச் சிமிட்டியும், அழகு காட்ட ஆரம்பித்தான். எனக்கு அது வெட்கமா யிருந்தது. ஆனால் என் சங்கோசத்தைக் கண்டால் அந்தப் பிள்ளைகளெல்லாம் என்னைக் கேலி செய்வார்கள் என்று நினைத்துக்கொண்டு, கூசாதவன்போல, நானும் சிரித்து வேடிக்கை பார்த்து நின்றேன். இதற்குள் என் மாமியும், என் மனைவியும், அவள் தமக்கையான என் மைத்துனியும், வீட்டு நடையில் வந்துநின்று, வேடிக்கை பார்க்கலானார்கள். தக்கடி என்னை அழகு காட்டுவதையும், அவர்கள் நின்று பார்த்துச் சிரிப்பதையும் அறிந்தவுடன், எனக்கு அடக்க முடியாத சங்கோசமும் கோபமும் உண்டாயின. முன்பு பாசாங்கு பண்ணின சிரிப்புப் பறந்துபோய்விட்டது. என் அவஸ்தையைத் தெரிந்துகொண்ட சிலர்:

"விடாதே தக்கடி! விடாதே மாப்பிள்ளையை! உன் கெட்டிக்காரத்தனம் இன்றுதான் காட்டவேணும்: ஒரு கோடிவேஷ்டி யாவது வாங்கிவிட வேணும்" என்று, அவனைத் தூண்டி விட்டார்கள்.

தக்கடி, உடனே தன் ஆட்ட பாட்டங்கள், முகவலிப்புக்கள் எல்லாவற்றையும் திடீரென நிறுத்திவிட்டு, 'ஸத்து! ஸத்து!' என்று கூவி, எல்லாரையும் அடங்கியிருக்கச் செய்து, பிறகு, என்னைப் பார்த்துப் பின்வருமாறு மணிப்பிரவாளத்தில் பிரசங்கம் செய்யத் தொடங்கினான்:-

"யூ, நீயே நீயாம் மாப்பிள்ளை; ஐ, தானே தானும் தக்கடி தங்கம்! வெல். யூ, பண்ணையார் பெத்த பிள்ளை; ஐ, அம்மையார் பெத்த பிள்ளை! வெல். யூ, பட்டும் ஜரிகை சேரமனும்; ஐ, கட்டும் சிறிய கோமணம்! வெல். யூ, சும்மா சும்மா விருந்து; ஐ, இம்மா அம்மம் மருந்து! வெல். யூ, சின்னச் சின்னப் பெண்டாட்டி, ஐ, பெரிய பெரிய திண்டாட்டம்! வெல். யூ, மேடைவீடு, ஐ, காடுமோடு! வெல். யூ, எப் ஏ பீயே, ஐ, நாயே பேயே! வெல். யூ லிவ், ஐ லிவ்! வெல்; யூ ஸிக், ஐ ஸிக்! வெல்; யூ டை, ஐ டை! வெல். அப்படியானால் அப்பேன், யூ பிக்? ஐ பிக்? ஹூ பிக்? ஸே! ஸே!! ஸே!!!"



இந்தப் பிரசங்கம் தொடங்கும்போது, எனக்கு வெட்கமும் கோபமுமே மேலிட் டிருந்தன; அது முடிந்து, தக்கடி, "ஸே! ஸே! ஸே!" என்று கூவிக்கொண்டு, தலைசுற்றித் தட்டாமாலை யாடும்போது, அவற்றை யெல்லாம் மறந்துவிட்டேன். பிரசங்கம் செய்யும்பொழுது, தக்கடி, வெகு விநோதமும் விசித்திரமுமான அபிநயங்களை யெல்லாம் காட்டி, கடைசியில் தட்டாமாலை சுற்றியாடியதைப் பார்த்த சிறுவர்களும், என் மாமி மனைவி மைத்துனியும், விழுந்து விழுந்து சிரித்தார்கள். அவன் பிரசங்கத்தில் கூறிய வார்த்தைகளோ, அவற்றின் அர்த்தமோ, எவருக்கும் புரியவு மில்லை, எவரும் கவனிக்கவு மில்லை.

பின்பு, தக்கடி, தட்டாமாலையை நிறுத்திவிட்டு, தன் சிறிய கைகளால் தரையைத் தொட்டுத் தலைமேல் வைத்துச் சலாம் செய்து, என் கிட்டவந்து, குரங்குபோல் பற்காட்டி இளித்துக் கீச்சிட்டு, இரண்டு கைகளையும் விரித்தேந்திப் பிச்சை கேட்டான். உடனே, நான், முன் பின் யோசியாமல், மற்றெவரையும் கேளாமல், என் தோளின் மேற் கிடந்த புதிய ஜெயில்துண்டை யெடுத்து அவனுக்குக் கொடுத்துவிட்டேன். அதைக்கண்ட என் மாமி:— "ஓ! ஓ! இப்படி உண்டோ! இப்படிச் செய்வாளோ! புத்தப்புதுத் துண்டே! ஒரு ரூபா யிருக்குமே! ஆழாக்கு அரிசியோ, காலணாவோ கொடுத்தால் போதுமே!" என்று கூக்குர லிட்டது மன்றி:— "அடே தக்கடி! இங்கே கொண்டா, துண்டை: உனக்குக் காசும் அரிசியும் தரேன்; உக்காரியும் போடுகிறேன்" என்றாள்.

"தக்கடியைப் போல மாப்பிள்ளைக்கும் பயித்தியம் பிடித்து விட்டது போலிருக்கு!" என்று சொல்லிச் சிரித்தாள் என் மைத்துனி. என் மனைவியோ, ஸ்தம்பித்து நின்றாள். பிள்ளைகளெல்லோரும் "பேஷ்! பேஷ்! தக்கடி கெட்டிக்காரன்தான். தக்கடி! பலே பேஷ்!" என்று கெக்கலித்தார்கள். தக்கடியோ, எவர் பேச்சையும் கவனியாமல், நான் கொடுத்த துண்டைக் கோமாளிக் குல்லாபோல்

தலைப்பாகை சுற்றிக்கொண்டு, அபிநய தாளங்களுடன் குதித்துப் பின்வரும் பாட்டைப் பாடிக்கொண்டே மேல் நடந்தான் :—

வேட்டைக்குப் போனேனடி—தங்கமே
கோட்டையைக் கொண்டேனடி—அந்தக்
கோட்டையை மூட்டையாக் கூட்டையிலே ஒரு
ஓட்டையில் ஒழுகிப்போச்சே!—கோணக் கோபாலன்.

(தொடரும்)


SRINIVASA VARADACHARI & Co.,

*Printers & Booksellers,*

MOUNT ROAD, MADRAS.

## தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. V. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M. A. விலை அணா 10.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B. A., B. L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

3. ராஜராஜசோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியா ரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

4. இட்டார்க்கு இட்டபலன்.—ஆசிரியர் மிஸ்டர் J. பொன்னுஸாமி ராவ். விலை அணா 10.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் எழுதியது. ராவ் ஸாஹெப், S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ 1–4–0.

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B. A. எழுதியது. விலை அணா 12.


(அடுத்த பக்கம் பார்க்க.)




## மாதச் செய்திகள்

பிரிட்டிஷ் பாராளுமன்றம்—புதிய தேர்தல் முடிந்து, 'கன்ஸர் வெடிவ்'—இராஜரீகத்துறையில் வைதிகர் போல்வார்—கட்சியாரே வெற்றிபெற்று, பால்ட்வின் மந்திரத் தலைவராயும், பெர்கன்ஹெட் பிரபு இந்தியா மந்திரியாயும் ஆளத்தொடங்கி விட்டனர்.

வங்காள அடக்கு முறை—காரணமாகக் கல்கத்தாவிலே தலைவர்களெல்லாம் கூடிப் பேசி, ஒற்றுமையைப் பலப்படுத்திவிட்டனர்.

சென்னைச் சட்டசபை—கூடிச் சிறிது வேலை பார்த்தது.

பி அம்மா—அலி சகோதரரின் தாயார் தேகவியோகமானார்.

அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள்—புதிய தேர்தல் நடைபெற்று, மீண்டும் கூலிட்ஜ் என்பவரே தலைவராய்த் தெரிந்தெடுக்கப் பட்டார்.

தமிழ் மாகாண மகாநாட்டின்—30-வது கூட்டம் திருவண்ணாமலையில் நிகழ்ந்தது.

மாண்டேகு—இந்தியா மந்திரியாக இருந்து புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்திய இவர், அகால மரணத்தை யடைந்தார்.

பம்பாயிலே—பல கட்சித் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் கூடி, காங்கிரஸில் ஒற்றுமை விஷயமாயும், வங்காள அடக்கு முறையைக் கண்டனம் செய்தும், ஆலோசனை செய்தனர். சென்னை மாகாண "ஜஸ்டிஸ்" கட்சியாரில் சிலருமே கலந்து பேசினர்.

லீ கமிஷன் சிபார்சுகள்—இந்தியா மந்திரியால் அங்கீகரிக்கப்பட்டனவாம்.

எகிப்திய ஸர்தார் ஸ்டாக்—வெடி குண்டினால் மோசடியாகக் கொல்லப்பட்டார். ஸூடான் பறிபோய் விடலாம்.


7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1-6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7-12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

# பத்திராதிபர் குறிப்புக்கள்

(608-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

(43) பிரிட்டிஷ் பாராளுமன்றம் :—“வடகோடுயர்ந்தென்ன தென்கோடு தாழ்ந்தென்ன வான் பிறைக்கே” என்பது போல, நம்மை யாளும் பாராளுமன்றத்தில் எந்தக் கட்சியார் ஏற்றத்தைப் பெற்று அதிகாரம் வகித்தாலும், இந்தியாவுக்கு ஒன்றே. ஆயின், உவமானத்தைச் சிறிது மாற்றிக் கொள்ள வேண்டும் : எந்தப் பக்கம் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் ஆகாயத்தி லிருக்கும் சந்திரனைப் பாதிக்காது ; நமக்கோ, எந்தக் கட்சி மேலிட்டாலும், நம்ம தாழ்ச்சி தாழ்ச்சியே. வண்டிச் சக்கரத்தின் அடியில் கிடந்து நையும் பிராணிக்கு, வண்டியி லேற்றிய பாரம் வெல்லமா யிருந்தா லென்ன, வேப்ப முத்தா யிருந்தா லென்ன? இஃது உண்மையே யெனினும், ஒரு பேதமும் உண்டு : ‘பூச்சியே! உனக்கு உடல் நோகிறதா? ஐயோ பாவம்! வேது கொடுக்கிறேன்’ என்று நயமாய்ப் பேசிக் கொண்டே நசுக்குவோனைவிட, பூச்சியின் நோவைச் சிறிதும் கண்ணோடாது நசுக்குவோனாலே, நசுக்குறும் பூச்சி, விரைவில் நன்மையை அடையும். எவ்வாறெனில், முன்னவன் பேச்சுக்கு மயங்கித் தன்னை விடுவித்துக்கொள்ள முயலாது, பூச்சி, ஒருகால் பொறுமை செய்யலாம் ; பின்னவனிடமிருந்தோ எவ்வித உதவியையும் அனுதாபத்தையும் எதிர்பாராமையால், தன்வலி கொண்டு தானே விடுதலை பெறுமாறு, அது முயலு மன்றோ?

(44) மாண்டேகு :—45-வது வயதில் இவர் அகால மரணத்தை அடைந்தது விசனிக்கத் தக்கது. இந்தியாவுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று மனப்பூர்வமாய் முயன்ற மிகச் சிலரில் இவர் ஒருவர். அக் காரணத்தால் தன்னைத் தன் இனத்தார் இகழ்ந்து பழித்ததையும் பாராட்டாது, நியாய மறிந்து செய்யும் அவாவினரா யிருந்தார்.





இந்திய சுயராஜ்யம் ஒருவன் மனமுகந்து கொடுக்க வருவதொன்றன்றாயினும், இவர் அகால மரணம் இந்தியருக்கு வருத்தங் கொடுப்பதே.

(45) பம்பாய்க் கூட்டம் :—வங்காள அடக்கு முறையைக் கண்டிக்கவும் காங்கிரஸில் ஒற்றுமையை உண்டாக்கவும் கூடிய பல கட்சியார் கூட்டம், வாரத்துக் கொன்றாக இந்நாளிலே கூடும் மற்றக் கூட்டங்களைப் போலன்றி, ஏதோ நன்மை பயக்கலா மென்று தோன்றுகிறது. நாட்டின் பல பக்கங்களிலு மிருந்து நெடுந்தொலை வந்து கூடின தலைவர்கள், சூட்டோடு சூடாகக் காரியத்தை முடித்துக் கொள்ளாமல், டிசம்பர் காங்கிரஸும் தாண்டி, அடுத்த ஏப்பிரல் மாதத்தில் மீண்டும் கூடிப்பேசி ஒன்றுசேர்வதென்று தீர்மானித்தது, வியப்பே. உத்தியோக வேட்டையும் பட்டவேட்டையுமே குறிகளாக இதுகாறும் திரிந்த சில தேசபக்தர்களும், குட்டும் கை மோதிரக்கை யென்று இதுவரை அதை முத்தமிட்டு வந்தோரும், இப்பொழுது, ஒத்துழையாமையே ஏற்ற உபாயம் என்று கூறுவோரோடு சேரவேண்டி யிருப்பதே, இந்த ஆலசியத்தின் காரணம் போலும். செக்கடியும் தம்பூரும் ஒத்துச் சுருதி சேருமுன், இன்னும் என்ன என்ன நடக்குமோ, அறிவார் யார்?

(46) பெரியோரை வழிபடுதல் :—‘வழிபடல்’, ‘வழிபாடு’ என்னும் சொற்றொடர்களின் முதல் அர்த்தம், வழியிற் சேர்தல், வழியில் ஒழுகுதல் என்பதேயாம். எனவே, ‘திருவள்ளுவரை வழிபடுதல்’ என்றால், அவர் கூறிய வழியிலும் ஒழுகிய வழிபிலும் தான் ஒழுகுதல் என்பதாகும். இப் பொருள் வழக்கொழிந்து, வழிபடல்=கீழ்ப்படிதல், வணங்கல் என்று, அகராதியே பொருள் கூறுகின்றது. ஒரு பெரியோரின் சொற்படி, நெறிப்படி, தான் நடவாது, அவர் விம்பத்துக்குத் தூப தீப நைவேத்திய ஆராதனை செய்து பூசிப்பதால் மட்டும், என்ன பெரும்பேறு கிடைக்கக் கூடும்? இது தானோ ‘உலகத்தோடொட்ட ஒழுகல்?’ ‘விக்கிரக ஆராதனை, தக்க பரிபக்குவ மில்லார்க்கே ஏற்பட்டது, கீழ்த்தரமானது’ என்று, நம்ம பெரியோரே கூறுவதை ஏற்காதாரும் கூட, ‘நம்ம நாட்டிலே கோயில்களுக்குக் குறை வில்லை ; மிகப் பல கோயில்கள் தக்க பராமரிப்பின்றிப் பாழடைகின்றன’ என்பதை மறுக்கார். உண்மை இங்ஙனமிருக்க, ஒழுக்கத்தில் சீர்மையின்றி, நம் பெரி

யோர் கூறும் நீதிகளைக் கைப்பற்றாது, அவர்களுக்குக் கற்சிலையும் பொற்சிலையும் நட்டுக் கோயிலில் வைத்துக் கும்பிடுவது புண்ணிய மாகுமோ, புருஷார்த்த மாகுமோ? அல்லது, தற் புகழ்ச்சி வயத்ததே ஆகுமோ? திருவள்ளுவருக்கு மட்டும் ஒரு பழைய சிறிய கோயி லிருந்தது. அதைப் புதிப்பித்துப் பெருக்கி, வாசுகிக்கும் பிறர்க்கும், ஒரு தனவான் சில்லாண்டுகளுக்கு முன் கோயில் கட்டி வைத்தார். இக் கோயில்களில் 'வழிபாடு' (ஆராதனை) நடக்கின்றது; ஆயின் திருவள்ளுவர் திருக்குறளைப் படித்து, அதன்படி ஒழுகுவாரின், அதாவது திருவள்ளுவரை உண்மையில் வழிபடுவாரின் தொகை, அதிகப்பட்டிலது. திருவையாற்றிலே இருக்கும் தேவாலயங்கள் போதாமே, தியாகையருக்குப் புதிதாக ஒரு கோயில் அமைந்துவருகின்றதாம். அவர் கீர்த்தனங்களைப் பாடி, அவற்றின் பக்தி முறைப்படி ஒழுகுவாரின் தொகை பெருகிற் றில்லை. லண்டனில் ஒரு கோயில் கட்டப் போகிறார்களாம்; அஃது இன்னாருக் கென்று இன்னும் தெரிந்திலது. 'பாரத மாதா'வுக் கென்று ஒரு கோயில் கட்டப்பட்டு வருகிறதாம். அவள் உகப்பது கோயிலும் கும்பிடுமோ, பிறி தொன்றோ, கடவுள் அறிவார். கோயில்களால் ஒரு பயனு மில்லை யென்று நான் கூற வில்லை. நமக்குள்ள ஊக்கமும் ஆக்கமும் மிகக் குறைவே; பழைய கோயில்களோ மிகப்பல; அவற்றில் அநேகம் போதிய பொருட் செல்வத்தை யுடையன. அக்கோயில்களின் பராமரிப்பும் வருமானத்தின் விநியோகமுமோ, நகைப்புக்கிடமா யிருக்கின்றன. இங்ஙன மிருக்க, உள்ள சிறு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் புதிய கோயில்களைக் கட்டுவதில் செலவிடுவது, நன் மதியாகத் தோன்றிலது. திருவள்ளுவரும் தியாகையரும், தமது 'தொண்டர்கள்' என நடிப்பாரது ஒழுக்க சீலத்தையும், தம்மை அவர்கள் 'வழிபடும்' முறையையும், இன்று வந்து காண்பாராயின், மகிழ்ச்சியை அடையா ரென்பதும், வியப்பையும் விசனத்தையுமே அடைவாரென்பதும் துணிபு.

(47) S. S. L. C. பரீக்ஷை—மதுரை நகரத்தி லுள்ள "மதுரைக் கலாசாலை"த் தலைவரும், மற்ற நான்கு ஹைஸ்கூல்களின் தலையாசிரியர்களும், இந்தப் பரீக்ஷைக்குள்ளாகும் மாணவர்களை, இங்கிலீஷி லன்றி, அவரவர் தாய் மொழியிலேயே கேள்விகள் கேட்டு, விடைகள் எழுதும்படி அநுமதி யளித்துப் பரீக்ஷிக்க வேண்டுமென்று, 



பரீக்ஷாதிகாரியை வேண்டிக்கொண் டிருப்பது, யாவரும் மெச்சத் தக்கது. சென்னைமா நகரத்து ஆசிரியர்களும், பிற வூர்களி லுள்ளோரும், இவ்வாறே ஒழுகுவாராக. பரீக்ஷாதிகாரிகளுக்கும் சில மாணவர்களுக்கும் முதலில் இது சிறிது கஷ்டமாய்த் தோன்றினும், வித்தியாபி விர்த்திக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும், தாய்மொழி அபிவிர்த்தியானது இன்றி யமையாத மூல காரணமாகும்.

(48) குறள் நானூறு—(436-608ம் பக்கங்களைப் பார்க்க) இந்தப் புத்தக வேலை விரைந்து நடைபெறுகின்றது. என் பிரார்த்தனைக் கிணங்கி தம் மதிப்பில் சிறந்தனவாயும் பொது ஜனங்கள் படித்தற்கு எற்றன வாயு முள்ள குறள்களைக் குறித்தனுப்பிய பெரியோராகும் (1) ஸ்ரீமதி மங்களம்மாள் (லேடி சதாசிவையர்) (2) திவான்பகதூர் சரவண பவானந்தம் பிள்ளை—பண்டிதர் பத்மநாபையர் (3) Dr. A. J. அப்பாசாமி (4) ஸ்ரீலஸ்ரீ இலக்குமணப் போற்றிகள் (5) Dr. L. P. லார்ஸன்—பண்டிதர் G. S. துரைசாமி பிள்ளை (6) பண்டிதர் A. கோபாலையர் (7) Rev. H. A. பாப்புலி (8) ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் (9) Rev. F. கிங்ஸ்பெரி, இவர்களுக்கு என் வந்தனங்கள் உரியன. இவர்கள் அபிப்பிராயங்களோடு என் அபிப்பிராயத்தையும், பூவோடு நாராகச் சேர்த்து, மொத்தம் கிடைத்த அபிப்பிராயங்கள் பத்தாயின. முதல் மூவர், காமத்துப்பாலைப்பற்றி அபிப்பிராயம் கொடுத்திலர். அதனால், அறத்துப்பால் பொருட் பால்களுக்குப் பதின்மர் அபிப்பிராயங்களும், காமத்துப்பாலுக்கு மட்டும் எழுவர் அபிப்பிராயங்களும் கிடைத்தன. இவ் வபிப்பிராயங்களை ஆதாரமாகக் கொண்டு குறள்களைப் பொறுக்கப் புகுந்து, முதலிரண்டு பால்களில் ஐந்தேனும் ஐந்துக்கு மேலேனும் வோட்டுக் கிடைத்த பாக்களையும், காமத்துப்பாலில் நான்கேனும் நான்குக்கு மேலேனும் வோட்டுள்ள பாக்களையும், முதலிற் பொறுக்கி எண்ணியதில், 400 குறள்கள்கூடத் தேறவில்லை! 1130 பாக்களில், 400க்கும் குறைந்தவற்றையே பிரசுரிப்பது உசிதமாகத் தோன்றாததால், முறையே 5க்கும் 4க்கும் குறைவான வோட்டுக்களுள்ள சில பாக்களையும் பொறுக்கிச் சேர்த்து, மொத்தம் நானூறு குறள்களைத் திரட்டி, அக நானூறு, புற நானூறு, நாலடி நானூறு, என்பனபோல, குறள் நானூறு என்னும் பெயரோடு, இப்பதிப்பை வெளியிடத் துணிந்தேன். இந் நானூற்றிலுமே, "அகர முதல" என வரும் முதற் குறள் ஒன்று தான், 10 வோட்டுக்களும் பெற்றது என்பதைக்கேட்க, பலர் வியப்படைவர்; எஞ்சியன, பத்துக்குக் குறைந்த

வோட்டுக்களை பெற்றன. **Doctors differ**—புலவர் கொள்கை பல வகைத்து—என்னும் ஆங்கில வசனத்தின் மெய்ம்மையை, இது நன்கு விளக்கிவிட்டது. இந்நானூறு குறள்களுக்கும், எனது நண்பர் Rev. F. கிங்ஸ்பெரியும் நானும் சேர்ந்து, எளிய கருத்துரையும் அரும்பதவுரையும் எழுதி வருகின்றோம்; தவிர, தமிழின் தற்கால நிலைமையிலே, நாயனாரின் கருத்துக்களை எளிதில் அறிந்து கொள்ள, சிலதமிழர்க்கேனும் தமிழினும் இங்கிலீஷே பேருதவியாகும் என்பதைக் கருதியும், தமிழறியாதார்க்கும் பயன்படு மாறும், ஒவ்வொரு குறளுக்கும், இங்கிலீஷிலும் ஒரு சிறிய கருத்துரையை எழுதிவருகிறேன். பேரறிவாளர் பலர் கூடிப் பொறுக்கிய நானூறு குறள்களின் மூலம், அவற்றுக்கு எளிய தமிழ் நடையில் கருத்துரை, அரும்பதவுரை, ஆங்கிலச் சிற்றுரைகள், எல்லாவற்றையும் சேர்த்து, மேலங்கிப் பைக்குள் நுழையக் கூடியதும், நாலணா விலைக்கு மேலாகாததும், கண்ணுக்கு அழகியதுமான ஒரு சிறு நூலை, விரைவில் வெளியிடலா மென்றிருக்கிறேன். இவ்வாறு அச்சேறி வருவதை, அப்போதைக் கப்போது தயை செய்து படித்துப் பார்த்து, வேண்டிய திருத்தங்களைக் குறித்தனுப்பும் எனது நண்பர் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களது பேருதவியை என்றும் மறவேன்.

அ. மாதவையர்.

———: [ * ] :———


## The "Hindu Nesan"

( THE LEADING TAMIL WEEKLY. )

Commands a decent circulation-stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

### "இந்து நேசன்

வாரப்பதிப்பு-சந்தா விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ரூ. | 6 | 0 | 0 |
| 6-மாதத்திற்கு | ... | ,, | 3 | 8 | 0 |
| 3-மாதத்திற்கு | ... | ,, | 1 | 12 | 0 |

மலாய், மோரீஸ், நேட்டால், முதலிய வெளிநாடுகளுக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ,, | 10 | 0 | 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 | 2 | 0 |

*For particulars apply to:*

THE MANAGER THE "HINDU NESAN"

65, Armenian Street, MADRAS.


# தட்சிண சரித்திர வீரர்

**பைந்தமிழ் நாட்டுச் சரித்திரம் பகர்பல**
**விந்தைகள் வீரச் செயல்கள் மிளிர்கதை.**

## முன்னுரை

'இந்தியர் சரித்திரவுணர்ச்சி இல்லாதவர்' என்று, மேல் நாட்டார் ஏசுவர். இராச தரங்கணி, மொகலாய வரலாறு, மகாவம்சம், ஆந்திரராஜுலு சரித்திரம், மதுரைத்தல வரலாறுகள் போன்ற நூல்கள் சில, நமக்கும் சரித்திரவுணர்ச்சி உண்டென்பதைத் துலக்கும்; எனினும், மிகப் பல அரசுகள் ஒரே காலத்திலே ஆங்காங்கு தழைத்தோங்கிய பாரதகண்டத்தின் பெருமையையும் இத்தகைய நூல்களின் அருமையையும் தூக்கி நோக்கின், அவ் வசை முற்றிலுமே நமக்குப் பொருந்தாதென்று மறுக்க ஒண்ணாது. தலபுராணங்களில் பெரும்பாலன சரித்திர நிருமாணத்துக்குப் பயன் படுவன வல்ல; கோயிலொழுகு திருப்பணிமாலை போன்ற நூல்கள் அறக் குறுகிய நோக்கத்தோடு வரையப் பட்டன; கல்வெட்டுக்கள் செப்புப் பட்டயங்கள் ஆகியவோ, சரித்திர வுணர்ச்சியால் தூண்டப்பட்டன்றி, தற்புகழ்ச்சியேனும் சொத்துரிமை நன்கொடை உரிமைகளை நிலை நாட்டலேனும் நிமித்தமாகப் பொறிக்கப் பட்டனவாம். இக் குறையினால், நம் நாட்டிலே பல துறைகளில் புகழுற் றிலங்கிய பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளை இக்காலத்தில் எழுதப் புகுவார், தினசரி நடவடிக்கைகளின் விவரங்கள் கிடக்க, அன்னார் பிறந்த மணந்த இறந்த இடம் காலம் தேதிகள், பெற்றார் உற்றார் பெயர்கள், முதலிய முக்கிய விஷயங்களையுமே, ஏற்றத் தாழ்வான எல்லைகளுக்குள் ஒருவாறு பொருத்தியும், ஊக அனுமானங்களைக் கொண்டுமே, அறிந்து கொள்ள வேண்டியதா யிருக்கின்றது. ஆகையால், மலை யிலக்கான கால தேச வர்த்தமானங்களோடும் சரித்திர நிகழ்ச்சிகளோடும் மாறு படாது, தந்தை மகற் குரைக்கத் தலைமுறை தலைமுறையாக வரும் கதைகளையும் மதியூகத்தையும் மனோபாவத்தையுமே துணைக்கொண்டு தான், இத்தகைய வரலாறுகளை ஒருவாறு உருப்படுத்தி எழுதலாகும்.

இவ் வண்ணம் சரித்திரம் வனைவதில், நாம் நன்கறியாத பழக்க வழக்கங்கள் நடைபெறும் வேற்றுப் பிரதேசங்களில் விளங்கினோரைப் பாத்திரங்களாகக் கொள்வதினும், நமது நேர் முன்னோர் எனத் தகும் தென்னாட்டினரையே கொள்வது மிக்க பயனளித்து, படிப்பவர் மனத்தில் பழத்தில் ஊசி போல் இறங்கி வேரூன்றி, சரித்திர வுணர்ச்சியையும் நமது தொன்னிலையைப் பற்றிய அறிவையும் வளர்க்குமென்று கருதி, தென்னிந்திய சரித்திர வீரர் சிலர் வரலாறுகளை எழுதலானேன். பள்ளிப் பாடங்களாகும் சரித்திர நூல்களில் பரக்கக் காண்பனவற்றை மீண்டும் ஈண்டு எடுத்தோதுவது மிகையாமென்றெண்ணி, அவ்வித விவரங்களை நீக்கி, சாமானிய சரித்திரங்களில் காணக் கூடாதனவற்றையே பெரிதும் கையாண்டிருக்கிறேன். ஓர் எச்சரிக்கையும் உரைத்தற்குள்ளது: இக் கதைகளைக் கேவலம் மெய்யான சரித்திரக் கூற்றுக்களாகக் கொண்டுவிடுதல் பொருந்தாதென்பது, ஆதியில் கூறிய ஏதுக்களால் தேற்றம்; ஆயின், இவை, "பொய்யோடு இடை மிடைந்தன"வும் அல்ல; சரித்திர உண்மைகளும், அவற்றோடு முரணாத மெய்ப்போக்கான கட்டுரைகளும் விரவியனவே யாம்.

# 1. தளவாய் அரியநாத முதலியார்

## 1. பிறப்பு வளர்ப்பு

"பொன் எயிற் காஞ்சி" என்றும்,

"தேவர் கோமான் காவல்மா நகர்
மண்மிசைக் கிடந்தென, வளம் தலை மயங்கிய
பொன்னகர்"

என்றும், மணிமேகலையில் வருணித்திருப்பது, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, சோழராஜதானிகளில் ஒன்றாகக் காஞ்சிமாநகரம் பலவளம் செறிந்து விளங்கினமைக்குச் சான்றாகும். பண்டைக் காலத்திற் போலவே பிற்காலத்திலும், தொண்டைமான்களுக்கும் பல்லவ ராஜர்களுக்கும் அது தலைநகரா யிலங்கிற்று. இத்தகைய நீள் புகழ் வாய்ந்த காஞ்சிபுரத்தின் அருகே, மெய்ப்பேடு என்னும் ஊரிலே, ஏறத்தாழ இற்றைக்கு நானூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர், நம் கதா நாயகரான அரியநாயகர். இவர் பெயரை அரியநாத முதலியார் என்



றும் கூறுவர். இவர் தொண்டமண்டலச் சைவ வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இவரது தாய் தந்தையர் பெயர்கள் தெரிந்தில. இவர் மகன் பெயரைக்கொண்டு, இவர் தந்தையின் பெயர், ஒருகால் காளத்தியப்பர் என்றிருந்திருக்கலாமென்பது ஊகம். சுதேச மன்னர்களின் ஆட்சியிலே அமைச்சராயும் தளகர்த்தராயும் பணி பூண்டு, கோட்டை கொத்தளத் தலைமையும் இராச மரியாதை விருதுகளும் பெற்று, தொண்டமண்டல வேளாளர்களில் இருபத்து நான்கு குடும்பத்தார்கள் வாழ்ந்து வந்தனரென்றும், அந்தக் குடும்பங்களில் ஒன்றே இவர் பிறந்ததென்றும், கூறுவர் சிலர். அஃது எங்ஙன மாயினும், இவர் பிறக்கும் போது இவர் குடும்பத்தினர் ஏழைகளா யிருந்தது திண்ணம்; என்றேனும் இவர் குடும்பத்து முன்னோர் அடைந்திருக்கக் கூடிய புகழைவிட, ஒரு தானாகவே இவர் படைத்துக் கொண்ட சீரும் சீர்த்தியும் மிகச் சிறந்தன என்பதும் உறுதியே.

இவர் பிறந்த இறந்த ஆண்டுகள் நிச்சய மில்லை. கி. பி. 1495-க்குச் சில்லாண்டுகளுக் கேனும் முன்பு பிறந்து, 1595-க்குப் பிறகே இறந்தனர் என்னும் சரித்திர அனுமானக் கோட்பாடு, அசாத்திய மானது அன்றெனினும், அதிசய மாகவே தோன்றும். சிறு குழந்தையா யிருக்கும் பொழுது, ஒரு நாள், இவரைப் பாயிற் கிடத்திவிட்டு, இவர் அன்னையார் நீர் கொணரப் போயினர். அவர் நீர் மொண்டுகொண்டு திரும்பி வருங்கால், ஒரு பெரிய நாகம் இவரைச் சூழ்ந்து வளைந்து படமெடுத்து நின்றது. அதைக் கண்டு திகிலுற்ற தாயார் கூச்சலிட, ஒன்றும் செய்யாது பாம்பு அகன்று நீங்கிற்று. இந்தச் செய்தியைக் கேட்ட முதியோர், உலக வாழ்க்கையிலே அக்குழந்தை பெருஞ் சிறப்புற்று விளங்குவான் என்று கூறினராம். பாம்பினால் நிகழ்ந்த அற்புதத்தையும், பெரியோர் அதன் குறிப்பு இன்னதென்று கூறிய பெரும்பதவியையும் நினைந்து, அரியநாயகரின் தாய் தந்தையர், தம்மால் இயன்றமட்டும், தம் தகுதிக்கு மீறி முனைந்தும் கூட, தம் அருமை மகனைக் கல்வியிற் பயிற்றினர். சிறு பருவம் தொட்டே, கணித சாஸ்திரத்தில் அரிய பெரிய மூளைத்திறனை இவர் காட்டி வந்தார். இவரது கணிதச் சூழ்ச்சியும் நுண்ணறிவும், பூர்வ ஜன்ம வாசனை என்னும்படி, படித்து மறந்ததை மீண்டும் நினைவுறல் போல, யாவர்க்கும் வியப்பைத் தந்தன. இதுவன்றி, ஒத்த பருவத்துப் பிள்ளைகளுடன்

கூடி விளையாடுவதிலும், மற்போர் விற்போர்கள் செய்வதிலும், மிக்க உற்சாகத்தையும் திறமையையும் இவர் கொண்டிருந்தார்; தம்மிலும் வயது மிக்க வாலிபரைக் கூட, எளிதில் புறங்காட்டி வென்றுவிடுவர். மற்றெல்லோரினும் மிக்க வலிமையும் பயிற்சியும் உற்றிருந்ததுடன், உடல் வலிமையாலும் ஆயுதப் பயிற்சியாலும் முடித்தற் குரிய வீர சாகசச் செயல்களிலும் கூட, தன் கூரிய மதியையும் அரிய சூழ்ச்சியையும் இவர் பிரயோகப் படுத்தினதால், இவ்வண்ணம் பிறர் திகைப்புறும் படியான தீரச் செயல்களைச் செய்தல் இவர்க்கு எளிதா யிருந்தது.

ஊர்ப் புறம்பே யுள்ள மைதானத்திலே, ஒருநாள் மாலை, தன் தோழர்களுடன் இவர் விளையாடிக்கொண்டிருக்கையில், சோதிடம் ஆரூடம் இரேகை சாஸ்திரம் முதலிய வித்தைகளில் தேர்ந்த பிராமணர் ஒருவர், அவ்வழியே காஞ்சிபுரம் செல்பவர், இவர் சிலம்பப் பயிற்சியைக் கண்டு வியந்து, சிறுபொழுது பார்த்துக்கொண்டு நின்றனர். பிறகு, தாம் கண்ட காட்சியால் அகமகிழ்ந்தவராய், அவ் வாலிபர் குழுவை அணுகி, இவரை அழைத்து: "சிலம்பத்தில் உன் கைவண்ணம் கண்டேன்; உன் கை ரேகை வண்ணத்தையும் சிறிது பார்ப்போம், காட்டு" என்று வேண்டினர்.

தன்னினும் முதியோர் யாவரிடத்தும் ஒடுக்க வணக்கமும், விப்பிரர்களிடத்து விசேஷ மதிப்பும் எப்பொழுதும் கொண்டொழுகும் அரியநாயகர், பெரியவரை வணங்கி, முதலிற் சிறிது வெள்கி, பிறகு தன் கையைக் காட்டினர். இரேகை சாஸ்திர நிபுணர், நொடிக்கு நொடி வளர்ந்தோங்கும் ஆச்சரியத்துடன் அவர் கையை ஆராய்ந்து பார்த்துவிட்டு, முடிவில், அவரைப் பார்த்து: "நான் ஒன்று சொல்கிறேன், கேள்: இந்த உன் தோழர்களைப் போல் நீயும் ஒருவனன்று; மகோன்னதமான ராஜயோகம் உனக்கு இருக்கிறது; இந்தக் குக்கிராமத்தில் நீ ஏழையாய் வாழ்ந்து கழிவது சரி யன்று; கூடிய சீக்கிரத்தில் இவ்வூரைவிட்டு நீங்கி, மகாராஜாதிராஜ ராஜபரமேசுரரான ராயலுவின் ஸம்ஸ்தானத்தைப் போய்ச் சேர். உன்போல்வார்க்கு அதுதான் தகுந்த இடம். பிறகு, நான் சொன்னேனே பார்: ராஜாதிராஜனாகி நீ சோபிப்பாய். அந்தக் காலத்தில், நானாவது, என் மக்களில் யாராவது, உன்னிடம் வந்து, இப்பொழுது நான் சொல்வதை ஞாபக மூட்டிக் கேட்டால், உன் சம்பத்தில், நாலில் ஒரு பாகமாவது



கொடுப்பாயா? ஏழைப் பிராமணன் சொன்னானே, பிராமண வாக்குப் பலித்ததே என்ற நன்றி யிருக்குமா?" என்று கேட்டார்.

அரிய:—தாங்கள் சொல்வதுபோல் நடந்தால், ஒரு நாளும் நான் தங்களை மறக்கமாட்டேன். நானோ ஏழை,—

பிராமணர்:—எனக்கு அது தெரியும்; தற்சமயம், என்னையும்விட திராபை நீ என்பதை, நான் அறிவேன். ஆனால், என் சொற்படி ராயலுவாரு ஸம்ஸ்தானத்தை நீ அடைந்தால், கொஞ்ச காலத்துக்குப் பின், சுக்கிரன் வந்து ஏற்கும் போது, நீ ராஜபதவியை அடைவா யென்பதையும், நான் நிச்சயமாய் அறிவேன். ஆனால் அப்பொழுது, ஏழைப் பிராமணனை ஞாபக மிருக்குமோ என்பதுதான் சந்தேகம்.

அரிய:—ஸ்வாமி! தாங்கள் சந்தேகிப்பது கிரமம் தான்.

"அறன் நிரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறல் அருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்"

என்று, கவிச் சக்கரவர்த்தி கூறி யிருக்கிறார். பெரியோர் சுபாவமே அப்படி யிருக்க, என்னைப் போன்ற ஒரு சாமானிய சிறுவனைப்பற்றித் தாங்கள் சமுசயிப்பது தவறாகாது. எனினும், இதோ நிற்கும் இவ்வளவு பேர் முன்பாக, நான் தங்களுக்கு வாக்குக் கொடுக்கிறேன். என் தாய் தந்தையரின் அனுமதி பெற்று, தாங்கள் கூறிய வண்ணமே நான் விஜயநகரம் போகிறேன். அப்பால், தங்கள் ஆசீர்வாதத்தினாலும் என் அதிர்ஷ்டத்தினாலும் என் வறுமை நீங்கி, நான் செல்வவா னானால், என் ஐசுவரியத்தில் கால்வாசி தங்களுக்குக் கொடுப்பது உறுதி.

பிரா:—செல்வவானா? ராஜயோகம் என்கிறேனே! சரி: இந்த வீண் வாய்ப்பேச் செல்லாம் வேண்டாம்; உன் கைப்பட எழுதிக் கொடு.

அரிய:—அப்படியே ஆகட்டும்; தடை யில்லை.

இதைக் கேட்ட பிராமணர், எழுத்தாணியோடு கூடிய ஒரு சூரிக்கத்தியைத் தன் இடுப்பிலிருந்து எடுத்து, பக்கத்தில் கீழே காய்ந்து கிடந்த ஒரு பனையோலையை அதனால் சீவித் துண்டித்து, ஓலை நறுக்கையும் எழுத்தாணியையும் அவர் கையில் கொடுத்து, எழுதச் சொன்னார். பிரா

மணர் சொல்லிக்கொண்டுவர, அப்படியே, அவர், அன்றைய தினத்தையும் நடந்த விருத்தாந்தத்தையும் குறிப்பிட்டு, அந்த ஓலைச்சீட்டைப் பின்னால் எப்பொழுது தன்னிடம் யார் கொணர்ந்து காட்டினாலும், காட்டியவருக்கு அக்காலத்தில் தனக்குள்ள சம்பத்தில் கால்வாசி கொடுப்பதாக எழுதி, தன் கைச்சாத்து மிட்டுக் கொடுத்தார்.

அரிய:—சுவாமி! தாங்களும் சொன்னீர்கள், நானும் எழுதித் தந்தேனே: தங்கள் ஊர் பேர் ஒன்றும் குறிப்பிட வில்லையே?

பிரா:—அதனால் உனக் கென்ன? நான் யாரானால் என்ன? இந்தச் சீட்டைக் கொண்டுவந்து காட்டுபவருக்கு, நீ கொடுக்க வேண்டியது; அவ்வளவு தானே.

நடப்பதை யெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற வாலிபர்களில் என்பவன் ஒருவன்: "ஒருவேளை இன்று சொன்ன குறி பொய்யாய்ப் போனால், எல்லாரும் கேலி பண்ணுவார்க ளென்று சுவாமிகளுக்குப் பயம்போ லிருக்கிறது. அதுதான் ஊர் பேர் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்" என்று, பரிகாசம் செய்தான்.

பிரா:—அந்த சங்கதி பின்னால் பார்க்கலாமே.

வாலிபன்:—அதிருக்கட்டும், சுவாமிகளே! குறி பலியா விட்டால், அரிய நாயகத்துக்குத் தாங்கள் என்ன கொடுப்பீர்கள்?

பிரா:—நான் கொடுக்கிறதா! என் தரித்திரத்தில் கால்வாசி யில்லை, பாதி வேண்டுமானாலும், முழுதையுமே வேண்டினாலும் கொடுத்து விடுகிறேன். வேறு நான் என்ன கொடுக்கக் கூடும்? இந்த விவாதமும் சங்கையும் வீணே: குறி பலிக்கவே செய்யும். நான் போய்வருகிறேன். வாக்கைமட்டும் மறந்துவிடாதே" என்று சொல்லி, ஓலைச்சீட்டைப் பத்திரமாய் இடுப்பு வேஷ்டியில் மூன்று தரம் சுருட்டித் தெறித்துக்கொண்டு, போய்விட்டார்.

அவர் சென்றபின், அரிய நாயகரின் தோழர்கள், அவரை "ராஜாதிராஜன்!" என்றும், அவர் சக்ராதிபத்தியத்தில் தங்களுக்குள் ஒவ்வொருவருக்கும் என்ன என்ன உத்தியோகம் வேண்டு மென்றும் கூறி, பரிகாசம் செய்யலாயினர்.



## 2. இராஜ சேவை

தற்காலத்து மைசூர் இராஜ்யமும் தென்கன்னடம் வடகன்னடம் ஜில்லாக்களும் சேர்ந்த பிரதேசத்தின் பெரும்பாகம், முற் காலத்தில் கடம்பர் இராஜ்யமாக விருந்தது; கடம்ப மன்னர்கள், ஆதி தொட்டு கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரை வணங்கா முடியினராயும், அது முதல் சாளுக்கிய அரசர்களுக்கு உட்பட்டவராயும், ஆண்டு வந்தனர்; வானவாசி என்னும் வைஜயந்தி நகரம், அவர் இராஜதானியா யிருந்தது; கடம்ப வேந்தர் குலத்து ஹரிஹரன் என்பவன், கி. பி. 1329-ம் ஆண்டில், துங்கபத்திரை நதிக்கரையிலே ஆனகுந்தி வித்யாரண்ய நகரத்தைத் தன் இருப்பிடமாய்க் கொண்டு, ஒரு புதிய தனி ராஜ்யத்தை ஸ்தாபித்தான்; கடம்பர் மரபினனை அவன் முளைப்பித்த இராஜ்யமே, பின்பு விஜயநகர ஸம்ஸ்தான மாகத் தழைத்தோங்கியது என்பது, சிலர் கூற்று. விஜயநகர அதிபதிக ளான கர்னாடக—தெலுங்க அரசர்கள், இராயர், இராயலு என்னும் பட்டத்தை வைத்துக்கொண்டனர். இவ்வரசர்களில் புகழ் மிக்க கிருஷ்ணதேவராயர், கி. பி. 1509-ல் பட்டத்துக்கு வந்து, தன் அரசாட்சியை நாலா பக்கமும் பெருகச் செய்து, தமிழ் நாட்டு மூவேந்தருக்கும் வடநாட்டில் பல வேந்தருக்கும் சக்கரவர்த்தியாய் விளங்கினார். அவர் காலம் தொட்டு, அவர் ஆண்ட இராஜ்யத்துக்கு நரபதி ராஜ்யம் என்றும், அவர் தலைநகரான ஆனகுந்தி—வித்யாரண்ய நகரத்துக்கு விஜயநகரம் என்றும், பேர் வழங்கலாயின. கிருஷ்ணதேவ ராயர் ஆட்சியிலே, விஜயநகர ஸம்ஸ்தானம் என்னும் நரபதி ராஜ்யமானது, தனக் குட்பட்ட மண்டலங்களை மேற்பார்க்கும் இராஜப் பிரதிநிதிகளான வெவ்வேறு மண்டலேசுரர்களும்; அவர்களின் கீழ், அந்த அந்தச் சிற்றரசுகளை கண் காணிக்கும் கர்த்தாக்கள் அல்லது துரைகள் என்னும் அதிகாரிகளும்; அவர்களுக்கும் கீழாக, தத்தமக் குரிய நாடுகளை யாளும் புராதன ராஜ வமிசங்களைச் சேர்ந்த வேந்தர்களும்; இவர்கள் அனைவருக்கு மேலாக ஸம்ஸ்தானாதிபதியான மகா ராஜாதி ராஜ பரமேசுரப் பட்டம் வகிக்கும் மகா ராயருமாக, தமிழ் மூவேந்தரது சேர சோழ பாண்டிய நாடுகளையும், மத்யப் பிரதேசங்களையும், வடக்கே சில அரசுகளையும் உள்ளடக்கி, ஒரு பெரிய சக்கிராதிபத்தியமாய் விளங்கிற்று.

இந்த நாளிலே, விஜயநகரம் என்னும் பெயரே வழக்கொழிந்து போயிற்று. நாகரிக முற்றிருந்தும், மதத்துவேஷத்தாலும் வெற்றி வெறியினாலும் மதிமயங்கிய மூர்க்கர்கள், ஐந்தாறு மாதங்களாகத் தீயினால் பொசுக்கியும், வெடிமருந்துகளால் பிளந்து தகர்த்தும், மண் வெட்டி குந்தாலி கடப்பாரை கோடாலிகளால் வெட்டி யுடைத்தும், தம்மால் இயன்ற மட்டும் நாசஞ் செய்த அழிப்புக்கும் கெட்டொழியாது தப்பி யுள்ள ஒரு சில கற்பணி மாளிகைகள் கோயில்களின் சிதைவு பட்ட குறை முண்டங்களுங்கூட, வெற்றிப் பெயரை வெள்கி வெறுத்தனவாய், ஹம்பி என்னும் குக்கிராமப் பெயரால் வழங்கு கின்றன. தேவ மாதர்களினும் ரூபவதிகளான காந்தா மணிகளின் ஆடல் பாடல்களையும்; வேத சாஸ்திர பண்டித சிரோமணிகளின் மூளை விருந்தாம் வாதுரைகளையும்; தூரதேச ராஜ்யங்களிலிருந்து நேயமுற நாடிவந்த தூதசிகாமணிகள் ஓதுரைகளையும்; கைவல்ல கம்மியரும் பொய் வல்ல தந்திரிகளும் தமது தமது வினைத்திறன்களை வியப்புறக் காட்டும் அருங்கலை விநோதங்களையும்; மாமண்ட லீசுர்களும் பிரதானிகளும் சேனாபதிகளும் கர்த்தாக்களும், அவரவர் ஆதிக்கத்துக் குட்பட்ட காரியங்களிலே, அற்றம் நோக்கித் திருச்சித்தத்தைத் தெரிந்து சிரமேற்கும் குறிக்கொண்டு கூறும் அறிக்கைகளையும்; வட கலிங்கத்திலிருந்து தென் குமரி வரையும் மேல மலையிலிருந்து கீழ அலைவரையு முள்ள பலப்பல நாடுகளை ஆளும் சிற்றரசர்கள் வந்து குழுமி,

"இடை பார்த்துத் திறை நீட்டி, இறைவர் திருப் புருவத்தின்
கடைபார்த்துத் தலை வணங்கி,"

தத்தம் குறைபாடுகளை விண்ணப்பம் செய்யும் முறையீடுகளையும்; இவைகளின் இடையிடையே, தன் செல்வப் புதல்விகளாம் திருமலாம்பாள் வேங்கலாம்பாள்களின் குமாரரும் தன் அருமைப் பேரப் பிள்ளைகளுமான ரெங்கன் ரெகுநாதன் என்னும் "குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்களின் பால்வாய்ச் சிறுகுதலை" களையும்; நவரத்னமயமாய்ச் சோபிக்கும் தங்கச் சிங்காதனத்தின் மீது இலங்கேசனையே போற் கொலுவீற் றிருந்து, மகாராஜாதிராஜ ராஜபரமேசுவர நரபதி கிருஷ்ணதேவ மகாராயர் திருக்கண் சார்த்தித் திருச்செவி யேற்றருளிய சதுரங்க சேனா சமுத்திரத்தால் சூழப்பட்ட ஆஸ்தான மண்டபத்திலே, வெளவால்கள் ஊசல[illegible], நரிகள் [illegible]ளையிட, கூகைகள் குழற, ஆந்தைகள் [illegible]லற, பாம்புகள் சீ[illegible] பல்லிகள்



குறிகூற, சிலந்திகள் சித்திரவினை காட்ட, குழவிகள் ஆடியோடி ரீங்காரஞ்செய்ய, புலிகள் புறங்காக்க, பாழ் என்னும் பரதேவதையே இன்று கொலு வீற்றிருக்கின்றாள்!



விஜயநகரம்-ஒரு கோட்டை வாசல்

அந்த நாளிலோ, அம்மம்ம! அந்நகரத்துக்கு அமராவதியுமே நிகராவ தன்று. பதினைந்தாவது நூற்றாண்டிலே விஜயநகரை வந்த[illegible] [illegible]கோலோ என்னும் இத்தாலியர் க[illegible]ட காட்சியைச் சி[illegible] கூறுவாம்: துங்கபத்திரையா[illegible]றின் வடகரையில் ஆ[illegible]ந்திக் கோட்டையும் பட்

டணமும், தென்கரையில் விஜயநகரமும் இருந்தன. அந்தப் பிரதேசத்தில் குன்றுகளும் பாறைகளும் அதிகம். நகரத்தைக் காக்கும் கல் மதிற் சுவர்கள், குன்று பாறைகளுடன் இணைந்து சூழ, விஜயநகரத்தின் சுற்றளவு, மொத்தம் அறுபது மைலுக்குக் குறைவில்லை. இந்த மாபெரும் எல்லைக்குள், பளிக்குக் கற்களால் கட்டப்பட்ட கால்வாய்கள் எங்கும் பரந்தோடி, செந்நெல்லும் கரும்பும் செறிந்த புலங்களையும் பூங்காவனங்களையும் செழித்தோங்கச் செய்தன. பூ வைசியர்கள் கைத்தொழி லாளிகளின் வீடுகள், ஆங்காங்கு வேண்டியபடி அமைந்திருந்தன. வர்த்தகர், பிரபுக்களின் மாளிகைகள் மலிந்து விளங்கின. இடையிடையே, சிற்ப சிரேஷ்டம் வாய்ந்த கோயில்களும் கோபுரங்களும் நிமிர்ந்தோங்கி நின்று, காண்பவரைப் பிரமிக்கச் செய்தன. எண்ண முடியாத ஆவணங்களும் வீதிகளும், அகன்றவாய் நெடியவாய் அமைந்து, செல்வம் ததும்பித் திகழ்ந்தன. இவை யாவும் புடைசூழ நடு நாயகம்போ லிலங்கிய அரமனையின் அரியபெரிய அழகுகளையும் சிறப்புக்களையும் யாவரே கூற வல்லார்? கூறித்தான் என்ன பயன்? ஸம்ஸ்தானத்துச் சைனியங்களின் தொகை மட்டுமே பதினொரு லக்ஷம் என்ப; ஆனை குதிரைகள், பல்லாயிரக் கணக்கினவாம். நகரமாக்கள், பல லக்ஷம்பேர் என்று மட்டுமே கூறலாகும்; அதனினும் துல்லியமாய்க் கூற வொண்ணாது. “எங்கே பார்த்தாலும் ரோஜா புஷ்பங்கள் விற்கப்படுகின்றன. இந்த ஜனங்கள் ரோஜா வின்றி வாழார் போலும்; ஆகாரத் தளவு அவசியமாகவே ரோஜாவையும் கருதுகின்றனர். நகை வியாபாரிகள், முத்துக்கள், கெம்புகள், மரகதங்கள், வைரங்களைப் பகிரங்கமாய்க் கடைகளில் விற்கின்றனர்” என்று, பாரசீக ராஜரிடமிருந்து தூதுவந்த ஒருவர், எழுதியிருக்கிறா ரெனின், அந்த நகரத்தின் நாகரிகத்தையும் செல்வப்பெருக்கையும் என்னென்று எடுத்துரைப்பது!

(தொடரும்)